Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.


பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை


# அமெரிக்க அன்னை கூடன் மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்



பெருங்கவிக்கோ
வா.மு.சேதுராமன்







# அமெரிக்க அன்னை
# கூசுடன் மீனாட்சி அம்மை

# பிள்ளைத் தமிழ்

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்

**கவியரசன் பதிப்பகம்**
12, சாயி நகர் இணைப்பு
சென்னை - 600 092
தொலைபேசி: 4871375

## நூல் விவரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூல் உருவாக்கம் | : | **வா.மு.சே. திருவள்ளுவர்** |
| விலை | : | **உரூபா. 45/-** |

### நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அமெரிக்க அன்னை கூசுடன் மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் |
| நூலாசிரியர் | : | **பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்** |
| நூல் வகை | : | கவிதை |
| நூல் உரிமை | : | ஆசிரியருக்கே |
| வெளியீடு | : | முதற்பதிப்பு : 1999 |
| நூல் அளவு | : | 1 x 8 டெம்மி |
| பக்கங்கள் | : | 199 |
| தாள் | : | 13.6 கி.கி. வெள்ளைத்தாள் |
| வெளியீடு | : | கவியரசன் பதிப்பகம்<br>12, சாயி நகர் இணைப்பு, சென்னை - 92<br>தொலைபேசி : 4871375 |
| ஒளி அச்சுக் கோர்ப்பு | : | ஃபாண்ட்ஸ் கணினியச்சு கலையகம்,<br>276, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,<br>சென்னை-5. தொலைபேசி: 5974836 |
| கிடைக்குமிடம் | : | தமிழ்மணி புத்தகப் பண்ணை<br>281, காயிதேமில்லத் சாலை,<br>சென்னை - 600 005.<br>தொலைபேசி: 8552237 |
| அச்சும் அமைப்பும் | : | சேதுமதி அச்சகம்<br>சென்னை - 600 092 |




தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
மாண்புமிகு முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்** அவர்களின்

## வாழ்த்துரை!

தொல்காப்பியர் காலத்திலேயே ஒரு நிலத்திற்கான கருப்பொருள்களில் பலவற்றைக் குறிப்பிட்டாலும், ஒவ்வொரு நிலத்திலுமுள்ள மக்கள் வழிபடுகின்ற தெய்வத்தின் பெயரையும் மறவாமல் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த வகையில் முருகன், மாயோனாகிய திருமால், இந்திரன், வருணன், கொற்றவை போன்ற தெய்வங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. காலப்போக்கில் சைவம், வைணவம் என்று இரு பிரிவாகிச் சமயப்பணிகள் நடைபெற்றன. இவற்றிற்கிடையே மோதல் உருவாகிய காலம் என்று ஒன்றிருந்தாலும் தற்போது அவை 'இந்து சமயம்' எனும் ஒரு தலைப்புக்குள் இணக்கத்தோடு இணைந்துள்ளன. அந்த வகையில் தமிழ் நாட்டிலுள்ள திருக் கோயில்கள் அனைத்தும் வேறுபாடுகளின்றிப் பேணப்படுகின்றன.

மதுரையிலுள்ள மீனாட்சியம்மன் கோயில் தொன்மைச் சிறப்புடையது. அருள்மிகு மீனாட்சியம்மன் மீது பற்றுக்கொண்டு, அமெரிக்காவின் கூசுடன் மாநகரிலுள்ள தோழர்கள் அனைவரும் அங்கு ஒரு மீனாட்சி அம்மை கோயிலை நிறுவியுள்ளனர். ஏற்கனவே மதுரை மீனாட்சியம்மனுக்கு அருமையான மீனாட்சி அம்மை -

பிள்ளைத் தமிழ் ஒன்று உண்டு. அதனை மனத்திற்கொண்டும் குமரகுருபரர் காட்டிய வழியிலும் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் இப்போது **'அமெரிக்க அன்னை கூசுடன் மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்'** எனும் நூலை வழங்கியுள்ளார். பொதுவாகவே பிள்ளைத்தமிழ் பாடுவதற்குப் பெரும் திறமை வேண்டும். அதிலும் அம்புலிப் பருவத்தைப் பாடுவதற்கு ஆற்றல் மிகவும் வேண்டும். இந்நிலையில் வா.மு.சேதுராமன் அவர்கள் மிக அருமையான கவிதைகளை இயற்றிச் சிறப்புச் சேர்த்திருக்கிறார். ''பிள்ளைத்தமிழ்'' வரிசையில் இந்நூல் சிறப்பான பாராட்டுக்குரியதாக அமைந்துள்ளது. என்னுடைய வாழ்த்துக்கள்.

*அன்புடன்,*

**(ஒ.ம்.) மு. தமிழ்க்குடிமகன்**

தி.பி.2031 தை 3
*தலைமைச் செயலகம், சென்னை*



# Forward

Greetings, It was said that a major temple for Goodess will be consegrated in southern part of North America. It became reality when SRI MEENAKSHI TEMPLE SOCIETY was registered in October 1977 in HARRIS COUNTRY, TEXAS, USA.

A beautiful GANESH TEMPLE was built in August 1979. Temple for MEENAKSHI, SUNDARESWARAR AND VENKATESWARA was consegrated in June 1982. RAJAGOPURAM and outer prakaram temples were built in July 1995.

Collection of 100 songs on MEENAKASHI known as PILLAI TAMIL is presented in this book by Poet - laureate Dr. VA.MU. SETHURAMAN. Stages in life from childhood to elderly is covered here. We belive that these poems will make thousands of devotees happy. We place these poems at the feet of Almighty and pray for peace for all prosperity for all living things.

Sincerely

(Sd) **SOCKALINGAM KANNAPPAN**
Chairman of the Board

அருட்செல்வர் டாக்டர் **நா. மகாலிங்கம்** அவர்களின்

# அணிந்துரை

ஹூஸ்டனில் அன்னை மீனாட்சிக்கு அருமையான கோயில் எழுப்பியிருக்கிறார்கள். அங்கு வாழ்கின்ற தமிழன்பர்கள்.

உலகில் எங்குச் சென்று தங்கியிருந்தாலும் தாயகத்தையும் தாயகப் பண்பாட்டையும் மறவாத அவர்கள் நெஞ்சம் போற்றுதற் குரியது.

ஆலமரத்தின் விழுதுகள் தாம் மூலமரத்துக்கு ஆதாரமாக விளங்குகின்றன. தாயகத்தில் வாழ்கின்ற மக்களைவிட ஒரு படி மேலே சென்று நமது தர்மத்தையும் பண்பாட்டையும் போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள்.

அன்னை மீனாட்சி தமிழ் மதுரையில் கோயில் கொண்டிருக்கிறாள். அவள் கண்கள் மீனைப்போன்று அழகியவை என்பதனால் மீனாட்சி என்று பெயர் பெற்றாள் என்று கூறுவார்கள்.

மீன் தன் சினைகளைத் தன் பார்வையாலேயே காப்பாற்றி வருமாம். ஆமை தன் கரையில் ஈன்று புதைத்துள்ள சினைகளை நினைப்பதாலேயே அவைகள் முதிர்ந்து குஞ்சுகள் ஆகுமாம். கோழி முதலியவை தம் ஸ்பரிசத்தால் (அடைகாப்பதால்) அவற்றின் சினைகள் முதிர்கின்றன.

இவைகளை முறையே கடவுள் ஞானாசிரியனாக எழுந்தருளி ஸ்பரிச தீட்சை மானச தீட்சை, அட்சு தீட்சை செய்வதற்கு உரிமையாகப் பெரியோர்கள் சொல்வார்கள்.

அம்பிகை எப்போதும் தன் மக்களைக் கண்பார்வையில் வைத்துக் காப்பாற்றுகிறாள்.

அவள் கடைக்கண்கள் தனம் தரும், கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா மனம் தரும் தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சமில்லா இனந்தரும், நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே, என்று அடியார்கள் பாடவில்லையா?



தமிழகத்தின் எல்லைக்கப்பாலும் தனது கடைக்கண் பார்வையைச் செலுத்திக் காப்பாற்றும் அன்னை மீனாட்சியை அமெரிக்க நாட்டில் ஹூஸ்டினில் தரிசித்து மகிழ்ந்திருக்கிறேன்.

குமரகுருபரர் தமிழ் மதுரை மீனாட்சியைப் பிள்ளைத் தமிழால் பாடியிருக்கிறார். அவர் பாடலைக் கேட்ட அம்பிகை அர்ச்சகர் மகள் வடிவில் வந்து மன்னர் திருமலை நாயக்கர் மடியில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள். 'தொடுக்கும் கடவுள்' என்ற பாடலைக் கேட்டு மகிழ்ந்து மன்னர் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றிக் குமரகுருபரர் கழுத்தில் அணிந்து மறைந்துவிட்டாள்.

அன்னை மீனாட்சி தமிழுக்கு முக்தி அருள்பவள். அவளைப் பாடாத புலவரில்லை.

இன்னும் எல்லாரும் தன்னைத் தமிழால் பாடவேண்டும் என்று ஆதுரமிக்கவளாய் அன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் உலகம் சுற்றிய அறிஞர், அவரைப் பொறுத்தவரை யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது மிகமிக உண்மை.

பேச்செல்லாம் பாட்டாக வடிக்கக் கூடிய திறம் வாய்ந்தவர். ஆன்மீக நாட்டம் உடைய கவிஞர். அவர்க்கு எனது வாழ்த்துக்கள்.

ஹூஸ்டன் கோயில் அன்னை மீனாட்சிக்குப் பிள்ளைத் தமிழ் பாடியிருக்கிறார். பழமைப் பண்புகளோடு காலத்துக்கேற்ற புதுமைகளையும் அவர் பாட்டில் பார்க்கிறோம்.

ஹூஸ்டன மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் வெளிவந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. அம்மையின் அன்படியவர்களுக்கு நல்விருந்தாக அமையுமென்பது என் நம்பிக்கை. அழகுற வெளியிட்டுள்ள ஸ்ரீ மீனாட்சி ஆலய நிருவாகத்துக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

**நா. மகாலிங்கம்**

சென்னை
29-12-99

அன்பன்

மீனாட்சி மைந்தர் **வி.என். சிதம்பரம்** அவர்களின்

## வாழ்த்துரை

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களின் கம்பீரத் தோற்றத்தைப் போல் இவரின் இந்த படைப்பில் தமிழும் தலைநிமிர்ந்து நிற்கிறது.

அவரின் குழந்தை உள்ளத்தைப் போல் அன்னை மீனாட்சியையும் மழலையாய் வடித்திருக்கிறார்.

பிள்ளைத்தமிழுக்கு வேண்டிய இலக்கணத்தை காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்று பத்துப் பருவங்கள் சொல்வார்கள். இந்த பத்து பருவங்களோடு இவரின் பேனா தமிழோடு விளையாடியிருக்கிறது.

பிள்ளைத்தமிழை எத்தனையோ புலவர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், கையாண்டிருந்தாலும், குமரகுருபரர் எழுதிய மீனாட்சி பிள்ளைத்தமிழே சிறந்தது என தமிழறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு பாராட்டுப் பெற்றது.

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களின் இன்னொரு குமரகுருபரராய் அன்னை மீனாட்சிக்கு அணி சேர்த்திருக்கிறார்.

நியுயார்க் பிள்ளையார் வணங்கித் தொழுதுவிட்டு அமெரிக்க அன்னை கூசுடன் மீனாட்சி அம்மைக்கு பிள்ளைத்தமிழால் பாமாலை சூட்டியிருக்கிறார்.

ஏசு, அல்லா, புத்தர் என வேற்று மத ஆண்டவர்களையும் பிள்ளைத் தமிழில் பாடியிருப்பது ஒரு வரலாற்றுப் புதுமை.

அண்டங்கள் முற்றிலும் ஆளுமை கண்ட பெரும்
ஆசையை அணுத்திட்ட ஞானி புத்தர்
அகிலமெல்லாம் புகழ் தியாகத்தின் இருப்பிடம்
அடர்சிலுவைக் குருதிவடி ஏசுபெம்மான்
கண்டங்கள் ஓரிறை ஒரே குலம் என்ற நிலை
கண்ட நபிநாயகம் சல்லல்லா....
கருதிநலம் வைத்துலகம் பெருகுநலம் ஆகவே....
கவிமனத்தால் அஞ்சலிகள் செய்வோம்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்கிற அவரின் உள்ளொளி கண்டு மனிதம் இவ்வுலகில் இனிவாழும் என்ற நம்பிக்கைக்கு வலிமை சேர்த்திருக்கிறார்.

தமிழின் சந்தங்களோடு, பாடியிருக்கும் மரபுகள்மீறாத இந்தப் பிள்ளைத் தமிழ் அமெரிக்கத் தமிழர்கள் மதத்திரமல்ல அகில உலகத்திலிருக்கும் தமிழர்களும் அன்னை மீனாட்சி பிள்ளைத் தமிழைப் படித்து பக்தியில் பரவசம் கொள்வது நிச்சயம்.

தமிழுக்கு இது பாமாலை|- அன்னை
மீனாட்சிக்கு இது ஒரு புகழ்மாலை....

வாழ்த்துக்களோடு....
**வி.என்.சிதம்பரம்**



## அமெரிக்க சா. இராசரத்தினப் பட்டர்

# அணிந்துரை

பிள்ளைத்தமிழின் சிறப்பைப் பற்றி கூறவேண்டுமானால், அது காலத்தொடு கற்பனை கடந்தது. பயபக்தி என வழக்கில் கூறுவார்கள். அது தவறு. பயமில்லாத பக்தி சிறந்தது என்பதற்கு உதாரணம் பிள்ளைத்தமிழாகும்.

எப்படி ஒரு குழந்தையின் ஒவ்வொரு பருவங்களையும் பார்த்துக் களிப்போமோ அதேபோல அன்புடன் தாலாட்டுப் பருவம், செங்கீரைப் பருவம் வருகைப்பருவம் அம்மானைப் பருவம் என அன்புடன் துதி செய்ய அமைந்ததே பிள்ளைத் தமிழாகும். பலபிள்ளைத் தமிழ்ப்பாடல் இருப்பினும். குமர குருபரசுவாமிகளால் இயற்றிய மீனாக்ஷிஅம்மன் பிள்ளைத் தமிழ்மிக மிகச் சிறந்ததாகும். காரணம் சில நூற்றாண்டுகட்கு முன் திருமலை மன்னன் முன்பு மதுரையில் அன்னை மீனாக்ஷியம்மன் சன்னதியில் ஆறு கால் பீடத்தில் பிள்ளைத் தமிழ் விளக்க உரை நடைபெற்ற சமயம் திருமலை மன்னன் மடியில் ஓர் பெண் குழந்தை தலையாட்டி ரசித்துக்கொண்டிருந்தது. **''நறை பழுத்த துறை தீந் தமிழினுறுஞ்சுவையே''** என்ற வரிகளைப் பாடிவிளக்கும் சமயம் அந்தப் பெண் குழந்தை பிரமாதம், பிரமாதம் எனக்கூறி ஓர் முத்துமாலையை, பரிசாக அவரது கழுத்தில் அணிவித்து அக்குழந்தை கருவறை சென்று மறைந்தது. அன்னைமீனாக்ஷியே பிள்ளைத்தமிழைக் கேட்டு மகிழ்ந்துள்ளாள் என்றால் அதற்கு ஈடு இணை ஏது?

குமர குருபரஸ்வாமிகளால் பாடிய பிள்ளைத்தமிழைக் கேட்டுமகிழ்ந்த அன்னை மீனாக்ஷி, 1982இல் அமெரிக்க நாட்டில் டெக்ஸாஸ் நகரில் பியர்லேண்ட் எனும் இடத்தில் கோயில்

கொண்டு பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றாள், அமெரிக்கமண்ணில் கோயில் கொண்ட, அன்னைதன், சிறப்பைப் பிள்ளைத்தமிழில் பாடிக்கேட்க விரும்பி அதற்கென திரு **பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்** அவர்களைத் தேர்ந்தெடுத்து அவரது உள்ளத்தில் விதைத்து அதன் மூலம் உருவாகிய ஹூஸ்டன் மீனாக்ஷிபிள்ளைத்தமிழ் பற்றி சிந்திப்போம். வருகைப்பருவத்தில் இரண்டாவது பாடலில் பிருங்கி மாமுனியின் ஆணவத்தை அடக்கியது பற்றி குறிப் பிட்டு, தவறு செய்பவர் தவறினை உணர்ந்து திருந்துவதற்கு வழிகாட்டுபவளாக அமைத்தும் சப்பாணிப்பருவத்தில் முதல் பாடலில் பருவநிலை காரணமாக இலையின்றி மொட்டை யாகவுள்ள மரங்களைப் பிறர் மனம் நோகச் செய்பவர்கள் இதேபோல் மொட்டையாகி விடுவீர்கள் எனக்கூறுவதுபோல் அமைத்துள்ளதும் முப்புரம் எரித்த வகையை குறிப்பிட்டுள்ள தும் பெருங்கவிக்கோவின் ஆற்றலை நன்கு உணர்த்துகிறது. அமெரிக்க நாட்டின் ஒவ்வொரு சிறப்பினையும் அனைவரும் புரிந்துகொள்ளுமளவு அழகுபட அமைத்துள்ள ஹூஸ்டன் மீனாக்ஷி பிள்ளைத்தமிழ் அனைவரும் படித்து - துதித்து பயனடையச் சிறந்தநூலாகும் இவ்வரிய சிறந்த பிள்ளைத் தமிழை நமக்களித்த **பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்** அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வளமுடன் வாழ்ந்து தூய தமிழ்ப்பணி செய்ய அங்கயற்கண் அம்மையின் திருத்தாள் பணிந்து பல்லாண்டு பல்லாண்டு வாழ வாழ்த்தித் துதிக்கிறேன்.

இங்ஙனம்

**சா. ராஜரெத்தின பட்டர்**
Priest Emeritus, Sri Meenakshi Temple
4008 Fernwood Drive
Pealand, TX-77584
Phone : (281)4890463



## மூதறிஞர் முனைவர் தமிழண்ணல் அவர்களின் அணிந்துரை

ஹூஸ்டன் எனப்படும் அமெரிக்கத் தென்பகுதிப் பெருநகர் ஒன்றில், நம் அங்கயற்கண்ணியாம் மீனாட்சி கொலுவீற்றிருக்கும் கோயில் ஒன்றுஅமைந்திருப்பது தமிழர்தம் பெருமைக்கு அடை யாளமாகும்.

அங்குச்சென்று அக் கோயிலில் என்துணைவியாருடன்வழிபட்ட பொழுது திரு.சா. இராசரத்தினப் பட்டரவர்கள் தமிழிலேயே அருச்சனை செய்து, வாழ்த்தியமை என் நினைவிலுளது.

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள், உலகளாவிய பெரும் மாநாடுகள் தொடங்கி, இன்றைய தமிழகக் கவி அரங்கு களையும் அணி செய்யும் மாபெரும் கவிஞர் ஆவார். அவர் வாய் திறந்தால், கவிதைகளே வெளிவரும் என்ற அளவுக்குக் கவிமழை பொழிந்து வருபவர். தமிழில் மரபுக் கவிதையைப் போற்றிவரும் மிகச்சிலரில், தனிச்சிறப்புடையவர் இவர். இவரது கவிவளம் உலக நாடுகள் பலவும் அறிந்து, போற்றப் பெற்ற பெருமையுடையது.

பிள்ளைத்தமிழ் தமிழ்ச் சிற்றிலக்கிய வரலாற்றில், முதன்மை இடம் பெறுவது.

இம் மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் குமரகுருபரரைப் பின் பற்றி, மதுரை அருள்மிகு மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் தொடர்ச்சியாய், அதைப் போல, அன்னையின் அருளைச் சிறப்பிக் கின்றது. 'ஹூஸ்டன்' நகரக் கோயிலின் வரலாறு முழுமையும் இதனுள் கூறுப்பட்டுள்ளது நாட்டரசன் கோட்டை கண்ணப்பன் அவர்கள் செய்த முயற்சி தொடங்கி அங்குள்ள பக்திமிக்க மக்களனைவரும் கூடி, இம் மாபெரும் அணிதிகழ் கோயிலைக் கூட்டி முடித்த பெருமை வியப் பளிக்கிறது.

நமது திருக்கோயில்கள் நம் பண்பாட்டின் சின்னமாகும். அங்குதான் நம் கலைகள் காப்பாற்றப்பட்டன. அங்குள்ள சிற்பங்கள் நம் தமிழனின் கைவண்ணங்கள். இவை

இடைக்காலத்தில் வடமொழியில் எழுதிவைக்கப் பட்டன. அதனாலேயே இவை நமக்கு உரியன அல்லவோ என்ற ஐயம்

எழலா யிற்று. இவை போன்ற கோபுரங்கள், சிற்பங்களை வேறு எங்கும் காண இயலாது. தமிழகம் தவிர, இந்தியாவின் பிற பகுதிகளில் அறவே காண முடியாது.

கோபுரம், சிற்பம், பரதநாட்டியம், பெரு வங்கியம் எனப் படும் நாதசுரம் ஆகிய இவை யாவும் நமக்கேயுரியன. இவை வடமொழியில் எழுதிவைக்கப்பட்ட இடைக்காலத்தே, வடமொழி இவற்றைய ஆங்கிலம் போல் தமிழ் மக்களால் முழுவதுமாக ஏற்கப்பட்டு, தங்கள் தங்கள் தொழில் தங்களைவிட்டுப் போகா திருக்கவுமான ஒரு தன்னலம் கருதி, அத்தகைய சூழல் உருவானது.

வானநூல், கணியம் (சோதிடம்), சிற்பம் என அனைத்தும் சமற்கிருதமயமாக்கப்பட்டன.

இது கருதி இவை நம்முடையன அல்ல என மதிமயங்கக் கூடாது. இவற்றை, நாம் இன்று சமற்கிருதத்தை ஆழமாகக் கற்று, ஆகமம் முதற் கொண்டு, அனைத்தையும் தமிழில் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும்.

இம் மனவுணர்வை இப்பிள்ளைத் தமிழ் மீண்டும் உருவாக்கு கிறது.

சுழலும் எண்ணம் தோன்றுவகை
சுந்தரத் திருமண மண்டபமும்
தொகுபல நிகழ்வும் அமையும்வகை
தூய பணிநிறை செய்தேவி
மழலை அருள் வளர் மனத்தேவி
மாமணி வருக வருகவே!
மணங்கமழ் குழல்கோமதித் தேவி
வருக வருக வருகவே!

என இந்த பாடியிருப்பதற்கு ஒப்ப, தமிழ்ப் பண்பாட்டு நிலைக்களன்களையும் தமிழில் மீட்டுஉருவாக்கம் செய்ய, இத்தேவி அருள் பாலிக்க வருவாளாக! பெருங்கவிக்கோ கவிதை யருவியில் மூழ்கித் திளைத்து, அனைவரும் தமிழுணர்வும் பக்திமையும் ஓங்கிச் சிறப்பார்களாக!

**(ஓ.ம்.) தமிழண்ணல்**



கலைமாமணி, தமிழாகரர், பேராசிரியர் டாக்டர் **ஆறு. அழகப்பன்** அவர்களின்

# அணிந்துரை

தமிழ் மொழிக்குத் தனி அழகு அல்லது தனிச் சிறப்புக்கள் பதினாறு என்று முத்தமிழ்க் காவலர் குறிப்பிட்டு மகிழ்வார். அவர் குறிப்பிடும் சிறப்புக்கள்:

பெயர்ச்சிறப்பு, இனிமைச்சிறப்பு, எளிமைச் சிறப்பு, தனிமைச் சிறப்பு, தொன்மைச் சிறப்பு, சுழிச் சிறப்பு, எழுத்துச் சிறப்பு, சொற் சிறப்பு, ஒலிச் சிறப்பு, கவிதைச் சிறப்பு, கலைச் சிறப்பு, மருத்துவச் சிறப்பு, இசைச் சிறப்பு, நாடகச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இலக்கணச் சிறப்பு, என்பன. இச் சிறப்புக்களில் இலக்கியச் சிறப்பு என்ற ஒரு சிறப்புக்குரிய சிற்றிலக்கியம் என்று போற்றப்படும் பிள்ளைத் தமிழ் இலக்கியம் ஒன்று புத்தாயிர மாவது ஆண்டில் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர் களால் படைக்கப்பட்டுள்ளது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களுக்குப்பின் தமிழில் அதிகப் பாடல்கள் பாடிய பெருமை பெருங்கவிக்கோ சேதுராமன் அவர்களுக்கே உண்டு. இன்று உலகம் சுற்றிய தமிழரென்று பலரைக் குறிப்பிட் டாலும் அதிகமாக உலகம் சுற்றியவர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் ஆவார். உலகத் தமிழ்ப் பண்பாட்டுப் பயணத்தை அவர் மேற்கொண்ட வேளையில் அமெரிக்கச் சீமையிலுள்ள கூகடன் என்ற நல்லிடத்தில் உள்ள மீனாட்சியம்மை மீது பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். பிள்ளைத் தமிழ் என்ற பெயரினை அச்சிற்றிலக்கியம் பெற்றிருந்தாலும் அனைவரும் பிரியமுடன் படிக்கும் ஓர் இலக்கிய வகை பிள்ளைத்தமிழ் ஆகும். வெல்லப் பிள்ளையாரில் எந்தப் பகுதியைப் பிட்டுத்தின்றாலும் எல்லாப் பகுதியும் இனிப்பது போல பிள்ளைத் தமிழில் எந்தப் பருவத்தைப் படித்தாலும் தித்திக்கும். தமிழில் எந்த பருவத்தைப் படித்தாலும் தித்திக்கும். இப்

பிள்ளைத் தமிழின் பத்துப் பருவங்களையும் நான் படித்துத் துள்ளினேன். கூசுடன் நகரில் மீனாட்சியம்மன் கோயில் உருவாகிட பங்கு பெற்றோர் அனைவரும் இடம் பெறுமாறு இப்பிள்ளைத் தமிழ் பாடப்பட்டிருப்பது தனிச் சிறப்பாகும்.

பெருங்கவிக்கோ விடும் மூச்சு தமிழ் மூச்சு! அவரது பாதங்கள் தமிழுக்காக நடந்துத் தேய்ந்தன! அவரது கைகள் தமிழுக்காக எழுதி உரமேறின! தமிழ் நலம் பேசியே அவரது நாபுண்ணாயிற்று! தமிழுக்கு ஒரு கவிக்கோ என்றால் அவர்தான் பெருங்கவிக்கோ! ஆக்கங்கள் பல தமிழ்ப்பணி வாயிலாகவும் பன்னாட்டுத் தமிழுறவு வாயிலாகவும் செய்யும் அவர் மேலும் வெல்க.

அன்பன்

**ஆறு. அழகப்பன்**



நற்றமிழ்ப்பாவலர், கவிக்கோ **ஞானச்செல்வன்,** அவர்களின்

# மகிழ்வுரை

'நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருகப் பெருங்கவிக்கோ இயற்றியுள்ள அன்னை மீனாட்சி பிள்ளைத்தமிழ் நூல் பைந் தமிழன்பர் மனங்களில் பதிக்கவேண்டிய ஒரு நூல். உலகமெலாம் சுற்றிவரும் உலகப் பெருங்கவிக்கோ ஞாலம் வலம் வரும் ஞாயி றெனப் புகழொளி பரப்பி உலகத் தமிழர் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உரமுட்டி வருகிறார். செப்பருஞ்சுவைமிகு ஒப்பரிய இவரது படைப்புகளின் வரிசையில் இந்நூல் வைரஒளி சிந்தி வாழ்வில் நலஞ்சேர்க்கும்.

காப்புப் பருவம் தொடங்கி ஊசற் பருவம் முடிய பத்துப் பருவங்களிலும் முத்திரை பதித்துள்ள கவிஞர் தம் குருவான சாதுகுருசாமிகளையும் இணைத்துக் கவிபாடி இருப்பது இவர்தம் செய்ந்நன்றியுணர்வைச் சித்திரிக்கின்றது. இவர்க்குத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் கற்பித்த ஆசான் எளியேன் ஆதலின், இவரின் பத்தி நூலுக்குப் பாராட்டு மகிழ்வுரை வழங்கும் பேறு வாய்த்தமை குறித்து இறும்பூதெய்துகிறேன்.

அவ்விய நெஞ்சத்தார் அன்னையின் அருளை அடைந்திட முடியாது என்பதை அழுத்தமாய்ச் சுட்டும் வண்ணம்,

'அவ்விய நெஞ்சத்தார் அடைந்திட முடியாத
அணையாத சோதி விளக்கே!
கொவ்வைநல் குவிஇதழ் கொடைமனக் குழவியே
கொண்டாடி மகிழும் மகிழ்வே'

என்று மகிழ்வுருவான அன்னையை மகிழ்ந்து கொண்டாடும் பாங்கு சுவை மிக்கது.

பிள்ளைத்தமிழ் பாடுவதில் அம்புலிப்பருவம் பாட அரியதாம் திறம் வேண்டும், அம்புலியை, சாம, பேத, தான, தண்ட முறையில் அன்னையுடன் விளையாட அழைக்கும் கவிஞர்

''வானுலக அமரர்க்கும் கற்பக வளர்தரு ஆனவள்
வையக விழிக்கெலாம் வனப்புஇமை ஆனதோர் மாதவள்''

எனப்பாடி, மாதவம் ஆன மாது அவள் அழைத்தும், வாராதிருப்பது நெறியோ எனக்கேட்டு, தண்டம் எனும் வயையில் ''திறம் விளையாட நீ வரவில்லையேல் உன்னையும் தெருட்டியே உருட்டியே பூமிகொள் வாரே''

எனவுரைத்து, அமெரிக்கர் நிலவில் காலடி வைத்தவர், அன்னைக்காக நிலவையே உருட்டிக் கொணர்வர் எனப்படைக்கும் கவிதைப் பாங்கு சுவைக்கத் தக்கது.

அழகிய சந்தங்கள் இயல்பாகப் பெருங்கவிக்கோ வாக்கில் வந்து நடம் செய்கின்றன என்பதற்கு,

''பதம்பதம் இதந்தரும் மனமொழி குவிந்தே
பணிகளி னோடாட
படைபுடை தொடு தடை உடை உறுதியோடு
பதை பதைத்தே ஆட''

எனும் வரிகளைச் சான்றாக்கலாம்.

அமெரிக்க நாட்டின் காதல்வளம் பற்றிப் பற்பல இடங்களில் கவிஞர் மனங்கலந்து பாடுகிறார். தனதெனும் சுயநலம் அகழ்ந்தெடு தேவியே' என்றழைத்து,

''தேவநாடு போலப்பூ வுலக நாட்டம்மையே
செவ்வாயின் முத்த மருளே' எனப்பாடி மகிழும் கவிஞர்,

''களபமுலைக் காரிகையர் சீரிளமைக் குமரருடன்
காதலுறும் அணைப்பிணைப்பின் ஆசை சுகம்
கட்டுக்குள் கட்டி செம்பட்டுக் கூந்தல்
களிநகைக்கும் அதரங்கள் பதித்தே''

- என்று காணும் இடமெல்லாம் குமரரும் குமரியரும் கூடிக்குலாவும் காட்சிகளையும் கவியாக்கித் தந்துள்ளார்.



சித்திதரும் பத்தி வழியில் அமெரிக்க (கூஸ்டன்) அன்னை மீனாட்சியைப் பிள்ளைத் தமிழால் போற்றி மகிழும் பெருங்கவிக்கோ முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும் பெற்றியனாம் பெம்மான் சிவன் போலப், பழைமையும், புதுமையும் இணைந்திடும் பாலமாகத் திகழ்பவர் ஆவார். அவனருளால் அவனருள் வாழ்த்தும் அடியார் திருக்கூட்ட மரபில் வந்த பெருங்கவிக்கோ உருவத்தால் மட்டுமின்றி உள்ளத்தாலும் உயர்ந்தவர்; உன்னதமான மனிதர்; ஓங்கு புகழ்க் கவிஞர். இவர் இன்றுபோல் என்றும் உயர்ந்து எல்லாப் பெருமைகளும் ஏற்றமுறப் பெற்று வையகம் போற்ற வாழ்க!

இந்நூலுக்குக் கவினார்ந்த கவிநடையில் அரிய விளக்கவுரை ஒன்றும் அமைத்திருப்பது பாராட்டி மகிழத்தக்கது.

தமிழுலகம் இந்நூலை வரவேற்று வாங்கிப் படித்துப் பயன் பெறுவதாகுக!

அன்பன்

**(ஒ.ம்.) ஞானச்செல்வன்**

## பதிப்புரை

''மக்களின் எண்ணிக்கையோ செல்வமோ வறுமையோ முக்கியமல்ல, சொல் செயல் சிந்தனைகளால் ஒன்றாக விளங்கும் ஒரு சிலரால் உலகையே ஆட்டி வைக்க முடியும். இந்த உண்மையை எப்போதும் மறந்து விடாதீர்கள்,''

என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்றின் உண்மையை தந்தையார் அருகிருந்து உணர்கிறேன். சாமான்யனாக வாழ்க்கையைத் தொடங்கிய கவிஞர் தமிழ் - தமிழர் வேட்கையோடு உலகளாவிய நிலையில் இலக்கியப் பணியிலும், தமிழ்ப் பணியிலும் வெற்றிநடை போடுகிறார்.

அமெரிக்காவில் 1980ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் உலகக் கவிஞர்கள் மாநாடு முதல் இன்றுவரை கடந்த இருபது ஆண்டுகளாக தொடர்ந்து பல்வேறு நாடுகளில் நடைபெற்ற உலகக் கவிஞர்கள் மாநாடுகளில் நம் கவிஞர் தமிழ் முழக்கம் செய்து வருவது தமிழர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய செய்தியாகும். கடந்த ஆண்டு மெக்சிக்கோ நாட்டின் அக்குபல்கோ நகரில் நடைபெற்ற 19ஆம் உலகக் கவிஞர்கள் மாநாட்டிற்கு பல்வேறு பொருளாதார சிக்கல்களுக்கிடையில் இலட்சிய வீரரைப் பயணம் அனுப்பி வைத்தேன். இந்தப் பயணத்தில் அமெரிக்க நாட்டின் கூசுடன் நகரில் வாழ் அருளன்னையின் திருவிளையாடலே தங்களின் கைகளில் தவழும் மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ் ஆகும்.

தமிழ் தமிழர் மேம்பாட்டிற்கு இந்நூற்றாண்டில் உலகளாவிய நிலையில் அயராது பணியாற்றும் தந்தையார்க்கு திரு. யாழன் சண்முகலிங்கம், திரு மனோகரன் போன்ற பெருமக்கள் ''**தமிழர் ஒளி**'' எனும் பட்டத்தை அன்னையின் கருணையால் அமெரிக்க மண்ணில் வழங்கினர்.

இதுவரை தந்தையார் மேற் கொண்ட பயணங்களையெல்லாம் நூலாக தமிழ்ச் சமுதாயத்திற்கு வழங்கியுள்ளோம். சொல், செயல், சிந்தனைகளின் ஒரே நிலையில் தமிழர்கட்கு தொண்டாற்றும் வழியில் அருளன்னை கூசுடன் மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழையும் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.



தந்தையாரின் பெரும்பான்மையான நூல்கள் பயணத்தில் பிறந்தவைகளே. அமெரிக்கப் பயணத்தில் அருள்ன்னையின் பிள்ளைத் தமிழ் பாடியது தமிழ் கூறு நல்லுலகிற்குக் கிடைத்த பெருங்கொடையாகும்.

இந்நூல் வெளிவர பல்லாற்றாலும் உதவிய கூசுடன் மீனட்சியம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. சொக்கலிங்கம் கண்ணப்பன் அவர்கட்கு தமிழ் கூறும் நல்லுலகம் சார்பில் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

அன்னையின் பிள்ளைத் தமிழுக்கு விளக்க வுரை வழங்கிய அருளாளர் சுத்த சத்வானந்தா அவர்களின் ஆன்மீகச் சாரத்தை இந்நூல் படிப்போர் உணரலாம். அப்பெருமகனார்க்கும் மனமார்ந்த நன்றி.

கூசுடன் வாழ் அன்னையின் பிள்ளைத்தமிழை நான் மாடக் கூடல் மாநகர் தலைவி அருள் அன்னை மீனாட்சியின் திருப் பாதத்தில் வெளியிடுவது இந்நூலிற்குப் பெருஞ் சிறப்பாகும்.

குறுகிய காலத்தில் இந்நூல் வெளிவரப் பெரிதும் ஒத்துழைத்த திரு. இராசப்பா, திரு. மலர்வண்ணன் திரு. சேகர் ஆகியோர்க்கு என்றும் நன்றியுடையேன்.

அன்பன்

**வா.மு.சே.திருவள்ளுவர்.**

## முன்னுரை

எல்லாம் வல்ல இறைகுருவருளால் அமெரிக்க அன்னை கூசுடன் மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் வெளியிடுவது தமிழுக்குப் புதிய வரவாகிறது. மதுரை யம்பதியில் அருள் பாலிக்கின்ற அன்னை மீனாட்சி பற்றி அருட் பெருங்கவிஞர் குமரகுருபர அடிகள் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். இந்த நூற்றாண்டில் அமெரிக்க நாட்டில் எழுந்தருளியுள்ள அருளன்னை மீனாட்சியைப் பற்றி எளியேன் அடியேன் பிள்ளைத்தமிழ் பாடும் பெரும்பேறு கிடைத்தது எம் மூதாதையர் செய்த பயனே!

மலேசியத் திருநாட்டில் கோலாலம்பூரில் எழுந்தருளியுள்ள மகாமாரி அன்னைக்குக் கோலாலம்பூர் மகாமாரி அம்மை பிள்ளைத்தமிழ் எழுதியுள்ளேன். இப்போது அமெரிக்க நாட்டு அருள்மிகு மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் வெளியிடுகிறேன். உலகளாவிய பன்னாடுகளிலும் இப்போது புலம் பெயர்ந்த தமிழர்கள் பெருமளவில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளதால் பல தெய்வங்களின் கோயில்கள் நிறுவப்பட்டுள்ளன. யான் செல்லும் உலக நாடுகளில் யான் வணங்கிய கோயில்கள் பற்றிப்பல பாடல்கள் எழுதியுள்ளேன். அக் கவிதைகளையே ஒரு தொகுப்பாக வெளியிடலாம்!

சென்ற 1999-ஆம் ஆண்டில் மட்டும் நான்குமுறை வெளிநாடுகள் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. 1999 ஏப்ரல் திங்கள் தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில் நடந்த மாநாட்டு ஏற்பாட்டுக்காக வெளிநாடுகள் சென்றேன். பின்னர் பாங்காக்கில் மாநாடு நடத்துவதற்காக மே திங்களில் வெளிநாடு சென்றேன். மாநாடு நிறைவுபெற்றுத் தமிழகம் திரும்பியதும் - ஸ்பெயின் நாட்டில் வெலன்சியா என்னும் நகரில் நடந்த உலக எழுத்தாளர் மாநாட்டிற்கு ஸ்பெயின் நாட்டு அரசு அழைப்பின் பேரில் செல்லும் வாய்ப்பேற்பட்டது. பின்பு 1999-அக்டோபர் திங்கள் மெக்சிகோ நாட்டில் அக்குபல்கோ என்ற எழில்சிறந்த சுற்றுலா நகரில் நடந்த 19-ஆம் உலகக் கவிஞர் மாநாட்டிற்குச் செல்லும் சூழலும் அமைந்தது.

மலேசியா - சிங்கப்பூர் - ஸ்பெயின் வழியாக அமெரிக்கா லாசேஞ்சல்சு நகரை அடைந்து, அங்கிருந்து அறிஞர் யாழன் சண்முகலிங்கனோடு மெக்சிகோ அக்குபுல்கோ சென்று கவிஞர் மாநாட்டில் கலந்து கொண்டு, பின்பு சாந்தியாகு - சான்பிரான்சிஸ்கோ - சக்கரமண்டோ போன்ற இடங்களுக்குச் சென்று - அதன்பின் அமெரிக்கா கூசுடன் செல்லும் வாய்ப்பு நாடிச் சென்றேன்.

எவ்வளவோ முயன்றும் - கூசுடனில் எனக்குப் பல நண்பர்கள் இருந்தும் - கைகொடுக்க அவர்கட்கு வாய்ப்பில்லை என்று கை நழுவினர். இந்நிலையில் கூசுடன் போகாமலேயே ஏனைய ஊர்களுக்கு செல்லலாம், என எண்ணிட எதற்கும் அன்னை மீனாட்சி கோயிலுக்குத் தகவல் தருவோம் எனத் தீர்மானித்தேன். அன்னை மீனாட்சி கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் கண்ணப்பர் நல்லுள்ளத்தால் கோயில் நிர்வாகி இராமலிங்கம் அவர்கள் இரமேசு என்பவருடன் கூசுடன் விமான நிலையம் வந்து என்னை அழைத்துச் சென்று ஆலய விருந்தினர் மாளிகையில் தங்கவைத்தனர்.

அன்னை மீனாட்சியை அன்று மாலை வணங்கும் போது தலைவர் கண்ணப்பர் அவர்கள் வருகைதந்தார். இந்த ஆலயத்தைப் பற்றிய பிள்ளைத் தமிழ் ஒன்று தாங்கள் பாட வேண்டும் என்றார். அதுவும் 1999 டிசம்பர்த் திங்களுக்குள் பாடவேண்டும் என்று வேண்டினார். நான் என் பயணக் குறிக்கோள் - மற்றப் பணிகளைக் கூறி இப்போது இயலாது - அடுத்த ஆண்டு நிச்சயமாகப் பாடித் தருகிறேன் என்றேன். யான் அறைக்குச் சென்றதும் அங்கு பணியாற்றும் பழநி என்னும் காரைக்குடி அன்பர் என்னைச் சந்தித்து "ஐயா நீங்கள் தலைவர்

பேச்சை மறுக்கக்கூடாது உங்களால் முடியும் - நீங்கள் அவசியம் பிள்ளைத் தமிழ் பாடியே ஆகவேண்டும். என்று பல்வேறு நல்ல சூழல்களை எடுத்துரைத்தார்.

இதற்கு மேலும் என்னால் மறுக்கமுடியாத நிலையில் இரவு முழுதும் அன்னை மீனாட்சியை நினைந்து விடியலில் - நியூயார்க் பிள்ளையார் பற்றி முதன்முதல் காப்புப் பருவப்பாடல் ஒன்று பாடித் தலைவர் கண்ணப்பர் உள்ளிட்ட பெருமக்களிடம் காண்பித்தேன். நன்றாக இருக்கிறது; தொடர்ந்து எழுதுங்கள் என்றனர் அன்று மாலையே நான் சிகாகோ செல்ல வேண்டும் - வானூர்தி நிலையம் செல்ல என்னை அழைத்துச் சென்ற திரு. ஆராஅமுதன் - அவர் துணைவியார் இராதா ஆகியோரிடம் காப்புப் பருவத்தில் இரு கவிதைகள் எழுதிப் பாடிக்காட்டினேன் மிக நன்றாக உள்ளது நீங்கள் கண்டிப்பாக மீனாட்சி பிள்ளைத்தமிழை பாடிடவேண்டும்'' என்று ஊக்குவித்தனர்.

*1-11-1999*-அம் நாள் தொடங்கிய பிள்ளைத்தமிழ் எழுதும் பணி தொடர்ந்து கூசுடன், சிக்காகோ - கொலம்பசு, மீண்டும் சிகாகோ - நியூசெர்சி - நியூயார்க் - கனடா நாட்டில் டொரன்டோ, ஒட்டாவோ - மீண்டும் டொரண்டோ - நியூயார்க் கூசுடன் வழியாக ஆர்லாண்டோ, தாம்பா என்ற ஊரில் உள்ள டாக்டர் இராசசேகரின் ராணி இல்லம் செல்வதற்கு 25-11-1999-ஆம் நாள் கூசுடன் வழியாக வானூர்தியில் சென்றேன்.

என் பயணச்சீட்டு நிலைப்படியாக நான் மீண்டும் கூசுடன் நகருக்குச் செல்ல இயலாது எனவே, ஐயா மீனாட்சி ஆலயத் தலைவர் கண்ணப்பர் அவர்களை விமான நிலையம் வருமாறு தகவல் தந்திருந்தேன். அவரும் வந்திருந்தார் தன் நண்பர் மாணிக்கவாசகம் என்பருடன். யானும் எனக்கு ஊர்தியில் அறிமுகமான கோடீசுவரராவ் என்ற நண்பரோடு கூசுடன் வானூர்தி நிலையத்தில் சந்தித்து கண்ணப்பரிடம் அருள்மிகு கூசுடன் மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ் தமிழ்ப் பாடல் நூறையும் கையளித்தேன் அவ்வப்போது சில பாடல்களை அவருக்கு அனுப்பிக் கொண்டும் இருந்தேன்.

இந்த இருபத்தைந்து நாட்களும் ஓய்வுவின்றி எங்குசென்றாலும் - பெரும்பாலும் வானூர்தியில் அமர்ந்து செல்லும்போதும் என் பயணப் புத்தகத்தில் அன்னை மீனாட்சி பிள்ளைத்தமிழ் எழுதும் எண்ணமே மீக்கெழுந்து, கவிதைகள் புனைந்தேன். கூசுடனில் ஆரம்பித்த தொடக்கம் மீண்டும் கூசுடன் வந்தபோது நிறைவடைந்தது. கூசுடன் விமான நிலையம் இறங்கும்வரை விமானத்தில் எழுதிக்கொண்டிருந்தேன். நிலையத்தில் அருளாளர் கண்ணப்பர் சுடச்சுடத்தேநீர் தந்தார் - நான் சுடச்சுட மீனாட்சி பிள்ளைத்தமிழ் தந்தேன்.

நான், என் வழிபாட்டில் சமயப் சார்பற்று அனைத்துத் தெய்வங்களையும் உள்ளுவேன். மதுரை மீனாட்சியையும் கூசுடன் மீனாட்சியையும் நினைத்து பிரார்த்தனையில் பணிவேன். எனவே இந்தப் பணியை என்னை ஆட்கொண்டு அருள் மிகு அன்னை மீனாட்சியே எழுத வைத்திருக்கிறாள் என்பதே நூற்றுக்கு நூறு உண்மை என்பதைப் பயன்காண் பக்தர் அறிவர்.

கூசுடன் மீனாட்சி பற்றிய இந்நூல் மதுரை மீனாட்சி ஆலயத்தில் வெளியாவதும் அன்னையின் அருட்கொடையே! அதுவும் என் பிறந்த நாளான 9-2-2000 (66)- நாளில் வெளியிடுவதும் தாயின் பேரருளே! அடுத்து அமெரிக்க அன்னை மீனாட்சி சந்நிதியிலும் அன்னை அருளால் இந்நூல் வெளியீடு நடைபெறும்.

தகுதிவாய்ந்த பெருமகனார், அன்னையின் பெரும் பக்தர் நம் சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு **பழநிவேல் ராசன்** அவர்கள் அருட்கையால் இந்நூல் வெளியிடுவதும் இறும்பூது தரும் நிகழ்வாகும். நம் அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு தமிழ்க்குடிமகனார் வாழ்த்துரை வழங்கியுள்ளார்

என்பதோ நினைந்து நினைந்து இன்புறத் தக்கதாகும். அருட் செல்வர் பெருமகனார் நா. மகாலிங்கம் அவர்களின் பாராட்டுரை கிடைத்ததும் பெரும்பேறே யாகும். கூடுடன் அன்னை மீனாட்சி கோயிலில் காலமெல்லாம் பூசை வழிபாடு செய்த அருள்மிகு பெருமகனார் இராசரத்தினப் பட்டர் அவர்கள் இந்நூலுக்கு வழங்கிய அணிந்துரை அன்னையால் வரம் பெற்றதற்கு ஒப்பாகும். முனைவர் தமிழண்ணல், தமிழாகரர் ஆறு. அழகப்பனார், மீனாட்சி மைந்தர் சிதம்பரம், என் ஆசான் கவிக்கோ ஞானச்செல்வர் வழங்கிய வாழ்த்து அகமகிழத்தக்கது. அனைத்துப் பெருமக்கட்கும் இதய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பிள்ளைத்தமிழ் நூலுக்கு அரிய - சிறப்பானதொரு சிறப்புரை எழுதித்தந்த சுவாமி சுத்த சத்வானந்தா அவர்களின் பேரன்பை என்றென்றும் நெஞ்சும் வைத்துப் போற்ற வேண்டும். அருள் நெஞ்சோடு அவர்கள் யாத்த அருளுரை அடியேன் எழுதிய பிள்ளைத் தமிழுக்கு மெருகூட்டுகிறது என்பதைப் படித்தவர் அறிவர். அவர்கட்கு வாழ்நாள் நன்றி உடையேம். அரிதின் முயன்று அன்னை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் கொணர்ந்த தமிழ்ப்பணி ஆசிரியர் திருவள்ளுவர்க்கும் மெய்ப்புத் திருத்தி உதவிய சுவாமி சக்திபாரதி, கவிக்கோ ஞானச்செல்வன், பேராசிரியர்கள் கணபதி, ஆண்டவர் ஆகியோர்க்கும், தக்க உதவிபுரிந்த அருளுக்கும் மிக்க நன்றி.

அன்பன்

**வா.மு.சேதுராமன்**

**நூன்முகம்**

1 பாடி வருவாரின் பைந்தமிழ்ப் பாச்சூடி
கோடி கொடுக்கும் கொடைவள்ளல் - தேடிய
ஓங்கு பரம்பரை உன்னதக் கண் ணப்பர் சொல்
தீங்கனி வாய்மைத் திறம்.

2 பன்மொழிப் பாவலர் பார்கூடும் **மெக்சிகோ***
நன்றெழில் **அக்குபுல்கோ** நாடிப்போய் - வென்றுகவி
மாநாடு பங்கேற்று வாகைசூ டித்திரும்பும்
தேனா டமெரிக்கா சீர்!

3 **திருஇராம லிங்கம் திருமுகம் கூஸ்டன்**
வருவான ஊர்திநிலையம் காண் - கருக்கொண்ட
பிள்ளைத் தமிழ்பாடும் பேறுதவம் கண்டேனே
வள்ளண்மை மீனாள் வரம்!

4. கவிஞர்மா நாடு கடமைப் பயணம்
புவிஅமெ ரிக்காவும் போந்தே - செவிமணக்கும்
மீனாட்சி அன்னைக்கே மேவுபிள் ளைத்தமிழ்
தானாட்சி பாடும் தமிழ்

5. ஓங்கு பலமொழியர் உண்மை தெளியவும்
வீங்கருள் மாட்சி விளம்பவும் - நாங்கூழ்ப்
புழுப்போலப் பிள்ளைநல் பீடு தமிழை
விழுப்பம் புனைவேன் விருந்து!

* மெக்சிகோ நாட்டில் அக்குபுல்கோ 19-ஆம் உலகக் கவிஞர் மாநாடு நடந்த ஊர்

6. கற்றார்மற் றாரும் கவிவளம் காண்கவே!
வற்றா அமுத வளர்தமிழ் - அற்புதங்கள்
வையகம் எல்லாம் வளர்க்கும்தாய் மீனாளின்
கையகம் வந்தருள் காப்பு!

7. பக்தர் தமக்குப் பழத்தோட்டம் நீதாயே!
தக்கோன் பழநி சமைதொண்டன் - மிக்கஅன்பால்
இன்னேபிள் ளைத்தமிழ் தன்னேரி லாமீனாள்
வென்றாக்கக் கூறுமொழி வித்து!

8. நெருப்பில் விளையாடி நீரினில் நீந்திக்
கருப்பை உருவாகாக் கன்னி - விருப்பினாள்
செந்தமிழ்த்தாய் பிள்ளைச் செழுந்தமிழ்ப்பா பாடவைத்தாள்
விந்தை அமெரிக்கா வீற்று!

9. உலகெலாம் சுற்றி உயிர்த்தமிழ் ஓம்பும்
நலமெலாம் தந்தஇறை நம்பிப் - பலமெலாம்
அன்னைஎம் தாய்மடியாய் ஆளுமைப் பாப்புனைவேன்
தன்னேரில் மாட்சித் தவம்!



## பாயிரம்

பாடி நாடித் தேடி வருவோரின் பைந்தமிழ்ப் பாமாலை சூடிக் கொண்டு கோடி கொடுக்கும் கொடைவள்ளல் பேரோங்கு பரம் பரையில் வந்துதித்தவர் கண்ணப்பர் என்பார். அவர் தீங்கனிவாய்மைச் சொல்திறம்தான் இந்நூல்.

கவிஞர் மாநாட்டிற் கலந்து கொள்ளக்காசினி போற்றும் அமெரிக்க நாடு சென்ற ஞான்று ஆட்சி செய்யும் மாட்சிமிகும் தமிழில் மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் புனைந்தது தமிழே உலகில் தானாட்சி செய்கிறது என்பதைத் தெள்ளத் தெளிவாக்குகிறது.

பாரோங்கும் பன்மொழியர் உண்மை தெளிந்து உலகைத் தண்ணளியால் தாங்குகின்ற தாயின் மாட்சி தழைக்க விழுப்பமிகு, பீடுமிகு தமிழிற் பாடினேன் பிள்ளைத் தமிழ்.

கற்றாரும் மற்றாரும் தாய்மீனாம்பிகையின் கவிவளமிகு பிள்ளைத் தமிழ் காண்பாராக. தாங்கும் தாயாகி உலக உயிர்களை யெல்லாம் அருளுடன் காக்கும் அவளே காப்பாவாள்.

சிந்தை கவர்ந்திடும் விந்தை அமெரிக்க நாட்டில் வீற்றிருக்கும் கருப்பையில் உருவாகாத கன்னியாக என்றும் விளங்கிடும் அருள்மிகு அன்னை மீனாட்சி! அவள் மீது செழுந்தமிழிற் பிள்ளைத் தமிழ் பாட வைத்தாள். அவள் திருவுளத்தின் விருப்பப்படியே இப் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளேன். இஃது அவளின் பெருங்கருணை. இவ்விடத்துப் ''பவன்பிரம சாரியாகும்; பன்மொழிக் கன்னியாகும்'' என்ற பாடற் கருத்து நினைவுகூரத்தக்கது. அவள் நெருப்பில் விளையாடி நீரில் நீந்தியவள்.

நாங்கூழ்புழு நிலத்தைப் பண்படுத்துகிறது. அதைப்போலப் பெருங்கவிக்கோவின் கவிதைப் பணி என அவையடக்கம் கூறும் உவமைநயம் எண்ணி எண்ணி மகிழத்தக்க தாகும்.

உலகத்தை எல்லாம் காக்கும் தாய் மீனாட்சி கற்றாரும் கல்லாரும் கவிவளம் காணக் கையகத்தின் அமுதாக வந்தருள் செய்யும் அற்புதமே இந்நூல்.

கூசுடன் விமான நிலையத்தில் பெருமக இராமலிங்கம் திருமுகம் கண்டபோதே பிள்ளைத்தமிழ் கருக்கொண்டது. பக்தர் கட்டு உண்சோறு - பேறு சமைக்கும் பழநி என்பவரின் உணர்வின் வேண்டுதல் மொழி இந்நூலுக்கு வித்தாகும். மெக்சிகோ நாட்டின் அக்குபுல்க்கோ என்ற எழிலார் நகருக்கு உலகக் கவிஞர்கள் மாநாடு சென்று திரும்பு காலை அமெரிக்கா தந்த சீர் பரிசு இப்பிள்ளைத்தமிழ், அன்னை மீனாட்சித்தாய் மடியே தவமடியாய் ஆளுமை வீறுமிக்க இப்பிள்ளைத்தமிழையாத்தேன் என்கிறார் பெருங்கவிக்கோ.

ஓம்

தமிழ் வாழ்க!

# அமெரிக்க அன்னை கூசுடன் மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்

## 1. காப்புப் பருவம்

காப்புப் பருவமாகிய இப்பருவத்தில் காதற் பிள்ளையினைப் பிறப்பில் பெருந் தெய்வ முதலாகப் - பிறப்பறு சிறு தெய்வம் ஈறாகவுள்ள - எல்லாத் தெய்வங்களையும் காக்குமாறு வேண்டிக் கோடலாகக் கவிதைகள் புனைவது

## 1. பிள்ளையார் வணக்கம்

விண்ணாடு வியன்நாடு நன்னாடு அமெரிக்கா
விதிக்கும் விதிசெய்யப் புகுந்ததோ?
வெளிஉல கம்மெலாம் விரும்பியே வாழ்ந்திடும்
வினைமாட்சி ஆட்சியுள் கலந்ததோ?

மண்ணாடு களுக்கெலாம் வளமிகு தலைநாடு
வந்தருள் பாலிக்கும் வாரணத்தான்
மாவருள் பொலிந்திடும் மாநகர் நியூயார்க்
மதிபிள்ளை யார்தாளை வணங்குவாம்!

கண்ணாடு கற்பகத் தமிழொரு உருவாகி
கவினெழிற் கைபுனையா ஓவியமாய்
கதிர்மதி ஒளியெலாம் கரம்தரும் வெல்லொளி
கலைக்கூடல் மாநகர் பதித்தேவி

தண்ணாடு குளிர்நாடு தடம்பதித் தருள்கவே
தகுதிசெய் மனிதநே யங்களே
தங்கருள் பொங்கருள் பெருநகர் கூசுடனில்
தவஅன்னை மீனாட்சி ஓங்கவென்றே! 1

எந்தவொரு செயல் தொடங்கும் போதும் அந்தச் செயல் தடையின்றி முழுவெற்றிபெற முன்னவனும் ஆனைமுகமன்னவனுமாய விநாயகப் பெருமானை வழிபடுவது வழக்கம். அவ்வழக்கத்தைப் பின்பற்றி நியூயார்க் நகரில் திருக்கோயில் கொண்டுள்ள தனக்குமேலொரு தலைவனில்லாத விநாயகனை முதலில் வணங்கி அம்மையின் பிள்ளைத் தமிழை அமுதத் தமிழில் தொடங்குகிறார் ஆசிரியர் மரபுவழுவாத கலைமாச் செல்வர் பெருங்கவிக்கோ.

''வந்தருள் பாலிக்கும் வாரணத்தான், மாவருள் புரிந்திடும் மாநகர் நியூயார்க்கில் வாழும் மதிநலமிகு பிள்ளையார் மலர்த்தாளை வணங்கி நலம் பெறுவோம்'' என்றழைக்கும் பெருங்கவிக் கோவின் பேருள்ளம் படிப்போர்க்கு இனிது விளங்குகிறது. பிள்ளையாரின் பேரருளால் கூசுடனில் உறையும் தவப் பெருமாட்டி அன்னை அங்கயற்கண்ணியின் பிள்ளைத்தமிழ் உலகோரின் தமிழ் இல்லங்களிலெல்லாம் உலவி மகிழ்வளிக்கும் என்பது உறுதி. இது பெருங் கவிக்கோவின் திடமான நம்பிக்கை.



## 2. திருமால் வணக்கம்

கோவிந்தா பெருங்கருணை குவிக்கின்ற வள்ளலே
குவலயப் பொருளெலாம் கோலோச்சும்!
குறைவொன் றறியாமல் நிறைவாக அடியாரைக்
கொண்டாளும் ஞானமணி விளக்கே!

மாவிந்தை தந்தடியார், மனத்துறை திருமாலே
மாநதிகள் கூடிடும் பிட்சுபர்க்கிலும்
மன்பதையெ லாம்ஆளும் தென்புலத் திருப்பதியும்
வளரருள் ஈபவனை வணங்குவாம்!

பாவிந்தை உவந்துகவிப் பணித்தமிழ் ஆட்கொண்ட
பரிபூரண ஆனந்தப் பாவையாள்!
பண்ணிசையாள் மன்னிசையாள் புண்ணியத் தேவியாள்
பச்சைப் பசுங்கோயில் வித்தகி!

நாவிந்தை தாவிந்தை நன்னகைப் புன்னகையாள்
நம்பிக்கை மூச்சாகும் நாயகிக்கே
நற்றமிழ்ப் பாமாலை பொற்றமிழ்ச் சூடியே
நற்றாய் மீனாட்சி காக்கவென்றே!

வடவேங்கடம் முதல் தென்குமரி வரை தமிழக எல்லையென்று வரை செய்யப் பெற்றது. அத்திருவேங்கடத்திருப்பதியில் குறைவொன்றுமில்லாத குழலூதும் கோவிந்தனின் அற்புத நாமம் முழங்கும். ''நெடியேனே வல்வினைகள் தீர்க்கும் திருமாலே! வேங்கடவா!'' என்று அடியார்கள் திருவேங்கடம் உடையானை மாநதிகள் கூடிடும் பிட்சுபர்க்கில் உறையும் தேவாதி தேவனான திருமாலையும் அன்பர்கள் கண்டு வணங்கிப் போற்றி வளமான மங்கள வாழ்வடைகிறார்கள். ''வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு'' என்று பெரியாழ்வார் பாடுகிறார். அவர் குறிப்பிடும் மங்கைதான் அழகின் பெட்டகமான திருவெனும் இலக்குமியாவள். அவரருளால் அம்மை மீனாட்சியின் பிள்ளைத் தமிழ் நற்றமிழ்ப் பாமாலையாகத் திகழும். அப்பொற்றமிழ் மாலையை அணிமுடியில் சூடி அன்னை மீனாட்சி உலகைக் கருணைக் கண்ணால் பார்த்துக் காப்பாள்.

## 3. சிவபெருமான் வணக்கம்

நோக்கத்தின் நோக்கமாய் நோற்பவர் காப்பவன்
நுட்பத்தின் நுட்பம் நுழைபவன்
நுவலறி கோவிலைக் கூசுடனில் கட்டிட
நற்பொருள் குறைந்திட்ட போதினில்
ஆக்கத்தின் பெரும்பொருள் *அருளாளர் அஞ்சலில்
அருளிட மீனாட்சி அருகுள
அன்பதே சிவமெனும் இன்பமா மதுரையுள்
அணிசொக்க லிங்கரை வணங்குவாம்!
மாக்கவி வாணரும் பூக்கள்சூழ் சோலைபோல்
மலர்பாக்கள் சொரிந்த போதும்
வரமருள் தாளினுக்(கு) ஈடாகா அறத்தினள்
வறியவர் துயர்தீர்க்கும் நெறியவள்
தாக்கவினை வந்தக்கால் தாக்கியே தீர்ப்பவள்
சமன்பாடு பயன்பாடு மேம்பாடு
தகுதிக்குத் தகுதிசேர் அமெரிக்கக் கூசுடனில்
தாயணங்கு மீனாட்சி காக்கவென்றே!

''செம்மையே யாய சிவபத மளித்த செல்வமே சிவபெருமானே!'' என்று மாணிக்கவாசகர் சிவபெருமானைப் பாடுகிறார். ''நிறைமலம் நீங்கி நிற்றலின் அறைகுவர் சிவனென அறிவின் மேலவர்'' என்று கூறுவர். அன்பே சிவமாவது. அன் புருவானவன் சிவபெருமான் கூசுடனில் அவனது இடமு பாதியான அன்னை மீனாட்சியின் திருக்கோயில் அமைந்திட அருள் செய்தவன். கூசுடனில் அருளொடும் வாழும் நெஞ்சினர் நிறுவிய மதுரை மீனாட்சி சுந்தரனான அணி சொக்கலிங்கேசரை அன்போடு வணங்கி யின்புறுகிறார் பெருங்கவிக்கோ.

வறியவர் துயர் தீர்த்து வாழ்வளிக்கும் நெறிசேர் நேரிழையாள் அமெரிக்கா கூசுடன் அன்னை மீனாட்சியான பிள்ளைத் தமிழ்ப் பேரழகி கவி வாணர்பாடும் புகழ் மேவியவள். அறம் வளர்க்கும் நாயகி அவள் சோம சுந்தரர்நிதம் சொக்கிடும் ஓவியமும் காவியமுமான தலைவி அவளின் தண்ணருள் தரணியைக் காக்க வேண்டுமென்று விழைகிறார் பெருங்கவிக்கோ.

★ டாக்டர் இராதாகிருஷ்ணன்



## 4. முருகக் கடவுள்

பொங்காழி சூழுலகில் சங்காழி வந்ததுபோல்
பொலிதமிழ் வேளாகி வேல்கொண்டவன்
புறம்புறம் இயற்கையின் பொழிலெலாம் நிலைபெறும்
புகழாழி அகமெலாம் குடிகண்டவன்!
செங்காழி முக்கடல் அலைக்கதிர் தாலாட்டும்
*திருவள்ளுவப் பெருமானாக நின்றவன்!
திருக்கோயில் குன்றமெலாம் தேர்ந்தமலைப் பழநி ஆண்டவன்
செந்தூரன் முருகவேளைப் பணிகுவாம்!
தங்காழி சூழ்கடல் தமிழ்கொழி குமரிமுனைத்
தாயாகி மாமதுரைச் சேயானவள்
தரளநகை மரகதத் தங்கமணி நவரத்தினத்
தையலொளிர் வையகம் வாழ்விப்பவள்!
மங்கலப் பாலாழி குடமுழுக்(கு) ஆடிடும்
மாதரசி அமெரிக்க அன்னைஆனாள்!
மாம்பழத்தின் ஏக்கத்தை தாம்தீர்க்கும் கூசுடன்வாழ்
மாதாவைப் புரக்கவென்றே! 4

''ஒரு திரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய'' வென்று முருகக் கடவுளின் திரு அவதாரத்தைக் குறிப்பிடுகிறார் கந்த புராணம் பாடிய கச்சியப்பர். திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய் என்னும் திருச் செந்தூர், திரு ஆவினன் குடி, திருவேரகம், குன்றுதோறாடல், திருப்பழமுதிர்ச் சோலை என்றும் ஆறுபடை வீடுகளில் மிகச் சிறப்புடன் விளக்குகின்றான் முருகன். முருகு என்ற சொல் லுக்கு அழகு, இளமை, மணம், தெய்வத்தன்மை மற்றும் பல அரும்பொருள்கள் உண்டு.

நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப் படையில் ஆறுபடைவீடுகளின் சிறப்பு விவரிக்கப் பெற்றுள்ளது. முருகனடியார்கள் திருமுருகாற்றுப்படையை நாள் தொறும் படிப்பர், பாராயணம் செய்வர். அழகு நிறையும் இடமெல்லாம் அன்பு முருகன் குடியிருப்பான். பழநிமலையில் ஆண்டிக் கோலத்துடன் திகழ்வான். அவனை முருகவேள், செவ்வேள் என்று அன்பர் போற்றுவர். அம்முருகப் பெருமான் தங்கமணி நவரத்தினங்கள் தரித்து அழகுத் தெய்வமாகக் காட்சி தருகிறான். அவனுடைய அன்னை அமெரிக்க மாதரசியாவாள். மாம்பழத்தின் காரணமாக அம்மை அப்பனை மறந்து அகிலமெலாம் துறந்த மாமுருகனின் திருவருள் கூசுடன் மாதா மீனாட்சியை நெஞ்சில் நிலை நிறுத்துவம் காக்கும் மாமதுரைத் தலைவியின் மகனான திருமுருகனைப் பாடும் பெருங்கவிக் கோவின் பாங்கு அதாவது கவிதைப் பாங்குரைக்க வாய்மணக்கும், கேட்கச் செவிமணக்கும்.

★ 1-1-2000 தமிழக முதல்வர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் உருவாக்கித் திறப்பு விழாக்கண்ட அய்யன் திருள்ளுவர் சிலை

## 5. திருமகள்

ஒளிகதிர்த் திங்களுடன் ஓங்குபல ஒளியெலாம்
ஒன்றாகி நின்றாளும் மேனியாள்!
உலகமை ஐம்பூதக் கலவையுள் கலந்தேதான்
உயிரெலாம் ஒன்றாகும் நிலையினாள்!
தெளிகதிர் வளவாழ்வு சீரோங்கப் பலபெயர்
திசையெலாம் பணத்தாளாய்த் திகழ்நலத்தாள்!
திக்குசூழ் அமெரிக்கா தலைமைகொள் திருமகளின்
சீரடியைப் பணிந்தேத்துவாம்!
வளிகதிர் நிகரிலா வனப்பினுக் கொருத்தியாய்
வாகைகள் சூடிடும் ஆவியாள்!
வான்செக்கர் அழகொளிர் செஞ்சடைக் கடவுளின்
வருபாதி இடமிதயம் ஆட்கொண்டவள்
களிகதிர் வீச்செலாம் காவியம் ஆனபோல்
கண்கண்ட கூசுடனின் மீனாட்சியைக்
கண்ணுக்குக் கண்ணான வண்ணமா மயிலாளைக்
கரமேற்றுப் புரக்கவென்றே!

பாற்கடலிலிருந்து தோன்றியவள் பங்கயச் செல்வியெனும் திருமகள் தண்ணமுதக் கதிரொளி வீசும் திங்களுடன் பிறந்தவள். செல்வத்திற்குத் தலைவியான அவள் அருளால் வளமான வாழ்வுவரும். திக்கெல்லாம் புகழத்திருவோடிலங்கும் அமெரிக்க நாட்டைத் தலைமையகமாகக் கொண்டு திகழும் திருமாமகளின் தெய்வமணங்கமழும் அழகுச் சீரடித் தாமரைகளைப் பணிந்தேத்த நம்மைப் பணிக்கின்றார் பெருங்கவிக்கோ. அவளுடைய அற்புத அழகு அடியவரை ஆட்கொள்ளும் திறத்தது. களிப்பருளும் தண்கதிர்மதியின் பேரொளியெலாம் காவியமாவது கண்கண்ட உண்மையாகும் அதைப் போல அமர காவிய அன்னையான கூசுடன் மாமயிலாளை, மீனாட்சியை வணங்குவோம். திருமகளின் திருவருள் நம்மைக் காக்குமாக.



## 6. கலைமகள்

பலப்பல கலைகளின் நிலைக்களம் ஆனவள்
பரிதிபல் லாயிரம் ஒளியினள்!
பாரெலாம் வீழாத வித்தாகிக் காலத்தின்
பனுவல்காண் எழுதுகோல் உருவினள்!
மலமல எனவளர் துறைதுறை அறிவியல்
மறைநிறை புதுமைகள் கணினிமேல்
வளர்எதிர் காலமும் வகுத்தசீர் திறத்தினள்!
மாகலை மகளினை வழுத்துவாம்
கலகல எனஒலி கனகமணி முத்துப்பரல்
காற்சிலம்பு குலுங்கிடும் கருணையள்!
கணவனருட் சிவபெருமான் கழுத்தினைப்பிடித்துவிடம்
கண்டத்தில் நிறுத்திய பெருமையள்!
சலசலென ஓடுநதி வைகையாம் பெருக்குசூழ்
தருமநான் மாடக்கூ டல்நகரில்
நனிஓங்கு கோபுரம் போலகலை கூசுடன்வாழ்
நாயகியைக் காக்க வென்றே!

ஆய கலைகள் அறுபத்து நான்கிற்கும் தலைவி கலைமகள் ஆவள் காலத்தை அறியும் ஞான வாணியும் அவளே. கவிதைகள் புனையவும் அழியாத காவியம் படைக்கவும் ஆற்றல் தருபவளும் அவளே. பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமாகவும், தெய்வப்பனுவல்களாகவும், எழுதுகோல் உருவாகவும் இலங்கும் கலைமாமகளை வழ்த்துவோம், பிறவி பெற்ற பயனைப் பெறுவோம் என்கின்றார் பெருங்கவிக்கோ.

அறிவியல் வளர உதவும் அறிவு மடந்தையான கலைமகள் கருணை யுடையவள் தண்டமிழ் நாட்டின் பாண்டியர் ஆண்ட பதியுடையவள். நான் மாடக் கூடலான மதுரை மாநகரில் வானோங்கும் கோபுரம் போல் கூசுடன் வாழ் கலை நாயகியான மீனாட்சியை, வைகை நதி வளமிக்க தாயவளைத் தொழுவோம். கலைமகளின் நிலையான அருள் நம்மைக் காக்குமாக.

## 7. ஏசு, அல்லா - புத்தர்

அண்டங்கள் முற்றிலும் ஆளுமை கண்டபெரும்
ஆசையை அறுத்திட்ட ஞானிபுத்தர்
அகிலமெ லாம்புகழ் தியாகத்தின் இருப்பிடம்
அடர்சிலுவைக் குருதிவடி ஏசுபெம்மான்

கண்டங்கள் ஓரிறை ஒரேகுலம் என்றநிலை
கண்டநபி நாயகம் சல்லல்லாகு
கருதிநலம் வைத்துலகம் பெருகுநலம் ஆகவே
கவிமனத்தால் அஞ்சலிகள் செய்குவாம்!

பண்டெங்கள் தடாதகைப் பிராட்டியாய் வந்துதித்துப்
பரம்பொருள் சோமசுந்த ரர்மணந்து
பரிபால னம்செய்தே திருவிளை யாடல்கள்
பைந்தமிழ்ப் புராணம் கண்டே

கொண்டெங்கள் கூசுடனில் கொலுவீற் றிருக்கும்நம்
கோமதியாள் பாமதி அபிராமியாம்
கூவுகுயில் அமுதினாள் ஆடுமயில் ஒயிலினாள்
கொடைமீனாள் காக்கவென்றே!



### ஏசு, அல்லா - புத்தர்

போதி நிழற் புனிதரெனப் பூதலம் போற்றும் ஞானியாவார் புத்தர் ஆசையை அறுத்தவர் புத்தர். துன்பத்திற்கு வித்தான ஆசையை அகற்றிடப் போதித்தவர் புத்தர்.

தம்மைச் சிலுவையிலிட்ட பாவிகளையும் மன்னிக்கும் படியாகக் கர்த்தரிடம் வேண்டியவர் தியாகத்தின் இருப்பிடமான ஏசுபிரான்

ஓர் இறை ஒரே குலம் என்ற நிலை கண்டவர் நபிகள் நாயகம் என்ற பெருமைக்குரியவர். சாந்திதரும் இசுலாம் மதத்தின் உருவானவர்.

இம்மூவரும் இவ்வையகத்தோர் ஆசையறுத்து, நம்முயிரைத் தியாகம் செய்து, சாந்தி மேற் கொண்டு வாழ்ந்திட வழிகாட்டியவர்கள். இம்முப்பெருந்தியாக சீலர்களையும் கவிதாஞ்சலிகள் செய்வோம் என்று கவிமனங்கொண்ட பெருங்கவிக்கோ கனிவுடன் நம்மையழைக்கிறார்.

மூன்று தனங்களுடன் உதித்த மூன்று வயதுக் குழந்தையைக் கண்டு வருந்திய மலயத்துவன் பாண்டியனை அசரீரி தடாதகை என்று பெயரிட்டுக் குழந்தையை ஆண்மகவைப் போல் வளர்த்துவர உரைத்தது. அந்தடாதகையே பின்னர் மீனாட்சி அன்னையாகித் திக்கு விசயம் புரிந்து இறுதியில் வெற்றி கொண்டு சோமசுந்தரப் பெருமானை மதுரையில் மணந்த கதை உலகறியும். கூசுடன் அன்னை மீனாம்பிகையின் பேரருள் நம்மைக் காக்குமாக.

## 8. மதுரை மீனாட்சி

கலைமதி சூடிடும் அலைமகள் ஒளிவழி
காவெலாம் பாவெலாம் நிறைந்தவள்!
கண்ணுக்குள் மணியென எண்ணத்தின் பொருளென
கருத்துக்குள் விருந்தாகி நிறைந்தவள்!

நிலைமதி களங்கமில் நேர்மையின் மாசிலா
நெஞ்செனும் கோயிலில் நின்றவள்
நேரிய சீரிய மாமதுரை மீனாட்சி
நிகரிலாத அருளரசியை வணங்குவாம்!

விலைமதிப் பில்லாத வினைமாட்சி ஓங்கிடும்
வெற்றிசேர் சுற்றுபகை இலாதபூமி
வேண்டியார் வேண்டியன வேண்டிய படியெலாம்
விரும்பிட வழங்கிடும் உயர்ந்தபூமி!

தலைமதி யாய்த்திகழ் அமெரிக்கா கூசுடனில்
தன்னுரு வேமறு பெண்ணுருவாய்
தாயகம் பிறந்துஅயல் பூமியுள் புகுந்ததாய்
தமிழ்மீனாள் மழலையைக் காக்கவென்றே!



## மதுரை மீனாட்சி

மதியின் மதுர ஒழுக்கின் காரணமாக மதுராபுரியெனப் பெயர் பெற்ற மாமதுரை யம்பதி கலைமகளின், அலைமகள் ஆன திருமகளின் கருணைக் கண்பார்வையால் எல்லா வகையிலும் ஏற்ற முற்றுப் பொலிவோங்கித் திகழ்கிறது. துவாத காந்தத் தலமான மதுரையுரை அன்னை மீனாட்சி காவெலாம் பாவெலாம் பூவெலாம் நிறைந்துள்ளாள்.

''சங்கம் முழங்கும் திரு மதுரை நகர் வளரும் இங்கிதம் பொங்க வரும் எழில்பெறும் மீனாட்சி!'' என்ற பாடல் இசைத்தட்டில் நாற் பத்தைந்து ஆண்டுகட்கு முன் வெளிவந்து பிரபலமாகியுள்ளதை நாடறியும். கண்ணின் மணியாகப் பண்ணின் இசையாக எண்ணங்களின் பொருளாகக் கருத்துக்கு விருந்தாகக் காட்சிதரும் மதுரை அங்கயற் கண்ணியின் நிகரிலா மலர்த்தாளை வணங்குவோம் என்று அன்புடன் பாடுகிறார் பண்புமிகு பெருங்கவிக்கோ.

வினைமாட்சி ஓங்கிடும் வெற்றிசேர் பூமியாக, வேண்டுவார் வேண்டுவன வழங்கிடும் உயர்ந்த பூமியாக விளங்கிடும் அமெரிக்கக் கூசுடன் நகரில், தென் மதுரையாளும் மீனாட்சியே வந்துதித்து அயலார் பூமியில் ஆட்சிசெய்கிறாள். அத்தகைய தமிழ் மீனாளின் தண்ணருள் நம்மைக் காக்குமாக.

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் மீனாட்சியின் அற்புத சரித்திரம் விரிவாகப் பாடப் பெற்றுள்ளதை அன்பர்கள் படித்தின்புறலாம்.

## 9. குமரகுருபரர்

**'பூமேவு செங்கமலப் புத்தேளும்'** என்றுகவி
புனைந்து நா முதன்முதல் பேசலுற்றே
போற்றித் துதித்துகவி ஆற்றல் மிகுந்தசெயல்
புலனுழுத பழமைதேர் சங்கநூற்கள்

தாமேவு புலவர்கள் தமிழ்ஐம்பெருங்காப்பியம்
தவநெறிசேர் ஆழ்வார்கள் நாயன்மார்கள்
தகைநூற்கள் கற்றகவி விற்பனர் குமரகுருபரர்
தண்டமிழ்ப் பாபுகழ்ந் தேத்துவோம்!

பாவேவு சிற்றோடை பாய்ந்தோடும் பேரோடை
பற்றிக் கலந்திடவே புறப்படல்போல்
பாப்புனையும் யாப்புநெறி தோப்பிலோர் சுவைஅறியா
பகுத்தறியும் திறமிலாப் புலவனாலே

நாமேவு செந்தமிழின் நடைமேவு கூசுடன்வாழ்
நல்லவளை வெல்லவளை மீனாட்சியை
நனிபிள்ளைத் தமிழ்நூலும் கனிபிள்ளைத் தமிழாகி
நன்முறை மென்முறை காக்கவேன்றே!



### குமரகுருபரர்

ஐந்து வயதுவரை வாய் பேசாத ஊமையாயிருந்து, திருச்செந்தூர் முருகப் பெருமான் பேரருளால் பேசுஞ் பேறுற்றுக் கவிபாடும் ஆற்றல் பெற்றவர் குமரகுருபரர். பாடும் ஆற்றலைத் தந்த கந்தப் பெருமானின் கருணையை நினைந்து குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவை இயற்றினார். அதனைக் குட்டிக் கந்தபுராணம் என்பர்.

மதுரை அன்னை மீனாட்சியின் மீது செந்தேனில் தமிழைக் குழைத்ததென்ன மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ் பாடினார் குமர குருபரர். அவருடைய கண்களுக்கு அழகின் உயிரோவியமாகக் காட்சி தருகிறாள். ''தொடுக்கும் கடவுட் பழம்பாடல்'' என்ற அருமையான வருகைப் பருவத்துப் பாடலின் ''உடுக்கும் புவனம் கடந்துநின்ற ஒருவன் திருவு ளத்தில் எழிலொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே!'' என்று குமரகுருவரர் பாடியிருப்பது கவிதைச் சுவைமிகுந்து விளங்குவதை அன்பர்கள் சுவைத்து இன்புறலாம். கலைமகளைப் போற்றும் சகலகலா வல்லிமாலையும் பாடியவர் குமர குருபரரே. அப்படிப்பட்ட கோமான் குமர குருபரரின் சால்பினைப் புகழ்ந்தேத்துவோம் என்கின்றார் ஈடில்லாப் புலவரான பெருங்கவிக்கோ.

நல்ல செந்தமிழ் நாமேவிக் களிநடம் புரியும் பாமேவும் கூசுடன் நகரில் வாழும் நல்லவளான மீனாட்சியின் இப்பிள்ளைத் தமிழ் நூலும் கனியென இனிக்கும் பிள்ளைத் தமிழாகி நம்மை அன்னையின் பேரருளுக்குப் பாத்திரமாக்கிக் காக்குமாக

## 10. சாதுகுரு

தவநெறிக் காவலராய்த் தமிழ்நெறித் தேவரெனச்
சார்பாம ராதம்மில் வாழ்ந்தகுருவே!
தக்கநெறி பக்திநெறி வள்ளலார் தாயுமானார்
சாகாத சித்தர்கள் மொத்தஉருவே!

சிவநெறியும் மால்நெறியும் திகழ்ராம கிருட்டிணர்
திருவள்ளுவர் கிறித்துஇசு லாம்மற்ற
தேசமெலாம் ஒன்றான புதுமைநெறி காண்ஞானம்
தேர்ந்தகுரு சாதுகுரு தாள்பணிகுவோம்!

புவனநெறி மேற்போற்றி பொதுமைசமம் வழங்குகின்ற
புண்ணிய அமெரிக்கத் திருநாட்டில்
புடம்போட்ட பூசைவளர் 'திவானெனும் பெருமகன்
போட்டவித் தால்முளை கற்பகத்தாள்!

கவனநெறி இந்துபக்திக் குழுவளர்க்கும் ஆன்மநெறி
கண்ணப்பர் பிள்ளை ஆனைமுகனாய்
கண்டாடிக் கொண்டாடிக் கழனிவளர் கூசுடன்வாழ்
கண்வளர் மீனாட்சி காக்கவென்றே!

தவநெறிக் காவலராகத் தமிழ் நெறித் தேவராகத் திகழ்ந்தவர் அபிராமத்தில் வாழ்ந்த சாதுகுரு தாயுமானவர், வள்ளலார் மற்றும் என்றும் சாகாத வித்தை தேர்ந்த சித்தர்களின் மொத்த உருவானவர் சாதுகுரு.

சிவனிடத்தும் திருமாலிடத்தும் இராம கிருட்டிணரிடத்தும் ஏசுவிடத்தும் நபி நாயகத்திடத்தும் பக்தியுடைய பண்பாளர் சாதுகுரு. புறப்பற்றும் அகப்பற்றும் முற்றும் துறந்த சமரச ஞானியாவார் சாதுகுரு!. அன்னவரைப்பணிகுவாம் என்று நம்மை அழைக்கிறார் கவிப் பேரரசர் பெருங்கவிக்கோ.

பொதுமைநெறி மேவும் புண்ணிய நாடு அமெரிக்க நாடாகும். அந்நாட்டைச் சேர்ந்த கூசுடன் நகரில் வாழ்பவர் கண்ணப்பர் என்னும் பேராளர் அவர் பக்தியுடன் போற்றிக் கொண்டாடும் கருணைக் கண் பார்வை மேவும் மீனாட்சி அன்னை சாது குருவை வாழ்த்தி அனைவரையும் அவளருள் காக்குமாக.

# 2. செங்கீரைப் பருவம்

இஃது ஐந்தாம் திங்களில் நிகழும் நிகழ்ச்சி கூறுவது. அது பிள்ளை தலையெடுத்து, முகமசைத் தாடுவதாகும். ஒரு காலை முடக்கி, ஒருகாலை நிமிர்த்தி இரண்டு கைகளையும் நிலத்திலூன்றி முகத்தைமேல் நிமிர்த்தாடுதல்.

கமழ்மணம் மிகுந்தநீ ராட்டிமணிப் பேரொளி
　　காண்திசைப் பக்கமெல்லாம்
கடந்திடக் கண்மணி கைமேவு மழலையைக்
　　கவின்பட் டாடைகொண் டொற்றி

அமிழ்தினும் இனியாளை அழகொளிர் துகிலினால்
　　அருள்மேனி தான்து வட்டி
அத்திருநல் உடல்தங்கும் அந்நீர்த் துளிகளை
　　அணிகாது கண்உந்தி தான்துடவி

தமிழ்மணம் வீசுபுகழ்ச் சந்தனத் தென்றல்வெல்
　　தவமனம் முதிர்ந்த கோலம்
தண்டலைகள் மண்டுகா தனிப்புகழ் அமெரிக்கா
　　தகையெலாம் திரண்ட வடிவாய்த்

திமிரறியா அடியவர் மலர்சொரிந்(து) ஏத்துகுயில்
　　செங்கீரை ஆடி அருளே!
தெய்வீக நாதமாடு செங்கரம் ஊன்றியே
　　செங்கீரை ஆடி அருளே! 1



1. அழகுக் குழந்தை மீனாட்சியை மணங்கமழும் நீராடச் செய்து, மழலை யுதிர்க்கும் அவள் திருமேனியைப் பட்டாடையினால் நீரை ஒத்தி யெடுத்து, காதிலும் கண்ணிலும் வயிற்றிலும் காணப்படும் நீர்த்துளி களைத் துணியினால் துவட்டத் தோன்றும் அவள் பேரழகுப் பேரின்பம் தருவதாகும். அவள் திருமேனியில் பூசப் பெறும் சந்தனத் தென்றல் மணம் தமிழ் மணமாகக் கமழ்கிறது. இவ்வாறு வருணிக்கிறார் இணையிலாக் கவிஞர் பெருந்தகை பெருங்கவிக்கோ.

குழந்தையான மீனாட்சி ஆடிவரும் அழகே. அவள் ஆடிக்கொண்டு, அசைந்துகொண்டு, பின்னர் சற்று விரைவாக அவள் ஓடிவருவது போல் தோன்றுவதைக் காண உள்ளம் குளிர்கிறது. ''ஓடிவருகையிலே - கண்ணம்மா, உள்ளம் குளிருதடி'' என்ற மகாகவி பாரதியாரின் வாக்கு இங்கு நினைவு கூரத்தக்கது.

பூஞ்சோலைகள் சூழ் புகழ்மிகு அமெரிக்கப் பொன்னாட்டின் புகழை மேலும் ஒப்பில்லாதபடி அதிகரிக்கச் செய்யும் கூடின் தனிநகரில் இனிதுறையும் மீன்விழிப் பெண்ணரசே!

ஆணவத் திமிர் அறியாத அடியவர்கள் அன்புடன் சொரிகின்ற பக்திமன மலர்களால் ஆனந்தம் கொள்ளும் இன்பத்தமிழ்க் குயிலான கயற்கண்ணியே! செம்மையாகக் காண்போரின் சிந்தை இனிக்கும் வண்ணம் தத்தித்தத்தித் தகதிமி தகதிமி என்று செங்கீரை ஆடிஅருளுகவே நீ!

''நாதவிந்து கலாதி''யான தெய்வீகநாதம் எழ நீ, நின் செந்தாமரைக் கரம் ஊன்றியே, அம்பிகையே செங்கீரை ஆடுகவே!

செந்தாளை ஒருதாளைச் செந்தளிரின் தண்டாகச்
செவ்விய தாய்மடக்கி
தாமரைப் பூந்தண்டின் உயர்உச்சி மலர்கின்ற
திருத்தலை தனையெடுத்தே
விந்தைகள் ஒருங்கிணை நந்தாத கரங்களை
வியன்நிலம் தன்னில் ஊன்றி
விரிவைய அழகெலாம் உருவாகி வந்தமுகம்
மேற்றூக்கி அண்ணாந் திட்டே
மந்தார மாருதம் மணக்கின்ற தகைமணம்
மாமகள் மருங்கு மல்க
மனத்தினை ஈர்த்திடும் மனைமாட்சி அன்னையாய்
வயமாகும் வண்ண ஒளியாள்
செந்திரு செவிநுகர் மதலைசொற் கனிஉதிர்
செங்கீரை ஆடி அருளே!
சிந்தனைச் செல்வர்கள் செந்தமிழ்ச் சுவைசேயே
செங்கீரை ஆடி அருளே! 2

சிந்தனைச் செல்வர்களான கலைமாச் செல்வர்கள் சுவைக்கின்ற செந்தமிழாகத் திகழ்பவளே! பெண் திருக்குழந்தையே!

இரு செம்பாதங்களுடைய நீ உன்னுடைய ஒரு பாதத்தைச் செந்தளிர்த் தண்டாக மடக்கி. அத்தாமரைப் பூந்தண்டின் உச்சியில் மலரும் உன் சிரத்தைத் தூக்கி உயர்த்தி உன் செங்கரங்களைப் பூமியில் ஊன்றிக. விரிந்த இந்த வையகத்தின் அழகெலாம் திரண்டு வந்த நின் தூக்கிய மலர்முகத்தால் அண்ணாந்து பார்த்து ஆடுகவே.

பூங்காற்று வீசும் பூம்பொழிலின் மணம் எங்கும் கமழ, ஆடிவரும் மாமகளே! மனத்தினை ஈர்த்திடும் வண்ண ஒளியாளே!

செவி நுகரச் செங்கனிவாயால் சிந்தை மகிழ்விக்கும் மதலைச் சொல்லுதிர்க்கும் இனிக்கும் கனியாளே! மீனாட்சியே! செங்கீரை ஆடி அருளுகவே, நீ செங்கீரை ஆடி அருளுகவே!

அழகொழுகும் குழவியான மீனாட்சியே!



அமரர்களின் தலைவனுடை அருமனையாள் வந்திருந்தே
அழகொழுகு குழவியினை மடியிருத்தி
ஆவலுறு தாவுமகள் ஆரமுதக் குமுதஇதழ்
அங்கையில் மரகதத்தை அடிவருடி
தமர்கள்பலர் குலவிமகிழ் தரளமுறு முறுவலினைத்
தான்சிந்தும் பிறைநெற்றி தனைநீவி
செந்திருவார் புத்தழகுச் செம்பரிதி முகமனைத்துச்
செவ்விஅருள் சிந்தருவி மகிழ்ந்தோச்சி
நமருவக்கும் ஒளிர்மதியில் ஒருமுத்தம் உறவாடி
நறவுதிரும் வளர்நாவில் உதிகருணை
நனிபதித்து நகைவளர்த்து நன்நெஞ்ச மிசைவைத்து
நாடுபதச் சொல்லாட்டி நடைகுலுக்கி
சமயமெலாம் ஒன்றாகத் தழுவுநாடு வருதேவி
செங்கீரை ஆடி அருளே
சிந்தனையுள் ஓங்குறவு மாந்தர்களின் பசுங்கிள்ளை
செங்கீரை ஆடி அருளே! 3

தேவர்களின் தலைவன் இந்திரன் அவனுடைய மனைவி இந்திராணி. அவள் உன்னை மடியில் இருத்திக் குமுதமலர் போன்ற உன் செவ்விதழ் வாய்ந்த வண்ணம் கண்டு, மரகதப் பச்சை யொளிவீசும் உன் பாதத்தை அழகிய கையால் வருடுகிறாள்.

உறவினர் பலர் உள்ள மகிழ்வுடன் புன்னகை சிந்தும் முத்துப் பற்களைக் கண்டு, உன் பிறைநெற்றியை, இன்முகத்தைக் கண்டு, ஒரு முத்தம் தந்து உன்னுடன் உறவாடுகின்றனர். தேன் என இனிப்பது உன் திருநாக்கு. மதி உதயமானதுபோல் உன்னிடத்தில் கருணை உதயமாகிய தால், நீ கருணையின் உருவினள். அவ்வுருவை அகத்திற்பதியாதவர் இல்லை. என்கிறார் பெருங்கவிக்கோ. அன்னை நடைகுலுக்கி வருவதையும் காண தன்னை அவர் அழைக்கின்றார்.

மீனாட்சி யெனும் மேன்மையான அத்திருக்குழந்தை சமயமெலாம் ஒன்றாக்கி, நாடு தழுவ வரும் பெருந்தேவியாவள். சமய பேதமின்றி ஏற்றுக் கொள்பவளே! செங்கீரை நீ ஆடி அருளுகவே!

சிந்தனை யோங்கும் உறவுடையோர் வந்தனை செய்யவரும் பச்சைப் பசுங்கிளியே, அம்மையே செங்கீரை நீ ஆடி அருளுகவே!

அருளாளன் சிவபெருமான் ஐந்தொழில் சக்திகளை
அஞ்சன விழியாளே நோக்கினாள்
அவனிகள் முற்றிலும் அணியமாய் ஆக்கிடும்
அனுபவம் முகிழ்த்த வெற்றியாள்

பொருளெலாம் மேம்படும் புறம்புறம் ஊக்கிடும்
பூரிக்கும் வாழ்வருள் அமைதியாள்
பொழில்களால் எழில்களால் விழிபெரும் விருந்தினைப்
புனலாடித் திளைத்த மாந்துளாள்

கருவெலாம் மருவிலாப் பெருநலம் ஈந்திடும்
கனகமொளிர் பவள ஒளியால்
கதியாகி விதியாகிப் பதியெலாம் புரந்திடும்
களிபெரும் சிந்தை நிலையால்

திருவெலாம் ஈந்திடும் தெய்வீக அன்னையே
செங்கீரை ஆடி அருளே!
செந்தேன் வடிந்தோடும் தேசப் பசுங்கிள்ளை
செங்கீரை ஆடி அருளே! 4

அருளுடைய பரம் பொருளான சிவபொருமான் ஐந்தொழில் புரிந்திடும் ஆற்றலைத் தரும் மீனாட்சி மைவிழிப் பார்வையினள் உலகங்கள் யாவும் ஒளிபெறச் செய்யும் உயர் அனுபவம் மிகுந்த வெற்றியினாள். மேவும் பொருளெலாம் மேம்படச் செய்து ஊக்கமும் ஆக்கமும் தந்து உள்ளம் பூரிக்கும் வாழ்வினை யருளுவாள். விழிக்கு விருந்தான பொழில்களில் எழிலுறப் பொங்கும் புனலாடித் திளைத்து வீற்றுளாள்.

மாசு மருவின்றிக் கருவெலாம் உருப்பெறப் பெருநலம் தருகிறாள் மரகத மீனாட்சி யெனும் குழந்தை என்கிறார் பெருங்கவிக்கோ.

கதியும் விதியுமாகிப் பதியெலாம் காப்பவள் கருணைத் தாய் மீனாட்சி. பொன்னிறச் செந்நிற ஒளியால், களிப்பெழும் சிந்தையால் திருவனைத்தும் தருகின்ற தெய்வத்தாயே! செங்கீரை ஆடி நீ அருளுகவே!

செந்தேனே! தேசுமிகும் பசுங்கிளியே! அன்னையே, நீ செங்கீரை ஆடி அருளுகவே!



அவ்விய நெஞ்சத்தார் அடைந்திட முடியாத
அணையாத சோதி விளக்கே
அறமொரு உருவாகி அருமருந்தாகியே
அடியவர் ஊக்கும் உயிர்ப்பே

எவ்வாறு தீவினை எய்திட வந்தாலும்
ஈடிலார் காக்கும் கணிப்பே!
எக்காலும் முக்காலும் தக்கவர் முன்னேற்றும்
எளியவர் எண்ண விழிப்பே!

கொவ்வைநல் குவிஇதழ் கொடைமனக் குழவியே
கொண்டாடி மகிழும் மகிழ்வே!
கொடுப்பாரும் எடுப்பாரும் குறிக்கோள் நடைமுறை
கூடுசம மாக்கும் பொருளே!

செவ்விய வெலாம் தரும் திகழ்பரா சக்தியே
செங்கீரை ஆடி அருளே!
சிந்தனையால் ஓங்குயர்வு மாந்தர்கள் பசுங்கிள்ளை
செங்கீரை ஆடி அருளே! 5

அழுக்காறு நிறைந்த வன்னெஞ்சர் அணுக முடியாத, என்றும் அணையாத அருட்சோதி விளக்கானவளே! அறத்தின் உருவாகி, அடியவர் வினை நீக்கும் அருமருந்தானவளே! அடியாரை ஊக்கும் உயிர்ப்பானவளே!

முன்செய்த தீவினை எவ்வாறு பல வகைகளில் முனைந்து வருத்திட வந்தாலும் உன்னிடம் பத்தியுள்ள உண்மையன்பரைக் காக்கும் காலக் கணக்கானவளே! முக்காலமும் அறிந்தவளே! எக்காலமும் தகுதியுடையோரை முன்னேற்றம் அடையச் செய்பவளே! ஏழை எளியோரை மேலேற்றும் எண்ணத்தில் மிகவிழிப்பாக இருப்பவளே என்று பாடுகின்ற பாவரசர் பெருங்கவிக்கோவின் கனிந்த சிந்தை இங்குத் தெளிவாகக் கவிஞர்யாவரும் உணர்தற்குரியது.

கொவ்வைச் செவ்வாய் கொண்டவளே! கவிந்த மலர்ந்த வாயிதழ் மணங்கொண்ட குழவி மீனாட்சியே! எது வேண்டினும் இல்லையென்னாத கொடை வள்ளலைப் போன்று கொடுப்பவளே! கொண்டாடி மகிழும் கோல மாமயிலே! கொடுக்கும் தன்மையோரின் குறிக்கோள் நிறைவேறச் செய்பவளே! சமவழி காட்டும் சத்தியளே! செவ்விய நல்வரம் தந்து சீரோங்கித் திகழும் ஆதிபராசக்தியெனும் முழுமுதல் அன்னையே! சிந்தனை உயர்ந்தவரை ஓங்குவிக்கும் செழும்பசுங்கிளியான மீனாட்சியே! நீ செங்கீரை ஆடி அருளுகவே! அன்னையே, நீ செங்கீரை ஆடி அருளுகவே!

ஓங்குமறை தாங்கிவளர் உன்னத இயலிசை
 ஓங்கார வித்தாகும் முளையே!
உவப்பார்க்கும் கசப்பார்க்கும் ஒரேநிலை புந்தியில்
 உந்துநிலை முந்துதரும் ஊற்றே!

தாங்குமறை நீதிநெறி தாங்கிஒரு வரமாகத்
 தாரணியில் ஆட்சிசெயும் முரசே!
சால்புடையார் வாழ்வாகி சங்குப்பால் தானூட்டும்
 தலைவிக்குத் தலைமைகொள் அரசி!

நீங்காத பேரின்பம் நிறைவாகும் வழிகாண
 நெடியவழிப் பாதைஅமை நெஞ்சே!
நிகரிலா வான்மதி நிலத்தினில் விளையாட
 நேரிறங்கு வந்தபெரும் நெகிழ்வே!

தேங்காத பேராறே தேன்காவே பூங்காவே
 செங்கீரை ஆடி அருளே!
சிந்தனையால் ஓங்குயர்வு மாந்தர்கள் பசுங்கிள்ளை
 செங்கீரை ஆடி அருளே! 6



6. ஓங்கார வேத வித்தானவளே! மறைநான்கிலும் ஓங்கியொளிர்பவள் உலக உயிர்களைத் தாங்கும் தாயவளே! முத்தமிழெனும் இயல் இசை நாடகம் ஆனவளே! எல்லாவற்றிற்கும் ஆதார முளையாக இருப்பவளே! மூத்தவளே! களிப்புடையோரையும் உள்ளக் கசப்புடையோரையும் ஒன்றாகச் சமமாகப் புத்தியிற் கொள்பவளே! அவர்களை ஊக்கமுறச் செய்தும் அவையில் முந்தியுறச் செய்தும் அவர்களின் நல்வாழ்விற்கோர் ஊற்றுக் கண்ணாக இருப்பவளே!

வேத நீதி நெறிதவறாது வியனுலகில் ஆட்சி செய்யும் ஒப்பற்றவளே! ஞான முரசொலிக்கப் பண்ணி ஞாலத்தாரை விழிப்படையச் செய்பவளே! சால்புடையோரின் வாழ்வானவளே! சங்கில் பால் ஊற்றிக் குழந்தைக்கு ஊட்டும் குடும்பத் தாய்த் தலைவியரைத் தலைமை தாங்கியாளும் அரசியானவளே! ஒரு தாயின் உள்ளத்தை அனுபவத்தால் உணர்ந்த மாபெருங்கவிஞர் பிரான் பெருங்கவிக்கோ அன்னை மீனாட்சியெனும் அமுதக் குழந்தையை விளித்துப் பாடுவது சிறப்பாக இங்கு வெளிப்படுகிறது.

நிறைவான பேரின்பம் நீங்காது வழிகாணும் நீண்டபாதை அமைத்துத் தரும் கருணை நெஞ்சம் உடையவளே! வானிலிருக்கும் வண்ணமதி வளர் மண்ணில் விளையாட நேரில் இறங்கிவந்தாற்போன்ற தோற்றம் வாய்ந்தவளே! நெகிழ்ச்சியுடையவளே!

தண்ணீர் தேங்காது தரையில் சீராக ஓடிக் கொண்டிருக்கும் பேராறாகத் திகழ்பவளே! தேன் சிந்தும் மலர்கள் பூக்கும் தெள்ளிய பூங்காவாக விளங்குபவளே! செய்கீரை நீ ஆடி அருளுகவே!

சிந்தனை உயர்ந்தோர் ஏத்தும் பசுங்கிளியானவளே! செங்கீரை நீ ஆடி அருளுகவே மீனாட்சி அன்னையே!

மகவாகிக் குழலாகி யாழாகி இசையாகி
மாண்பாகிக் காண்பார்கண் விழியே!
மதமெலாம் கடந்தபெரும் மார்க்கத்தின் மார்க்கமா
மாநாடு அமெரிக்கா வழியே!

தகவாகும் சான்றோரின் தகுதியே மிகுதிவளர்
சான்றாண்மை யாளர்தம் பொழிலே
சாதிநெறி சாராத மேதினியில் புதுநீதிச்
சத்திய வடிவுஉத் தமியே!

சிகரங் களுக்கெலாம் சிகரமாம் அமெரிக்க
தேசத்துச் சிகரமொளிர் கதிரே!
செம்மையர் மடிவிளை யாடிடும் பாசத்தின்
செல்வியே செந்தூர வடிவே!

திகட்டாத ஆரமுதத்தின்பபே ரின்பமே
செங்கீரை ஆடி அருளே!
செந்தேன் வடிந்தோடும் தேசப் பசுங்கிள்ளை
செங்கீரை ஆடி அருளே! 7

*மலயத்துவச் பாண்டியனின் மகவான மதுரை மீனாட்சி அன்னையே! குழலிசையானவளே! யாழிசை யானவளே! ஏழிசையானவளே! மாண்புடையோர் காண்கின்ற கண்விழியாக இருப்பவளே! மதங்கள் யாவும் கடந்த மார்க்கங்களுக்கெல்லாம் மார்க்கம் காட்டும் நாடு அமெரிக்க நாடு என்று மாநிலம் போற்றும் நாட்டின் வழிகாட்டியாக இருப்பவளே! தகுதி மிகுதியாகவுள்ள சான்றோரின் மாறாத வண்ணம் புதுப்பொது நீதி வழங்கும் சத்திய வடிவுகொண்ட உத்திமியாக ஒளிர்பவளே! இவ்வாறு பாடுகின்றார் இனிய தமிழ்ப் பெருங்கவிக்கோ!*

*சிகரங்களுக்கெல்லாம் மேலான சிகரம் அமெரிக்க நாடாம் தனிச் சிகரம். அச்சிகரத்தின் கண் ஒளிவீசும் கதிரானவளே! செம்மையுடையோரின் மடியில் செம்மை விளையாடுபவளே! களைப்பறியாதவளே! பாசமிகு நேசமிகு செல்வியே! செந்தூர வடிவமானவளே!*

*தெவிட்டாத பேரின்பத் தெள்ள முதம் ஆனவளே! செங்கீரை நீ ஆடி அருளுகவே! தேசு நிறைந்த பசுங்கிளியானவளே! நீ ஆடி அருளுகவே!*



நன்னிலை களுக்கெல்லாம் நன்னிலைக் கொருநாடு
நாடுக ளுக்கெலாம் தலைமை
நாடிடும் நாடாகும் நன்றமெ ரிக்காவில்
நனிகுளிர் நீராடு தேவியே!

முன்னிலை களுக்கெலாம் முன்னிலை முயல்வார்க்கே
முப்போதும் எப்போதும் வந்தருள்
முழுமைதேர் ஆளுமை முதிர்வளக் கேண்மைகள்
முற்றிடச் செய்திடும் ஆவியே!

தன்னிலை அறியாதார் எந்நிலை உயர்ந்தாலும்
தகாத நிலைதந்தாய் மேவியே!
தவஆன்மத் தியாகத்தால் சிவபோகத் தாகத்தால்
சங்கொலித் திடும்அருள் கூவியே

தென்னவர் குடிவளர் மன்னவர் அன்னையே
செங்கீரை ஆடி அருளே!
செந்தேன் வடிந்தோடும் தேசப் பசுங்கிள்ளை
செங்கீரை ஆடி அருளே! 8

*நன்னிலைகளுக் கெல்லாம் நன்னிலையான ஒரு தனிநாடு அது நாடுகளுக்கெல்லாம் தலைமையான நாடு. அந்நாடு அமெரிக்கத் திருநாடு. அந்நாட்டின் குளிர்ந்த நீராடும் தேவியே! மீனாட்சியே!*

*எப்போதும் முன்னிலை வகிக்கும் முயற்சியுடையோர்க்கு முப்போதும் தப்பாது தண்ணருள் புரிபவளே! முழுமையுடையோரின் நாட்டெல்லாம் முழுமதியாகவளர்ந்திடச் செய்பவளே! ஆளுமை முதிர்ந்த அவர்களின் ஆவியானவளே! அவ்ஆவியுள் தாமும் கலந்து அனுபவித்துப் பாடுகின்றார் முதிர்ந்த அனுபவ ஞானி பெருங்கவிக்கோ.*

*தன்னுடைய உண்மைநிலை இன்னதென்று அறியாதவர்கள் எந்த [illegible] நிலையில் உயர்ந்திருந்த போதிலும் அவர்களை நீ அங்கீகரிக்க [illegible] அன்னையே! தவத்தாலும் உயிர்த்தியாகத்தாலும் சிவயோகத் தாகம் உயர்ந்தோர்க்கு அருள்பவளே! அதைச் சங்கொளிப்பதுபோல் [illegible]!*

*தென்பாண்டிய நாட்டு மன்னவர்களின் குடியில் திருவுடன் வளரும் அன்னை மீனாட்சியே! செங்கீரை நீ ஆடி அருளுகவே! ஒளிமிகும் பசுங்கிளி [illegible] செந்தேனாக இனிப்பவளே! செங்கீரை நீ ஆடி அருளுகவே!*

பதம்பதம் இதந்தரும் மனமொழி குவிந்தே
பணிகளி னோடாடப்
படைபுடை நடைதொடு தடைஉடை உறுதியோ
பதைபதைத் தேஆட
இதம்இதம் நிதம்நிதம் இசைதரு இனிமையும்
இன்பமோ டாடஆட
இருந்தருள் அருந்தவ விருந்தருள் மழலையோ
இங்கங் காடஆட
விதவித மொழிகளை அதனதன் சுவைகளில்
வியந்தரு ளாடஆட
வெற்றிசால் விற்பனர் பற்றிலா ஞானியர்
விளித்தழைத் தாடஆட
அதனதன் மொழிவழி துயர்களை - மதலையே
ஆடுக செங்கீரை!
ஆதிஅவ் உயிர்களின் அன்னையே அம்பிகை
ஆடுக செங்கீரை! 9

இதந்தரும் பதங்கள் மனம், வாக்கு இரண்டும் குவிந்திடச் செய்கின்ற பணிகளிளோடு ஆடுகின்றன. படைகள் இடம் பெயர்ந்த நடை கொண்டு நடைகளைத் தகர்த்து உடைகின்ற உறுதிதானும் பதைபதைத்தே ஆடுகிறது.

தினந்தோறும் இதம்பல கூட்டும் இசையின் இனிமையும் இன்பம் தந்து ஆடுகிறது குழந்தை மீனாட்சி இருந்த வண்ணமே இதயத்திற்குத் தவவிருந்தாக அமைந்த மழலை மொழிந்து இங்கும் அங்கும் ஆடுகிறது.

பல திறப்பட்ட மொழிகள் அவற்றின் கலைகள் வெளிப்பட வியக்கும் படி ஆடுகின்றன வெற்றி நிறைந்த வேத விற்பனர்களும் பற்றற்ற பரம ஞானியர்களும் கூவியழைத்து ஆடுகின்றனர். இவ்வாறு ஆடும் அன்னையின் அழகை விவரிக்கின்றார் பெருங்கவிக்கோ.

ஒவ்வொரு மொழியின்வழியானது வழுவாதவாறு துயரைப் போக் கிடச் செய்யும் மழலை பேசும் மீனாட்சித் தாயே! நீ செங்கீரை ஆடுகவே!

ஆதிபராசக்தியே! அகில உயிர்களுக்கும் அன்னையானவளே! மீனாட்சிக் குழந்தை அம்பிகையே! நீ செங்கீரை ஆடுகவே!

அன்னை ஆட ஆட அண்ட சராசரங்களும் ஆடுகின்றன. அனைத்து ஆட்டங்களுக்கும் தாய்தான் மூலகாரணம் என்று அறிய முடிகிறது.



கண்டமும் எண்டிசை கடந்து நிறைபணி
கைகொடுத் தேஆட
காட்சியும் மாட்சியும் மீட்சிகாண் வையகம்
கதித்தேழுந்தே ஆட
வெண்டிரை தண்டிரை மேகமும் விண்ணிடி
வினைசெயல் கூத்தாட
வெறியெலாம் நெறியினால் செறிமுறை நிமிர்ந்தெழும்
வெற்றிகள் சூழ்ந்தாட
தொண்டர்கள் தொண்டதே மன்பதை வென்றிடத்
தோம்தோம் என்றாட
தொன்மையாம் வையகம் மாசறு காசறு
துறையெலாம் வென்றாட
அண்டம எந்திட் டருளிடு தயாபரி
ஆடுக செங்கீரை
ஆதிக்கும் ஆதியே அன்னை மீனாட்சியே
ஆடுக செங்கீரை! 10

10. எண்டிசை யெங்கும் காண்கின்ற கண்டங்களெல்லாம் கடந்திடும் படியாக ஏற்றுக் கொண்ட பண்கள் யாவும் கை கொடுத்தே ஆடுகின்றன. காண்கின்ற மாட்சி மிக்க காட்சியும் எல்லாவற்றினின்றும் மீட்சிதரும் உலகம் கதித்தெழுந்து ஆடுகிறது.

வெண்மேகமும் கருமேகமும் விண்விளைக்கும் இடிமுழக்கமும் அவற்றின் செயல்கள் கூடும் வண்ணம் கூத்தாடுகின்றன. வெறித்தனங்களெல்லாம் அறவே மாறிட நிமிர்ந்தெழும் வெற்றிகள் சூழ்ந்திட ஆடுகின்றன.

தொண்டு புரிவோர்கள் கொண்ட உலகம் வெல்லும் வண்ணம் தோம்தோம் என்ற தாள ஒலியெழுப்பி ஆடுகிறது. தொன்மையான வையகம் நிறைந்த துறைகளெல்லாம் மாசின்றிப் பேரொளியுடன், வெற்றியுடன் முறைமாறுபாடின்றி வெற்றியை விளைத்தாடுகின்றன என்கிறார் அம்பிகையின் குழந்தை அருள் ஆட்டத்தை அகக் கண்ணாற் கண்ட கவி ஞானி பெருங்கவிக்கோ.

அண்டமெலாம் பரந்து நிறைந்தவளே! அருளும் ஆற்றலுடைய தயாபரியே! நீ, செங்கீரை ஆடுகவே! முதன்மைக்கும் முதன்மையான மூலசக்தித்தாயே! மீனாட்சி அன்னையே! நீ செங்கீரை ஆடுகவே!

குப்புற்றநிலையில் தலைக்காலாட்டி தூக்கி மடித்துப் பாருலகெல்லாம் வியக்கும்படி ஆடியாடிவரும் அன்னையின் சிறப்பு முழுவதும் உள்ளடக்கியது இச் செங்கீரைப் பருவம்.

இப்பருவத்தைப் பல தடவைகள் படித்தால், அம்பிகையான மீனாட்சியைக் குழந்தையாக ஆடியாடி வருவதை மனக்கண்ணாற் கண்டு மகிழலாம். அத்துடன் அம்பிகையின் பேரருளுக்குப் பாத்திரமாகலாம். குழந்தை மீனாட்சி குவலயத்தைத் தன் அருள் ஆட்டத்தால் பலபடியாக இயக்கி ஆடவைக்கின்றாள் என்பதை இச் செங்கீரைப் பருவம் இனிது விளக்குகிறது.

# 3. தாலப்பருவம்

இஃது ஏழாந்திங்களில் நிகழ்வது. பிள்ளையைத் தொட்டிலிட்டுப் பெண்கள் இன்னிசை பாடி யாட்டுவதாகும் தொட்டில் - தொங்குந்தொட்டில் ஆதலால் தாலம் எனவந்தது. தாலுதல் - தாலம் தொங்கும் அணிக்குத்தாவி என்னும் பெயர் வழங்குதல் காண்க

உலகம் வியக்கும் மாமதுரை
உயர்வான் இடிக்கும் கோபுரங்கள்!
உரிமை விளையாட் டுடைசிவனார்
ஒருபால் இதயத் தமர்தேவி

நிலங்கள் எல்லாம் புகழ்ந்தேத்தும்
நெடுஞ்சா லைகள் இணைந்தோச்சும்
நிகரில் லாத வளநாடு
நிலைத்த ஒருமா மணிமகளே!

அலகில் லாத முதிர்வனங்கள்
அரசோச் சும்நல் மாநிலமாம்
அறிஞர் சூழ்ந்த டெக்சாசில்
ஆளுமை அருளும் ஒளிர்நடையே!

தலமெல் லாம்பணி மாமறையே
தமிழே தாலோ தாலேலோ!
சான்றோர் போற்றும் தவமகளே
சால்பே தாலே தாலேலோ! 1

குழந்தையைத் தொட்டிலிட்டு இனிமையான தாலாட்டுப்பாட்டைப் பாடித் தொட்டிலையாட்டுவது தாய்மார்களின் வழக்கம். இத்தாலப் பருவம் இசையினிமையுடையது.

மீனாட்சி வாழும் மாமதுரைக் கோபுரங்கள் உலகம் வியக்கும் படியாக உயர்வானத்தைத் தொடும்படியாக அமைந்தவை. திருவிளையாடல் களைச் செய்யும் சிவனாரான சோமசுந்தரப் பெருமானாரின் இதயத்தில் இடப் பாதியிலும் அமர்ந்துள்ளாள் தேவி அங்கயற்கண்ணி.

பொங்கும் புகழ்தங்கும் நெடுங்சாலைகள் நிறைந்த நிலைத்த வள மிக்க நாடான மாமதுரையில் திருக்கோயில் கொண்டபாண்டிய மாமகளே!

அளவிலாத அழகு முதிர்ந்த வனங்கள் அரசு செய்யும் படியான நல்ல மாநிலமான அமெரிக்காவில், அறிஞர்கள் வாழும் டெக் சாசில் ஆண்டு வருகின்ற அருளொளிரும் நடை கொண்டவளே என்று பாடுகின்றார் கவிஞர் பெருமான் பெருங்கவிக்கோ.

தலங்கள் யாவும் பணிகின்ற மாமறையானவளே! தமிழ்த்தாய் மீனாட்சியே! தாலோ தாலேலோ! தவவலிமையுடைய சான்றோர்கள் போற்றும் புண்ணியத் திருமகளே! சால்புடையவளே! தாலோ தாலேலோ! தாலேலோ என்ற பதத்தின் கடைசியெழுத்தில் 'ஓ' என்கின்ற ஓங்காரம் ஒலிப்பதால், ஓமெனும் பிரணவமந்திர சத்தியே மீனாட்சி அன்னை யென்பதை உணர்ந்து கொள்ளலாம்.



வையகம் முற்றும் ஈன்றவளே
வரம்போல் பூமியுள் வந்தவளே!
வான்வெளி எல்லை அழகினளே
வாய்மை வடிவம் பெற்றவளே

மையலில் எண்ணம் மகிழ்பவளே
வளர்க்கும் புதுமைக் குலமகளே!
மருந்தின் மருந்தாய்ச் சிவன்கணவன்
மருந்தாய் விருந்தாய் இருந்தவளே!

கையக வாய்ப்புக் கொருநாடு
கணினித் திறமை இணைநாடு
காலப் புயலின் குருநாடு
கடமை அமெரிக் காநாடு!

தையல் வனப்பின் அணிமுடியே
தமிழே தாலோ தாலேலோ!
சங்கம் அமர்ந்த சிவன்தேவி
தாலோ தாலே தாலேலோ! 2

இவ்வுலகெல்லாம் ஈன்ற மீனாட்சியெனும் தாயவளே! இப்பூமியின் கண் வரம்போல் வந்தவளே! விண்வெளியில் விளையும் அழகிற்கெல்லாம் எல்லையாக அமைந்தவளே! வாய்மையே வடிவமாகக் கொண்டவளே!

மையலைத் தந்து மகிழ்பவளே! புதுமை வளர்க்கும் பொன்மகளே! குலமகளே! மருந்திற்கும் மருந்தாகிக் கணவன் சிவபெருமானின் கண்விருந்தாக இருப்பவளே! இவ்விருந்தை இனிய தமிழில் வடித்துச் சுவையுறத் தருகிறார் பெருங்கவிக்கோ.

வாழவாய்ப்பினை வழங்கும் நாடு, கணினித் திறன்கொண்ட நிகரிலாநாடு, காலப்புயலிற் சிக்காத தலைமை நாடு, வழிகாட்டும் குருவாக அமைந்த நாடு, கடமை தவறாத கண்ணியமிக்க அமெரிக்க நாட்டில் வளர்பவளே! பெண்டிற் அழகிற்கெல்லாம் அணிமுடியாக அமைந்த பேரழகினளே! அமுதென்ற பேர் கொண்ட தமிழாக விளங்கு பவளே! தாலே தாலோலோ!

தமிழ்ச் சங்கத்தில் தாமும் புலவனாக அமர்ந்து பண்ணுறத் தமிழ் ஆய்ந்த சொக்கநாதரான சிவபெருமானின் தேவியே! தாலோ தாலேலோ!

''அகிலமும் சராசரமும் ஈன்ற பரசிவானந்தவல்லி உமையே!'' என்ற இராம லிங்க வள்ளலார் தாயைக் குறித்து அழகுறப் பாடியிருப்பது இங்கு எண்ணத் தக்கது.

மலையும் கடலும் மாவெளியும்
    மயங்கும் குறிஞ்சி முல்லைமுதல்
மருதம் நெய்தல் திணைநிலமாம்
    மாறும் பாலை இலாநாட்டில்

கலையின் வடிவேல் முருகமகன்
    கடவுள் வாசிங் டனில்கண்டே
கனிந்த முத்தம் அழைத்தீந்து
    காக்கும் முதல்வி தேவர்தொழும்

இலைஎன் போரே இல்லாத
    இறும்பூ தெய்தும் செயல்நாடு
எண்ணிய எண்ணி யாங்கெய்தும்
    இயல்பில் ஓங்கும் வியன்நாடு

அலைகள் பதிக்கும் நீர்நாட்டின்
    அன்னாய் தாலோ தாலேலோ!
ஆன்றோர் போற்றும் பூமகளே
    அரசி தாலோ தாலேலோ! 3

*மலையும் கடலும் நிறைந்த நாடு! மயக்கும் மாவெளி கொண்ட நாடு! நால்வகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் கொண்ட நாடு! வருத்தும் பாலையே இல்லாத நாடு! இத் திருநாடு வாசிங்டனைத் தலைநகராகக் கொண்ட அமெரிக்க நாடு! இத்திரு நாட்டில் எழில் வடிவேல் முருகன் கோயில் கொண்டுள்ளான். அத்திருமுருகன் அன்னையின் மகனாவான்! அம் மாமகனை அன்புடன் அழைத்து அவனது திருக்கன்னத்திற் கனிவுடன் முத்தம் தரும் அழகிய காட்சியை அப்படியே நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார் பெருங்கவிக்கோ.*

தேவர்கள் யாவரும் தொழுகின்ற தேவி மீனாட்சி உலக உயிர்களைக் காக்கும் முதல்வியாவள்.

எதும் இல்லையென்பார் இல்லாதபடியால், அதனால் இறும்பூதெய்தும் செயல்புரியும் நாடு. எண்ணியபடி எல்லாம் இயல்பிற் சிறந்தோங்கும் பெருநாடு. கடல் அலைகள் வந்து கரைமோதும் படியான நீர் நிறைந்த நாட்டில் வாழுகின்ற அன்னை மீனாட்சி தாலே தாலேலோ! ஆன்றோர்கள் போற்றும் புகழ் கொண்ட பூமகளே! மாமகளே! பாண்டிய அரசியே! அமெரிக்க நாட்டில் வாழும் அரசியே! தாலே தாலோலோ! ''இலையென்பாரே இல்லாத நாடு'' என்று அமெரிக்க நாட்டைப் பற்றிக் கூறுவது தமிழ்க் கவிச் சக்கரவர்த்தி கம்பர் பெருமானின் கவிவாக்கை நினைவுபடுத்துவதாகவுள்ளது.



கரும்புக் கழனி காண்வெளிகள்
    கனிகள் பெருக்கும் தோட்டங்கள்
கரைவரப் பில்லா நீள்நிலங்கள்
    கவிந்து விளையும் கோதுமைகள்

சுரும்பின் இனத்தின் ரீங்காரம்
    தொடரும் மலைசூழ் சோலைகளே!
சொல்லுக் கடங்காப் பலவளங்கள்
    தொடர்தொட ராகத் தொடர்கின்ற

விரும்பி வான்வாழ் தேவர்களும்
    வியந்து வாழ வரஎண்ணும்
மென்றோள் காதற் பூங்கொடிகள்
    மின்னும் மென்னகை அரசோச்சும்

தருமம் நிலைக்கும் அமெரிக்கத்
    தாயே தாலோ தாலேலோ
சங்கத் தமிழமர் சிவன்தேவி
    தாலோ தாலே தாலேலோ! 4

*4. கரும்பு விளையும் வயல்கள், வயல்வெளிகள், கனிகள் குலுங்கும் தோட்டங்கள், கரைவரப்பில்லா நீண்ட நிலங்கள், கோதுமை விளையும் நிலங்கள், வண்டினங்களின் ரீங்காரம், மலை சூழ்ந்த தொடர்ந்த சோலைகள், பல்வளங்கள் சொல்லால் கூறமுடியாவண்ணம் அதிக அளவில் கூடியிருப்பவை, வானவர்களும் இம்மண்ணுலகம் அமெரிக்க நாட்டிற்கு விரும்பி வந்து வாழ நினைக்கும் படியாகத் தோன்றும் காதலை விளைக்கும் பூங்கொடிகள், மின்னுகின்ற மென்னகை அரசு செய்யும்படியான, தருமம் நிலைத்திருக்கும்படியான அமெரிக்க நாட்டில் வாழும் மீனாட்சித் தாயே! தாலோ தாலேலோ! என்று தாயை அழகுறத்தாலாட்டிப் பாடுகிறார் அருமையுடன் பெருங்கவிக்கோ!*

தமிழ் நாட்டில் வாழும் மீனாட்சித் தாயை அமெரிக்க நாட்டிற் கண்ட கவிஞர் பிரான் பெருங்கவிக்கோ அத்தாயை அமெரிக்கத் தாய் என்று குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும். அமெரிக்க நாட்டில் தருமம் நிலைத் திருப்பதால் தான் அமெரிக்க நாடு உலகநாடுகளுக்கெல்லாம் முதன்மைநாடாக எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது என்பது ஒருமித்த கருத்தாகும் என்பதில் ஐயமே இல்லை. இது நேரில் அமெரிக்க நாட்டைக் கண்ட பெருங்கவிக் கோவின் ஆணித்தரமான அபிப்பிராயம் ஆகும். சங்கத் தமிழ் முழங்கும் மதுரை வளர் சிவபெருமானான சோமசுந்தரரின் தேவியே! தாலோதாலே தாலேலோ!

திங்கள் களங்கம் துடைத்தெழுந்தே
சிறக்கப் பூமி வந்ததுவோ?
திரண்ட வான விண்மீன்கள்
செழுமை மாலை சூடியதோ?

செங்கண் இரண்டு கண்கதிராய்த்
தேசச் சுடர்கள் வீசியதோ?
செம்மை நாடாம் அமெரிக்கா
தேர்ந்தே குடிகொள் வாசியதோ?

மங்கல முழக்கம் எதிரொலிக்க
வஞ்சியர் கொஞ்சும் இசைபாட
வழிவழி அந்தணர் பூசையிலே
மனம்கொள் மானப் பெருந்தேவி

அங்கைப் பொருளால் அளிநல்கும்
அரசி தாலோ தாலேலோ
ஆன்றோர் போற்றும் பாமகளே
தாலோ தாலோ தாலேலோ! 5



5. திங்கள் என்னும் சந்திரன் தன் களங்கத்தைப் போக்கித் தண்ணொளி வீசி இம்மண்ணுலகம் சிறக்க வந்துள்ளது. விண்ணில் இரவில் ஒளிவீசும் நட்சத்திரங்கள் செழுமை தரும் மாலையைச் சூடியுள்ளன.

இரு செங்கண்களும் கதிர் கண்மணிகளாய் ஒளிவீசும் சுடர்களாக அமைந்துள்ளன. சிறப்புமிகும் செம்மைசேர் அமெரிக்க நாட்டைத் தன் உறைவிட மாகக் கொண்டுள்ளாள் தானே தேர்ந்தெடுத்து மீனாட்சியெனும் செல்வமாமகள்.

எங்கும் மங்கள நாதம் எதிரொலிக்க, வஞ்சியரெலாம் இனிமை யுடன் கொஞ்சும் தமிழில் இசைபாட, மறையவர்கள் முறையுடன் செய் கின்ற பூசையைக் கண்டு நாட்டமுறும் மானவதியான பெருந்தேவி என்று மீனாட்சியை ஏற்றுமுடன் பாடுகிறார் பெருங்கவிக்கோ.

அம்பிகையின் திருக்கையை அங்கை என்று குறிப்பிடுவது மிகப் பொருத்தமானது அக்கையில் அன்பர்களுக்கு வழங்கும் பொருள்களை வைத்துள் ளாள் அங்கயற்கண்ணி அரசி. அரசியவளை விளித்து, அரசி தாலோ தாலேலோ என்கிறார் பெருங்கவிக்கோ. ஆன்றோர்கள் போற்றும் மாமகளே! பாட்டின் பொருளாக அமையும் பாமகளே! அமெரிக்க மாமகளே! தாலோ, தாலே, தாலேலோ!

செய்யும் தவமிகுந்த சிவபூசையினால் தான் செல்வமெல்லாம் செழிக்கின்றன. இதனை இப்பாட்டின் வாயிலாக இனிதுணர முடிகிறது. அதனால் தெய்வ பக்தி மிகுந்த பூசை அவசியம். இது அனைவரும் கருத்திற் கொள்ள வேண்டிய குறிப்பாகும்.

### வேறு

இயல்பாய் இயற்கை முயற்சி மிகுந்துள
  இதயத் துயர்வாலும்
எதிர்வரு புதிர்களை பதிஇலா வகைசெயும்
  இடர்வெல் துணிவாலும்

அயலார் நம்மோர் அவரிவர் பாராத
  அறிவுத் தெளிவாலும்
அருளதோ பொருளதோ இருவகை இயல்பதோ
  ஆக்கத் திணைப்பாலும்

கயமைகள் முளைகளை துணிவுடன் எடுத்தெறி
  கதிநடு நிலையாளும்
கடமைப் பணிமுனை உடமை குவிந்துள
  களம்காண் அமெரிக்கா

தயவார் இடமுறை நயமார் அருட்தாய்
  தாலோ தாலேலோ
சங்கப் புலவர்கள் சமம்காண் சிவன்மனை
  தாலோ தாலேலோ! 6



6. முன்னேறவேண்டும் என்ற எண்ணத்துடன் முனைந்து மிகுந்த முயற்சி மேற் கொண்ட இயற்கையாகவே இயல்பாய் எழுந்த இதயத்தின் உணர்வாலும், எதிர்நோக்கிவரும் புதிர்களை ஏற்று அவை பாதிக்காத வண்ணம் செய்து இடர்களையெல்லாம் வெல்லும் துணிச்சலாலும்,

இவர் அந்நியர், இவர் நம்மவர் என்று வேற்றுமை பாராத தெளிந்த அறிவாலும், அருளோ அன்றிப் பொருளோ என்று கருதாது ஆக்கம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு உழைக்கின்ற உறுதியாலும்,

சற்றும் தயவு தாட்சண்யமின்றிக் கயமைகளை முளையிலேயே களைந்து நடுநிலை வகித்தாளும் சீரிய செயலாலும், கடமையாக உள்ள பணிகளைத் தள்ளிப் போடாது அவற்றை முடிக்கும் முனைப்பாலும் களம் காண்கின்ற அமெரிக்க நாட்டில் தயை நிறைந்து நயம் நிறைந்து எல்லார்க்கும் நல்லருள் செய்யும் அருள்மிகுந்த மீனாட்சித் தாயே! தாலோ தாலேலோ! சமம் காண் கின்ற சங்கப்புலவர்கள் போற்றும் சிவபெருமானின் தேவியே! தாலோ தாலேலோ!

ஒருவருக்கு உயர்வு உண்டாவது அவரது அயராத தீவிர முயற்சியே யாகும் என்று திடமாகக் கூறுகிறார் இத்தாலாட்டுப் பாட்டில் பெருங்கவிக்கோ. அவர், இவர் என்று பேதம் காட்டிப் பிரிவு செய்யாது அனைவரையும் சமமாகப் பாவிக்கவேண்டும், அவ்வொரு செயலால் அவனியிலேயே தனிப்பெருமையுடன் அமெரிக்கா திகழ்கிறது என்பதை மறுக்க இயலாது.

காதற் கடலினில் களிக்கும் உறவினில்
கலக்கும் இருபாலும்
கலத்தேன் பாலொடு இதழ்பால் பனிமொழி
கரைகாண் பதிப்பாலும்

மாதர் சமமுறு வழிசேர்ந் தமைவுறு
மதிக்கும் விதிப்பாலும்
மாறி மாறியே வாய்க்கும் வாய்பதி
மகிழ்க்கும் முத்தங்கொள்

கூதற் குளிர்தரு குளிர்வுக் கனல்தரு
கொவ்வைப் பழம்சு வைக்கும்
குமரர் குமரியர் பருவ விருந்துகள்
கூடி உவந்தோச்சும்

தாதித் தோழியர் போதித் தருளுதாய்
தாலோ தாலேலோ
சங்கப் புலவர்கள் சமம்காண் சிவன்மனை
தாலோ தாலேலோ! 7



காதல் புரிந்து களிப்பதற்குரிய இடம் கடற்கரைதான். அக்கடற் கரையில் காதலர் இருவரும் கலந்துறவாடுகின்றனர். வெவ்வேறு சாதியாக அவர்கள் வேறு பட்டிருந்தாலும் அதை அவர்கள் சிறிதும் பொருட் படுத்துவதில்லை. சாதிக்கலப்பினை அவர்கள் கருத்திற் கொள்ளுவதில்லை. இக்காதற் காட்சியை இனிய தமிழில் நம்மனத்தில் அப்படியே பதிய வைக்கிறார் ஆற்றல் மிக்க கவிஞர் பெருங்கவிக்கோ.

ஆணும் பெண்ணும் சமமாக அமெரிக்க நாட்டில் வாழ்கின்றனர். ''ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய் வாழ்வமிந்த நாட்டிலே!'' என்று பாடிய பாரதியாரின் கவிவாக்கை அப்படியே அமெரிக்க நாட்டார் பிரதிபலிக்கின்றனர் என்று திண்ணமாகக் கூறலாம். காதலர்கள் தங்களுக் குள் மாறிமாறி முத்தங்கள் ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொடுத்து மகிழ்வெய்துகின்றனர். இருவரும் வாய் இதழ் அமுதமும் பருகுகின்றனர். குளிர்காலமும் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. குமரரும் குமரியரும் காதல் புரியும் பருவத்தினராக இருப்பதால், அப்பருவத்திற்குரிய செயலை அவர்களிடம் காணமுடிகிறது. இக்காட்சி கண்களுக்கு இனிய விருந்து. காதற் சோடிப் புறாக்களின் கவினார் காதற் காட்சிகளை அமெரிக்கா நாட்டில் பார்க்கலாம். இக்காட்சி எந்நாட்டிற்கும் பொருந்தும் என்றாலும் அமெரிக் காவில் மிகுதியாகக் காணலாம்.

இவ்வண்ணம் இலங்கும் அமெரிக்காவில், தாதிமாரொடும் தோழி மாரொடும் விளங்கி அருளுகின்றாள் மீனாட்சி அன்னை. அன்னை அங்கயற் கண்ணியே! தாலோதாலேலோ! சமம் காண்கிறை சங்கப் புலவோர்கள் போற்றும் சிவபெருமானின் தேவியே! தாலோதாலேலோ!

சாதிவேறுபாடு கருதாது காதலர்கள் ஒருவருக்கொருவர் பிரியாது அன்பு செலுத்துவதும் கடைசியில் அவர்களின் திருமணம் கவப்புத் திருமணமாகவே முடிவதும் இக்காலத்தில் இப்போது சர்வசாதாரணமாகி விட்டது என்பதை உறுதிபடக் கூறுகிறார் பெருங்கவிக்கோ .

அருள்நெறி திருமறை முடிவிலா வகைவளர்
　　அமரர் தலைவர்தம்
அழகுக் கழகுசெய் அழகிய விழியினால்
　　அறிதுயில் தெரிதேவி

வருவடி வாகிய ஒருசிறு மகவென
　　வளர்பதி தாள்தேவி
வகைமிகு கதிர்மணி வடமிகு அணிசெயும்
　　வரமிகு தொட்டிலிலே

திருநெறி நடைமுறை தினம்அர சோச்சிடும்
　　சிறப்புறு பதிதேவி
செயற்கரி தாகிய முயற்சிகொள் திசையெலாம்
　　தேவியே கண்வளராய்

தருந்தவ நெறிவளர் கயிலைமா மலைமயில்
　　தாலோ தாலேலோ
சங்கப் புலவர்கள் சமம்காண் சிவன்மனை
　　தாலோ தாலேலோ! 8



*8. அருள்நெறி வளர, அருந்திருமறை நெறிவளர, தேவாதிதேவனாக விளங்கும் சிவபெருமான் தம் ஆருயிர் மனையாட்டி மீனாட்சியின் ஆரழகைக் கண்டு உவகை கொள்ளும் வண்ணம் அழகிற்கே அழகு செய்யும் படியான தம் அழகிய விழிகளை மூடித் திருமாலைப் போல் அறிதுயில் புரிகின்றாள்.*

ஒரு சிறுமகளாக வடிவு கொண்டு விளங்குகிறாள் இருதாமரைப் பாதங்கள் கொண்டதேவி மீனாட்சி. வண்ணத் தொட்டிலிலே பல்வகை மணிகளையணிந்து கண்வளர்கின்றாள். அறநெறியே எங்கும் ஆட்சி புரிகிறது என்று சொல்லும்படியாகச் செங்கோலோச்சுகிறாள். அக்காட்சியை அப்படியே நம் அகக்கண்முன் நிறுத்துகிறார் நிகரிலாக்கவிஞர் பெருமான் பெருங்கவிக்கோ.

செயற்கரிய செய்யும் சிறப்பினை மேற்கொண்ட அமெரிக்கநாட்டிற் கோயிற் கொண்ட ''தேவியே கண்வளராய்'' என்று நயந்தோன்றப்பாடும் பெருங்கவிக்கோவின் கவிதைவரிகள் படித்தின்புறத்தக்கன.

தவநெறியும் சிவநெறியும் வளர்க்கின்ற அன்னை மீனாட்சி கயிலை யிலுறையும் சிவபெருமானின் தேவியாவாள். அவள் கயிலை மலைமேல் விளங்கும் மாமயிலே! இமவான்மடந்தையே! உத்தமியே! தாலோ தாலேலோ!

சமதத்துவம் காண்கின்ற சங்கப் புலவோர்கள் போற்றும் சிவபெரு மானின் தேவியே! தாலோ தாலேலோ!

திருமால் பள்ளிகொண்டு துயில் புரிவதை அறிதுயில் என்பர். அதைப் போல் தேவியும் தொட்டிலில் அறிதுயில் புரிகிறாள். அவள் முற்றும் அறிந்த ஞானமே வடிவானவன் அல்லவா?

**வேறு**

எண்டிசை வணங்கி விதிசமைத்தே
   எழுச்சி முழங்கச்செய்
ஏரார்ந்த செங்கோல் வளநாடு
   ஈடிலா அமெரிக்கா

கண்டிசை வாணரும் கலைஞரும்
   கருதியே வருகைதரும்
கவினார்ந்த செழுமைதேர் வியன்நாடு
   கண்கள் சிவந்தெழுந்தே

கொண்டிடு பகைமைகள் தொலைநாடு
   குவலயத் தலைநாடு
குறைவிலா உரிமைகள் தருநாடு
   குறிக்கோள் உளநாடு.

தண்டலைப் பொழில்களே சூழ்நாடு
   தாலோ தாலேலோ
சவங்கப் புலவர்கள் தமிழமுதே
   தாலோ தாலேலோ! 9



9. திசையெட்டும் இசையெட்டப் போற்றும் எழுச்சி கொண்ட நாடு வளையாத செங்கோலோச்சும் வளமிக்க நாடு. ஈடிணையில்லா ஏழில் ஆர்ந்த நாடு அந்நாடுதான் அமெரிக்கா நாடு.

அடிக்கடி அருங்கலை வாணர்களும் இசை வாணர்களும் விரும்பி வரும் செழுமை வாய்ந்த நாடு. கண்கள் சிவந்திட கடும்பகைவர்களைச் சாடும் நாடு. இவ்வுலகிற்கே தலைமை யேற்கும் இன்பத் திருநாடு. அனை வருக்கும் அனைத் துரிமைகளும் அளித்து எக்குறையுமின்றி உன்னதக் குறிக்கோள் ஏற்ற நாடு.

எங்கெங்கு நோக்கினும் எழில் மேவும் பொழில்களே சூழ்ந்த நாடு. இவ்வாறு போற்றி அமெரிக்க ஏற்றமிகு நாட்டைப் புகழ்கிறார் பெருங் கவிக்கோ. காரணம் அவர் அமெரிக்காவிற்குக் களிப்போங்கப் பலமுறை பயணம் செய்து அனுபவம் கொண்டவரல்லவா?

அத்தகைய அருமை பெருமைகள் அமைந்த நாட்டிற்கு இன்ப அமுதத்தமிழிலே தாலாட்டுப் பாடுகிறார் பெருங்கவிக்கோ. அவருடன் சேர்ந்து நாமும் பாடுவோம்.

அமெரிக்க நாட்டை அனைத்து வகைகளிலும் உயர்த்தி அந் நாட்டையே இருப்பிடமாகக் கொண்டு வாழும் மீனாட்சி அன்னையே! தாலோ தாலேலோ! சங்கப்புலவர்கள் பாடும் அமுதத் தமிழாக மிளிர் பவளே! தாலோ தாலேலோ!

''குறிக்கோள் உளநாடு'' என்று அமெரிக்கநாட்டை வருணிக்கிறார் பெருங்கவிக்கோ. குறிக்கோள் அதாவது இலட்சியம் ஒன்றே உயர்விற்கு வழிவகுக்கும் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. ஒரு தனி மனிதனுக்கும் இது மிகப்பொருந்தும் பாலனாக இருந்த போதும், பனி மலர்க் கோதை மாதரை மணந்திருந்த போதும், இறுதியில் முதுமையினால் கையிற் கோலை ஏந்தி நடந்த போதும் குறிக்கோள் இல்லாது கெட்டுப் போய் விட்டேன் என்ற கருத்தில் அமைந்த ''பாலனாய்க் கழிந்த நாளும்'' என்று தொடங்கும் அப்பர் பெருமானின் பாடல் எண்ணிப்பார்க்கத்தக்கது. ஆகவே, அயராது ஆக்கம் மேவிய உன்னத குறிக்கோளைக் கொண்டு முன்னேற வேண்டுவது மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரின் கடைமை யாகும் என்கிறார் பெருங்கவிக்கோ.

காரும் வெண்மேக வீறும் கலந்துவான்
　　ககன வெளிஉலாவும்
கனத்தின் பொழுதிலே கலவை மாறியே
　　களம்விண் நீலமேவும்
பாருள் அதிசயப் பதியாம் அமெரிக்கா
　　பாங்குதென் பகுதிதனில்
பைங்கிளி மதுரைஅம் பதித்தேவி மீனாட்சி
　　பயன்கோயில் அமைவதற்கே
நேரும் செயல்கொண்டு நிலமுதல் எவ்விடம்
　　நிலைக்குமோ அவ்விடத்தில்
நீடுநல் அக்கோயில் 'மியாமியா' ''கூசுடனா'
　　நிகரில ழகப்பர்கூற
தாருகொள் மீனாட்சி கூசுடனில் கோயில்காண்
　　தாலோ தாலேலோ
சங்கப் புலவர்கள் சமம்காண் சிவன்மனை
　　தாலோ தாலேலோ! 10.

கருமையும் வெண்மையும் கலந்து வீறு கொண்டு விளங்குகிறது விண்வெளி வீதி. அவ்வீதியிலே கணந்தோறும் நிறம்மாறும். நீலம் அங்குக் குடிகொள்ளும். அதனால் நீலவானமாகிறது; கோலக் காட்சி தருகிறது.

உலகிலேயே வியன்பதியாக, விந்தைப் பதியாக விளங்கும் அமெரிக்காவின் தென்பகுதிதனில் மதுரையம்பதியின் பைங்கிளியின் அன்னை மீனாட்சியின் திருக்கோயில் அமைவதற்கான செயல்மேற்கொண்டு; எந்நிலத்தில் எவ்விடத்தில் கோயில் ''மியா மியா'' வா? 'கூசுடனா?' என்று வள்ளல் பெருந்தகை திரு அழகப் பர் வினா எழுப்பினார். அவர்தம் வினாவிற்குத் தக்க விடையாக அன்னை மீனாட்சி கூசுடன் நகரிலேயே கண்ணப்பரின் உளம் மகிழவே திருக்கோயில் கொண்டாள். வனப்புமிகு அமெரிக்காவின் வாழ்வுதரும் தாயாகவும் ஆகிவிட்டாள் என்கிறார் கவிஞர்களுக்குத் தலைமையேற்கும் பெருங்கவிக்கோ! அதனால் ''தாருகொள் கூசுடன் மாநகரில் அழகுத்திருக் கோயில் காண்பவளே'' என்ற கருத்தில், தாய்க்குத் தமிழ்த்தாலாட்டுப் பாடுகிறார் பெருங்கவிக்கோ.

''தாருகொள் மீனாட்சி கூசுடனில் கோயில் காண் தாலோதாலேலோ!'' சமம் காண்கின்ற சங்கப்புலவோர்கள் தலைவணங்கிப் போற்றும் சிவனரின் மனை மாட்சியே! சொக்கேசரின் சுந்தரியே தாலோ தாலேலோ!

தமிழகத்தின் தென்பகுதியில் தன்னிகரின்றி விளங்கும் தமிழ்த்தாயின் ஆதரவில் மீனாட்சித்தாயின் திருக்கோயில் அமெரிக்கக் கூசுடன் நகரில் அமைய வேண்டும் என்ற விருப்பத்துடன் முயற்சிகள் மேற்கொண்ட திருவாளர்கள் அழகப்பர் கண்ணப்பர் பெரும் பாராட்டுக் குரியவர்கள். நன்றி பாராட்டும் உணர் வில் தலைசிறந்த நற்றமிழர் அன்னை மீனாட்சியின் திருக்கோயில் அமெரிக்காவில், கூசுடன் நகரில் அமைவதற்குக் காரணமாயிருந்த அன்புமிகு திருமக்கள், பெருமக்களை உளமார நன்றி பாராட்டி அவர்தம் அருட்பணிகளை வாழ்த்துகிறார்கள் மக்கள் என்பது திண்ணம்.

# 4. சப்பாணிப் பருவம்

இஃது ஒன்பதாம் திங்களில் நிகழ்வது. அது பிள்ளை கையோடு கைபொருந்தக் கொட்டும் நிகழ்ச்சியாகும்.

கண்ணளாவு திசையெலாம் காண்பச்சை நிறங்களே
காண்புறம் புறமெலாம் தோற்றுமே!
கணக்கிலாப் பலவகை மரங்களே சூழ்ந்திடும்
காலக் குளிர்வருகை தன்னிலோ

மண்ணளாவிப் பல்வகை மரஇலையெலாம் உதிருமே
மஞ்சளாய்ச் சிவப்பாய் மாறியே
வளருமுன் துளிர்த்தஅத் துளிர்த்தோற்றம் பெற்றுபின்
மண்ணுதிர்ந் தேஇலைகள் மக்குமே

புண்ணளாவப் பிறரைத்தான் போதெல்லாம் துயர்செய்வார்
போவார்தலை மொட்டையாய் என்றேதான்
புகலுதல் போல்நாடு முழுதுமுள் மரமெலாம்
பொழில்இலை உதிர்ந்தேதாம் ஏங்குமே!

தண்ணளாவு பொலிகுளிர் அமெரிக்கா மேவுமன்னை
சப்பாணி கொட்டி அருளே!
சங்கரர் ஒருபாகம் தங்கியே ஆள்பவளே
சப்பாணி கொட்டி அருளே! 1



1. திசைகளெல்லாம் கண்விருந்தாகத் திருவோங்கித் திகழ்கின்றன. பச்சை நிறங்களே குளிர்காலத்தில் எண்ணிலாப் பல்வகை மரங்களே கோலக்காட்சி தருகின்றன.

பல்வகைப் பட்ட மரங்களின் இலைகளெல்லாம் மஞ்சள் நிற மாயச் சிவப்பு நிறமாய் மண்ணில் உதிர்கின்றன. வளருமுன்னே துளிர்த் தோற்றம் பெற்ற இலைகளெல்லாம் மண்ணில் உதிர்ந்து இலைகள் மங்கிய வண்ணத்துடன் காட்சி தருகின்றன.

மனம் புண்படப் பிறர் தமைப்போதெல்லாம் புறம் பேசித் துயர் அவருக்குக் கொடுப்பவர்கள் தலை மொட்டையாகி அழிந்தே போவார் கள் என்றே கூறுவது போன்று நாடு முழுவதும் உள்ள மரங்களெல்லாம் இலைகளை உதிர்த்தே ஏங்குகின்றன.

தன்மை பொருந்திய அமெரிக்க நாட்டில் மேவும் மீனாட்சி அன்னையே! இரு கரங்களையும் தட்டிக்கொண்டு அதாவது சப்பாணி கொட்டியருளுகவே!

சங்கரனாகிய சோமசுந்தரப் பெருமானின் ஒரு பாதியாகத் தங்கியே ஆட்சி செய்பவளே! சப்பாணி கொட்டியருளுகவே!

குழந்தை மீனாட்சி இரு கரங்களையும் கொட்டிக் கொண்டு கோல முடன் அமர்ந்து நாட்டமுடன் தரும் கோலக்காட்சி இருகண்களுக்கும் விருந்தாக அமைகிறது.

நல்லாருடைய மனம்புண்பட்டு வருந்தும் படியாக ஒருபோதும் தீயசெய்தல் கூடாது. அவ்வாறு செய்பவர்கள் உலகில் அழிவது உறுதி யென்று பாடுகிறார் பெருங்கவிக்கோ.

''புண்ணளாவப் பிறரைத்தான் போதெல்லாம் துயர் செய்வார் போவார் தலைமொட்டையாய்'' என்ற பெருங்கவிக்கோவின் கவிதை வரிகள் கருத்தில் இருத்தத்தக்கன.

கயிலையம் பதிநோக்கிக் காரைக்கா லம்மையும்
கரைபுரள் பக்தியின் காதலினால்
கடும்திரள் பயணத்தின் அடும்உடல் தேய்ந்திடும்
கதிதரு மோட்சத்தின் வாயிலைப்

பயில்தவத்தால் சென்றே பருஉடல் இழப்பினும்
பரமனின் திருவருள் பதிமேவும்
பரிந்தருள் பாலிக்கப் புரிந்துசிவன் அறியவை
பரமேசு வரித்தாய் அம்பிகை

வெயில் முகில் மறைத்திடும் வெட்டவெளி இடமெலாம்
விண்முட்டு விண்கலம் விடு**'நாசா'**
வியப்பிற்கும் வியப்பாக்கும் வெற்றிகாண் **'இராக்'**கெட்டின்
வினைஆளுமை ஓங்கும் பெருநாடு

தயிர்கடைந் திடுநிலை தயைஉளம் திருத்துதாய்
சப்பாணி கொட்டி அருளே!
தனதெனும் சுயநலம் அகழ்ந்தெடு தேவியே
சப்பாணி கொட்டி அருளே! 2



2. சிவபெருமான் உறையும் திருக்கயிலை நோக்கிக் காரைக்கால் அம்மையார் பத்தியெனும் காதலினால் தலையாலே நடந்து சென்றார். அவ்வாறு நடந்துவரும் அம்மையாரை முதலிற் கண்டவர் ஆனந்த சிவ வல்லியான, சிவபெருமானின் ஒருபாதியான உமாதேவி. தமது உடல் தேய்ந்து எலும்பாகித் தம் வனப்பை இழந்த காரைக் கால் அம்மையார் சிவபெருமானிடம் இறவாத இன்ப அன்பையும் பிறவாமையையும் வேண்டினார் என்பதைச் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தின் அக்காரைக் காலம் மையாரின் அருந்தவச் செயலை உள்ளடக்கிச் சப்பாணிப் பருவத்தின் இந்த இரண்டாவது பாடலில் மிக அருமையாகப் பாடியுள்ளார், பெருங்கவிக்கோ.

பரமேசுவரித் தாயான அம்பிகை மீனாட்சி பரமனின் திருவுளப்படிப் பரிவுடன் அருள் பாலிக்கிறாள். அனைவரும் மங்களமாய் வாழவேண்டும் என்பதே ஆன்றோரின், சான்றோரின் விருப்பம் ஆகும். அதனைப் பிரதிபலிப்பது போல் அம்பிகையின் திருவுளம் அமைந்துள்ளது.

கருமேகமானது மறைத்திடும் வெட்டவெளி இடமெல்லாம் வெயில் தலைகாட்டாதபடி விஞ்ஞானத்தின் எல்லையை விரிக்கும் வகையில் விண்கலம் என்னும் இராக்கெட் விட்டு வெற்றி காணும் நாடு வியப்பிற்கும் வியப்பாக அமைந்த அமெரிக்க நாடு. அந்நாடு உலகில் தனி ஆளுமை பெற்றுத் தலைமை பெற்றுத் திகழ்கிறது.

தயிர்கடைகின்ற தாய்மார்களின் தயையுள்ளம் கொண்ட குழந்தை மீனாட்சியே! சப்பாணி கொட்டியருளே!

யான், எனது எனும் செருக்கறுத்து, எல்லாம் தனதெனும் சுயநலத்தைக் களைகின்ற தேவி மீனாட்சியே! சப்பாணி கொட்டியருளே!

தன்னலம் விட்டால்தான் நன்னலம் வாய்க்கும் என்பதை இப் பாடலின் மூலம் இனிது உணர்த்துகிறார்; சுயநலம் விட்டால்தான் சோதி வடிவான அன்னை மீனாட்சியின் திருவருள் கிட்டும் என்பதையும் உணர்த்துகிறார்.

''அருளே உலகெலாம் ஆள்விப்பது! ஈசன் அருளே உலகெலாம் ஆள்விப்பதானால் அருளாலே எப்பொருளும் நோக்கும் விதியுடையேன்'' என்ற காரைக்கால் அம்மையாரின் பாடல் இங்குக் கருதத்தக்கது காரணம், அருளது சத்தியாகும் அச்சத்தியே அம்பிகையாகும். தயிர் கடைந்திடுநிலைத் தயைஉளம்' - என்னும் தொடர் சிந்திக்கத் தக்கது - பால் - தயிர் - மோர் - வெண்ணெய் - நெய் - என்னிலையிலும் தயிர்கடைவதுயன்தரத் தக்கது. இதைப் போல நன் மனிதர் தம்துன்பம்வரினும் ஒன்றிலிருந்து மற்றொன்றாய் மாறினாலும் பயன்படுவர் - என்பது குறிப்பு.

கோள்களி லெலாம்தம் அறிவியல் அரசோச்சக்
குறிக்கோள் கொண்டெழு விஞ்ஞானம்
குதித்தெழும் புதுயுகம் குறைவிலா தேவ்ளர்
கோனாட்சி செய்யும் நன்னாட்டில்

ஆள்வினை மக்களே அனைவரும் எவருமே
அறியாமை சோம்பலில் ஆட்படார்
அடலேறு போலவே திடமோடு வாழ்வதே
அவரவர் சிறப்பாக எண்ணு நாட்டில்

தோள்வ லிமையுளார் சுடர்பக்தி வாணர்கள்
தூயநன் நெஞ்சத்தின் ஆன்மராகம்
சூழும்நல் இசைவளர் வாழும்நல் வழிஅமை
தொன்மைதேர் இந்திய மக்களே!

தாள்தனை வணங்கிடும் தாயேஎம் மீனாட்சி
சப்பாணி கொட்டி அருளே!
தனதெனும் சுயநலம் அகழ்ந்தெடு தேவியே
சப்பாணி கொட்டி அருளே! 3



*3.* உலகில் உயர் அறிவியல் விஞ்ஞானமே இன்று ஆட்சி செய்கிறது என்று கூறும் அளவிற்கு உன்னதக் குறிக்கோளுடன் எழுச்சி பெற்று வளர்ந் திருக்கிறது விஞ்ஞானம். எங்கும் புதியுகமே குதித் தெழுந்து குறைவின்றி வளர்கின்ற நன்னாடு. அங்குக் குடிக்கோனாட்சி நடைபெறுகிறது.

விநாடி ஒவ்வொன்றையும் வீணாக்காமல் மக்கள் அனைவரும் அறியாமைக்கும் சோம்பலுக்கும் ஆளாகாமல் உழைப்பவர்கள் உள்ளனர். ஏறு போன்று ஏற்றமொடு, திடமொடு வாழ்வதே ஒவ்வொருவருக்கும் சிறப்பளிக்கும் என்று எண்ணுகின்ற நாடு.

புயவலிமை யுள்ளவர்கள், சுடரொளியான இறைவனைப் பக்தி யுடன் பாடிடும் நல்லிசைவாணர்கள், அவர்களுடைய நெஞ்சத்தில் எழும் ஆன்ம ராகம், இசைபட வாழும் தொன்று தொட்டு வரும் நெறி தேர்ந்த இந்திய மக்கள்.' இப்படிப்பட்ட இன்பச் சூழ்நிலையில் இந்தியர்கள் எல்லாரும் பாதம் பணிந்து வணங்கும் படியான தாயே! எம் மீனாட்சி அன்னையே! சப்பாணி கொட்டி அருளுகவே!

தனதென்னும் தன்னலம் எவ்விதத்தும் தலை காட்டாவண்ணம் தவிர்ப் பவர்களின் உள்ளத்தில் நிறைந்த தாயே! சப்பாணி கொட்டியருளுகவே!

''சோம்பலுக்கு இடங்கொடேல்'' என்றார் மூதுரை வழங்கிய ஔவைப்பிராட்டி அறியாமையிருளை அகற்றி உழைப்பினை மேற்கொண் டோர் உயர்வர் என்று பெருங்கவிக்கோ திடமாக உரைப்பதை இப்பாடலில் உணரமுடிகிறது.

''உதவி செய்வதே பதவிக்குப் பெருமை! இதை
உணர்ந்து நடப்பவர்கள் உலகில் மிக அருமை!
தான்வாழ நினைப்பதே தடிப்பான மடமை!
தன்னலத்தை விடுவதே தருமத்தின் மகிமை!''

இப்பாடலில் தான் மட்டும் வாழும் தன்னல எண்ணத்தை அறவே தவிர்க்க வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது.

முக்கண்கொள் சிவபெருமான் முப்புறம் எரிகடவுள்
மூவுலகும் போற்றுமருள் புண்ணியன்
முத்துநகை சிந்திமகிழ் முத்தமிழ் அருளரசி
மோனத்தின் ஞானத்தின் விளக்கானவள்!

செக்கர்வான் சூரியன் செழுங்கதிர் சிவந்தெழு
செந்நிறத் திருமேனிச் செவ்வியள்
திகழறம் முப்பத்திரெண்டையும் செய்தவத்
திறம்இரு நாழிநல் பெற்றவள்!

முக்கனிச் சுவைவெல்லும் எக்கனியும் தாராத
முதிர்கனிச் சுவையான தேவியள்
முன்னேற்றம் அடியவர் நன்னிலை செய்தருள்
முத்துமகள் அறம்பூத்த முதுமகள்

தக்கவள் தாயவள் தவஅன்னாய் மீனாட்சி
சப்பாணி கொட்டி அருளே!
தனதெனும் சுயநலம் அகழ்ந்தெடு தேவியே
சப்பாணி கொட்டி அருளே! 4



4. முக்கண்ணன் என்ற பேர் கொண்ட சிவபெருமான் மூன்று அசுரர்களின் உறைவிடமான பொன், வெள்ளி, இரும்பினால் ஆன மூன்று புரங்களையும் தேவர்களின் உதவியின்றிப் புன் சிரிப்பாலே எரித்தார். மூவுலகங்களும் போற்று கின்ற அருட்புண்ணியரான சிவபெருமானின் தேவியானவள் அவள் முத்துநகை உதிர்க்கும் முத்தமிழரசி. ''மோனம் என்பது ஞான வரம்பு'' என்ற மொழியை மெய்ப்பிக்கும்படியாக அன்னை மீனாட்சி விளங்குகிறாள். மோன விளக்காகவும் ஞான விளக்காவும் அவள் திகழ்கிறாள் என்பதை மிக அருமையாகக் குறிப்பிடுகிறார் பெருங்கவிக்கோ.

காலையில் எழுங்கதிர் செங்கதிராகும். செங்கதிரைப் போன்ற செந்நிறத்திருமேனியுடையவள் அன்னை. இருநாழி நெல் கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் எல்லாவுலகும் போற்றி வியப்பெய்தும் வண்ணம் செய்தவள் உலகநாயகியான அவள். அறம் வளர்த்த நாயகி யென்பாளும் அவளே!

வாழை, மா, பலா என்ற முக்கனிகளின் சுவை யென்ன சுவை யென்று சொல்லும் படியாக, அதற்கும் மேற்பட்ட சுவை இதழ் அமுதம் கொண்ட தேவியானவள் மீனாட்சி! அடியவரை முன்னேற்றம் அடையச் செய்து அவர்களுக்கு அருள் செய்பவள். முத்துநகை கொண்ட திருமகள் என்பாளும் அவளே! அறம் பூத்த முதுமகளாகவும், ஆதிமகளாகவும் திகழ்கவள் அவளே!

நலங்கள் யாவும் நண்ணிய தாய் மீனாட்சி அனைவர்க்கும் அருள்செய்யும் தவமிகுந்த தாயாவள். மலயத்துவச பாண்டிய மன்னன் செய்த மகவேள்வியினின்றும் தோன்றிய மாமகளல்லவா அவள்? அதனால் ''தவ அன்னாய் மீனாட்சி'' என்று குறிப்பிடுகின்றார் பெருங்கவிக்கோ.

எல்லார்க்கும் அருள்செய்யவல்ல, தக்கதருணத்தில் உதவிபுரியவல்ல மீனாட்சித் தாயே! சப்பாணி கொட்டியருளுகவே!

தன்னலம் தவிர்த்தவர்களின் உள்ளம் குடிகொண்ட தாயே! நீ சப்பாணி கொட்டியருளுகவே!

ஞானங் கொண்டோர் மோனத்தைக் கைக் கொள்வர். அதனால் ஞானமும் மோனமும் அமைந்தவராக வாழவேண்டும் என்பது பெருங்கவிக்கோவின் திருவுளக் குறிப்பாகும்.

பவளவாய்ச் செங்கனும் இன்னமுதக் குதலையும்
பணியம்போல் கழுத்தெழில் வனப்பும்
பனிமலைக் கரசனைப் பணிகொண்ட பார்வையும்
பதியெலாம் வணங்கிவெல் தோற்றமும்

கவலைகள் வாராத கருதுசெயல் தவறாத
கடமைதேர் தொண்டர்கள் ஏவலும்
கருணைமலர் 'டெக்சாசம்' பெருமாள்நிலத்திலுள்ள
கவினிதழ் 'கூசுடனில்' குடிகொண்டே

உவக்குமருள் பயிலுவிளை யாட்டினிடைத் தியானித்தே
உலகெலாம் புரிந்தருள வந்தபோல
ஓங்குவளம் மேவுபுகழ் உன்னதத்தின் உன்னதமாம்
ஒளிமல்கும் அமெரிக்க நாடுறையும்

தவளநகை சிந்திஒளிர் சந்தன மணத்தேவி
சப்பாணி கொட்டி அருளே!
தனதெனும் சுயநலம் அகழ்ந்தெடு தேவியே
சப்பாணி கொட்டி அருளே! 5



5. பவளவாயும் செங்கண்ணும் வாய்ந்தவள். அமுதம் போன்று இனிக்கும் குதலை மொழியுதிர்ப்பவள் வனப்புடைய கழுத்தில் மணியணிந்தவள். பனிமலைக்கரசன் இமவான் மடந்தையாக வந்தவள். பார்வதி யென்னும் பெயரினாள். பதியெலாம் வணங்கிடும் தன்பதியான சுந்தரப் பெருமானைக் கவரும்படியான காந்தப் பார்வையுடையவள், அவளே அன்னை மீனாட்சி.

எக்கவலையுமின்றி எண்ணிய செயல் எண்ணியாங்கு தவறாது முடிக்கும் திறமும், கடமை தேர்ந்த கண்ணியமிக்க தொண்டர்களின் சேவையும் மிகுந்த பெருமாநிலம் அழகு மிளிரும் 'டெக்காசு' மாநிலம் அம்மாநிலத்தில் அமைந்த கூசுடன் நகரில் திருக்கோயில் கொண்டுள்ளாள் அன்னை மீனாட்சி. இவ்வாறு குறிப்பிடுகிறார் பெருங்கவிக்கோ.

திருவருள் விளையாடல் புரிந்து, தியான நிலையில் இருந்து, உலகமெல்லாம் காக்க வந்தது போல், புகழோங்கும் வளமோங்கும் பொன்னொளி வீசும் அமெரிக்க நாட்டில் உறைகின்றாள் உன்னதத்தின் உன்னதமாய் விளங்கும் மீனாட்சித்தாய்!

வெண்ணிற முத்து நகை வெளிப்பட விளங்கும் சந்தன மணங்கமழும் படியான தேவி மீனாட்சியே! சப்பாணி கொட்டியருளே!

தனதெனும் தன்னலம் தவிர்த்தவரின் தவமனத்தில் தங்கி நலம் தரும் தாயே சப்பாணி கொட்டியருளுகவே!

கவலைகள் மனதின் அமைதியை அழிப்பவை. கவலையின்றி வாழும் மனிதர் காசினயில் உண்டென்றால், அம்மனிதர் அன்னையின் இன்னருள் பெற்றவராகத் தான் இருக்கவேண்டும். அன்னையோ ஆனந்த வடிவானவள். அவளே ஆனந்தம் என்றும் சொல்லலாம். ''அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பார்'' என்ற திருமூலரின் திருமந்திரப்பாடல் இங்குக் கருத்தக்கது.

''என்னைக் கவலைகள் தின்னத்தகாதென்று நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா'' என்ற மகாகவி பாரதியாரின் பாடலும் இங்குச் சிந்தையில் இருத்தத்தக்கது.

**வேறு**

பொன்மலை வில்லாய் வாசுகி நாணாய்ப்
புனிதத் திருமால் கணையாக
புரிஅதி வேகக் குதிரைகள் நான்கு
புகழறம் மிக்க மறையாக

நன்கலைப் படைப்பின் நான்முகன் விரையும்
நனிதேர் ஓட்டும் மகனாக
நல்லொளி ஞாயிறும் திங்களும் தேர்தான்
நன்றே அமைஉரு ளையாக

தன்படை பொருதிடத் தவறுகள் பொடிபடும்
தவனார் சிவனார் தலைவிதமின்
தாள்பணிந் தார்தமின் தாகம் தீர்த்தருள்
தன்னேரில்லா உயர்தேவி

கொன்றன கொடுமையும் வென்றிடும் தேவியே
கொட்டுக சப்பாணி
கோலநல் மாமயில் சாலநல் தமிழ்க்குயில்
கொட்டுக சப்பாணி! 6



6. மின்னும் பொன்மலையை வில்லாகவும் வாசுகியை நாணாகவும் கொண்டு திருமால் கணையாக அமைய, அதிவேகமிக்க குதிரைகள் நான்கும் நான்மறையாக, உலகைப் படைக்கும் நான்முகனான பிரம்மா தேரோட்டும் திருமகனாக, சூரிய சந்திரன் இருவரும் தேரின் இருசக்கரங்களாக அமையப் புரமெரிக்கத் தேரேறிவரும் சிவபெருமானின் தேவியே! தடைகளைப் பொடிபடச் செய்திடும் தவ ஆற்றல் வாய்ந்த சிவபெருமானை எதிர்க்க, வெற்றி கொள்ள எவருக்குத் துணிவுண்டு?

சிவனாரின் தவமார்ந்த தேவி மீனாட்சியே! உன்னுடைய தாளிரண்டும் பணிந்தாரின் உள்ளத்தாகம் தீர்த்து அருள் புரிபவளே! நிகரில்லாத உயர் தேவி மீனாட்சி அன்னையே!

சிவபெருமான் பொன்மலையை வில்லாகக் கொண்டு தேரில் ஏறி வரும் திருக்காட்சியை நேரில் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார் பெருங்கவிக்கோ.

கொன்ற கொடுமையைக் கொன்றிடும் தேவி மீனாட்சியே! சப்பாணி கொட்டி அருளுகவே! கோல மயிலே! பாடும் தமிழ் இசைக் குயிலே! மீனாட்சித் தாயே! சப்பாணி கொட்டியருளுகவே!

''கொன்றன கொடுமை கொன்றிடும் தேவியே!'' என்று பெருங் கவிக்கோ பாடியிருப்பது, ''அழிக்கும் வினையை அழிப்பவளே!'' என்ற கற்பகாம்பாள் அந்தாதியின் கவிதைவரியை நினைவுறுத்துகிறது.

அடியவரின் உள்ளத் தாகத்தைத் தீர்த்து உடனே அருள் செய்ய அன்னை மீனாட்சியால் தான் முடியும் என்பதை இப்பாடலின் வாயிலாக அறிந்து, தெளிந்து, அமைதியின்பம் காணலாம் என்பது உறுதி.

ஓங்கா ரப்பொருள் ஒலிக்கும் பெயர்கொள்
உன்னதச் சிற்பி கணபதியார்
ஒளிகதிர் அதிசயம் உறைபதி அருள்மிகு
ஓம்ஓம் நாயகி அம்பிகைக்கே

மூங்கை நிலைதவிர் மூச்சுப் பேச்சினை
முனைந்தே வணங்கும் முறைமைபோல்
முழுமுதற் தேவியின் தழுவுதாள் பதித்தெழு
முன்னிலம் காண வேஅழைத்தே

வீங்குநல் புகழிடம் வேண்டைந் தேக்கர்கள்
விளங்கத் துளங்க நிலம்வாங்கி
வீறுகொள் கலைகளின் வேந்துநம் சிற்பியின்
மேம்படு திருக்கரம் வரைபடத்தால்

கோங்கும் வேங்கையும் கமழ்ந்திட அமர்தேவி
கொட்டுக சப்பாணி
கோலநல் மாமயில் சாலநல் தமிழ்க்குயில்
கொட்டுக சப்பாணி! 7



7. ஓங்காரப் பிரணவ ஒளிவடிவினன் கணபதி. அப் பெருமானின் திருப்பெயரினையுடைய உலகம் போற்றும் அதி உன்னதச் சிற்பி கணபதியென்பார் ஓம் சக்தி ஓம் என்று மேதினியெல்லாம் மேன்மையுடன் தொழும் அம்பிகையானவள் உறையும் திருக்கோயில் அமைக்க அழைக்கப்பட்டார்.

அம்பிகை திருக்கோயில் எழுப்ப ஐந்து ஏக்கர் நிலம் வாங்கப் பெற்றது. கலை தேர்ந்த சிற்பி கணபதியாரின் திருக்கரம் வரைந்த படங் கொண்டு சிற்ப சாத்திர ஆகம நெறிப்படி ஆர்வத்துடன் அம்மை மீனாட்சி யின் திருவடிவச் சிலை அடியவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு அவர்கள் வணங்கும் வகையில் அமைக்கப்பெற்றது.

கலைவேந்து சிற்பி கணபதியார் கட்டிய திருக்கோயில் கோங்கும் வேங்கையும் கமழும் தெய்விக மணத்துடன் அமர்ந்தருள் புரியும் மீனாட்சித் தேவி அன்னையே! சப்பாணி கொட்டுகவே!

கோல மாமயிலே! ஞாலம் வியக்கப்படும் தமிழ்ப்பூங்குயிலே! சப்பாணி கொட்டுகவே

முன்னவனான கணபதி நாதனை, மூலாதார முதல்வனை முதலில் வணங்கித் தொடங்கும செயல் அனைத்தும் முடிவில் முழுவெற்றியைத் தரும். இது அடியவர்களின் அசைக்கமுடியாத திடமான நம்பிக்கை. கணபதி நாதனின் திருப்பெயரைக் கொண்ட ஈடினையில்லா கலைமாமன்னர் சிற்பி கணபதியார் அம்பிகை திருக்கோயில் கொண்டு விளங்கச் செய்திருக்கிறார் என்றால், ஓம் சக்தியான பிரணவ நாயகி அன்னை மீனாட்சியின் திரு வுள்ளம் ஆகும் என்பது கவிஞர் பெருமான் பெருங்கவிக்கோவின் கருத்தாக இருக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

தடைகள் இன்றியே உடைமை அன்னையாம்
　　தலைவியின் கோயில் அமைகவெனத்
தாயின் மூத்தநல்சேயாம் பிள்ளையார்
　　தமக்கே முதற்கோ யில்எடுத்தே

விடைகொள் சிவனார், சங்கு சக்கர
　　விரிமார் புக்கோன் திருமாலும்
வேண்டும் வகையினில் யாண்டும் நிலைபெற
　　வெல்லும் திருமகள் அருகிருக்க

அடலேறு அருள்மகன் நரசிம்மன்வழி
　　ஆன்றோர் சான்றோர் தாம்முயல
ஆக்கும் வகையினில் காக்கும் நிலைபெற
　　மாநில வங்கி பொருள்வழங்க

கொடைகள் தொடர்ந்திடும் கோயில் அமர்தேவி
　　கொட்டுக சப்பாணி
கோலநல் மாமயில் சாலநல் தமிழ்க்குயில்
　　கொட்டுக சப்பாணி! 8



8. விக்கினங்களைப் போக்கும் காரணத்தால் விநாயகப்பெருமான் விக்கினவிநாயகன் எனப் பேர்பெற்றார். தடைகள் ஏதுமின்றித் தலைவியான மீனாட்சியின் கோயில் இனிதடைய முதலில் விநாயகராகிய பிள்ளையாருக்கு முதற்கோயில் அமைக்கப்பெற்றது.

இடபத்தை வாகனமாகக் கொண்ட இறைவன் சிவபெருமானுக்கொரு திருக்கோயில், சங்கு சக்கரதாரியான திருமால் தம் துணைவி திருமகள் அருகிலிருக்கும்படியான திருக்கோயில்,

ஏறு போன்று விளங்கும் அருள்மகனான நரசிம்மன் வழி ஆன்றோர்களும் சான்றோர்களும் மிகவும் முயன்று திருக்கோயில் காணும்படி மாநில வங்கியானது வேண்டிய பொருள் வழங்கியது. தாராளமான நன்கொடைகள் தொடர்ந்து தாயின் அருளால் வந்திடவே மீனாட்சித்தாயின் திருக்கோயில் உருவாகியது. அத்திருக்கோயில் அமர்ந்து திருவருள் புரியும் அன்னை மீனாட்சியே!

சப்பாணி கொட்டுகவே!

கோலமாமயிலே! தமிழ்பாடும் இசைப்பூங்குயிலே! சப்பாணி கொட்டுகவே! இப்பாடலில் பல மூர்த்திகளுடன் திருக்கோயில் அம்பிகைக்கு எழுப்பப் பெற்றதைக் குறிப்பிடுகிறார் கவிபாடுவதில் வல்ல பெருங்கவிக்கோ.

உலகமெலாம் வணங்கும் ஓம் சக்தி அன்னையின் திருவுளப்படியே செயல்கள் யாவும் நிகழ்கின்றன, அவள் திருவருளே அனைத்தையும் தடையேதுமின்றி நிறைவேற்றி வைக்கிறது என்பதை இப்பாடலின் வாயிலாக நன்குணர முடிகிறது.

மீனாட்சி அன்னையின் மீதூர்ந்த காதலின்
 மேற்றே **அனந்த நாராயணனார்**
மென்மேல் ஆர்வலர் **தியாக ராசனார்**
 மீதூர் **கணேசர்** தம்மோடு
தேனாட் சித்தமிழ் **கண்ணப்பரோடே**
 திறமார் **விசுவ நாதரீ**றாய்,
தெளிந்த வகையினில் வலிந்த முயற்சித்
 தீரர் சூரர் பலர்முயல
தானாட் சிக்கலை தகைமைச் சிற்பிமா
 தன்னேரில்லா **முத்தையா**
தமிழ்க்கோ யில்வடி தலைமை யர்வழி
 சலியா உழைப்பின் ஆச்சரியம்
கோனாட் சித்தாய் கோமள வள்ளியே
 கொட்டுக சப்பாணி
கோலநல் மாமயில் சாலநல் தமிழ்க்குயில்
 கொட்டுக சப்பாணி! 9

*அன்னை மீனாட்சியின்மீது அளவிலாத பெரும் பக்தியுடைய அனந்த நாராயணனார், அன்புடைய பெருந்தகை தியாகராசனார், கணேசனார், தேனாட்சி செய்யும் தீந்தமிழ்ப் பற்றுடைய வள்ளல் கண்ணப்பர், திறன்மிக்க தீரர் விசுவநாதர் மற்றும்பல ஆக்கங்கொண்டோர் அன்னை மீனாட்சியின் திருக்கோயில் அமையப் பாடுபட்டோரின் திருப்பட்டியலில் அடங்குவர்.*

*தன்னிகரில்லாத தலைமைச் சிற்பி முத்தையா தமிழ்க் கோயில் வடிவமைக்கும் தலைமையர்வழியில் அயராது உழைத்துக் கோயில் அமைக்கும் திருப்பணியில் தம்மை முழுதும் ஈடுபடுத்திக் கொண்டதால் அனைவரும் ஆச்சரியம் கொள்ளும் வண்ணம் எழுந்தது அம்மை மீனாட்சியின் திருக்கோயில். அத்திருக்கோயிலில் அமர்ந்து ஆட்சி செய்கின்ற மீனாட்சித் தாயே! கொட்டுக சப்பாணி யென்று பாடுகிறார் பெருங்கவிக்கோ.*

*கோலமாமயிலே! தமிழ் இசைபாடும் பூங்குயிலே! மீனாட்சி அன்னையே! கொட்டுக சப்பாணி!*

*பல வீரர், தீரர், சூரர், சலியாத உழைப்பினர் முதலியவர்களால் ஒரு புண்ணியச் செயல் நிகழமுடியும் என்பதை உணர்த்துகிறார் பெருங்கவிக்கோ! பலர் கூடி வடம்பிடித்து இழுத்தால தானே தேர் அசையும் என்ற உண்மையைச் சொல்லாமற் சொல்லுகிறது இப்பாடல்.*



**வேறு**

செஞ்சடை திரண்டு புரண்டே திசையெலாம்
 சிலிர்த்தே மிகுந்தாட
செங்கை மேவிய செந்நெருப் பதோபுவி
 சிவந்து சினந்தாட
முஞ்சுநீ லநிறம் மேவு கண்டவிடம்
 மாவொளி தந்தாட
மார்புக் கழுத்திடைப் பாம்போ படமெடு
 வனப்புச் சுழன்றாட
விஞ்சு கரியதன் மேலுறை தோலதோ
 மேன்மேல் படர்ந்தாட
வெண்டா மரைமலர் மீனாள் சிவனுறை
 வித்தகி தாளாட
குஞ்சித பாதத் திருவடி மடக்கொடி
 கொட்டுக சப்பாணி
கோலநல் மாமயில் சாலநல் தமிழ்க்குயில்
 கொட்டுக சப்பாணி! 10

*10.* இப்பாடல் செஞ்சடை விரித்தாடும் சிவனாரைக் குறிப்பிடுகிறது. சிவபெருமானின் செஞ்சடை விரிந்தே திரண்டு புரண்டு திசையெலாம் போற்ற ஆடுகிறது சிவனின் செங்கையில் இருக்கும் செந்தீ மேலும் சிவந்து சினந்தாடுகிறது.

அச்சிவபெருமான் விடமுண்ட காரணத்தால் அவருடைய கண்டம் நீல நிறமாகியது. அதனால் அவர் திருநீலகண்டப் பெருமான் ஆனார். அவருடைய கண்டமும் இடைவெளி விட்டு ஆடியது.

மார்பில் ஆபரணமாகச் சிவனார் பாம்பை அணிந்துள்ளார். அப்பாம்போ படமெடுத்து சுழன்றாடுகிறது.

சிவபெருமான் போர்த்தியிருக்கும் யானைத் தோலது மேன்மேலும் படர்ந்து ஆடுகிறது.

இவ்வாறுயாவும் ஆடவே சிவபெருமானின் இடப்பாகம் அமைந்த தேவியும் ஆடுகிறாள். சிவனும் ஆடுகிறான். சிவசக்தியும் ஆடுகிறாள். இருகூரும் சேர்ந்தாடும் தாண்டவம் சிங்காரத்தாண்டவமாகிறது.

பேரெழில் திருப்பாதம் கொண்ட மடக்கொடியே! கொட்டுக சப்பாணி! கோல மாமயிலே! தமிழ்பாடும் இசைப் பூங்குயிலே! கொட்டுக சப்பாணி. ஆடும் சிவபெருமானின் திருவடிவை அப்படியே படம்பிடித்து மிகநன்கு வருணித்துக் காட்டும் பெருங்கவிக் கோவின் ஆற்றலை விவரிக்க வார்த்தையே இல்லையெனலாம்.

இவ்வாறு சிவபெருமானும் அவனுடைய சக்தி மீனாட்சி தேவியும் இடையறாது ஆடிக்கொண்டிருப்பதால் இவ்வுலகம் இயக்கம் காண்கிறது என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார் பெருங்கவிக்கோ.



# 5. முத்தப் பருவம்

இது பதினோராம் திங்களில் நிகழ்வது, அது பிள்ளையை முத்தமிடும்படி வேண்டிக்கொள்வதாகும்.

மலையத் துவசன் மனமருந்தே
    வனப்பார் காஞ்சன மாலையெனும்
மாட்சிப் பட்டத் தரசியேவெல்
    மாதர்க் கெல்லாம் தலைத்தேவி

விலையில் லாத நவரத்தின
    மிளிரும் ஒளிரும் முடிசூட்டி
மேல்கீழ் வானப் பேரொளியாய்
    வெற்றி முரசாய் ஆண்டவளே!

நிலையாய் மூலா தாரங்கள்
    நிகரில் ஆறு முதலாகி
நெடிய வையம் கலந்தவளே
    நீரும் நெருப்பும் ஆனவளே!

கலைகள் முற்றும் கற்றவளே
    கண்ணே முத்தம் தருகவே
கால வடிவாம் பெருமாட்டி
    கனிந்த முத்தம் தருகவே! 1



*1.* இம்முத்தப் பருவம் இனியது. குமரகுருபரர் தாம்பாடிய மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழில் வரும் இம்முத்தப் பருவத்தை அரங்கேற்றுங் கால் மீனாட்சி அம்மையே ஒரு பெண்குழந்தை வடிவில் வந்து அர்ச்சகர் மடியில் இருந்து தாம் அணிந்திருந்த முத்துமாலையைக் குமரகுருபரர் மீது வீசியதாகக் கூறுவர். இதனால் இம்முத்தப் பருவம் சாலச் சிறந்தது. இம் முத்தப் பருவத்தை இனிய தமிழில் தமது கவிப் பெருந்திறன் வெளிப்படப் பாடியிருக்கிறார் பெருங்கவிக்கோ. இசைவல்லார் இசையரங்குகளிற் பாடி இன்புறுதற்கும் அதைக் கேட்டு மெய்யன்பர்கள் மகிழ்தற்கும் உரிய பருவம் இது.

மலயத்துவச பாண்டியனின் மனத்துயர்போக்க அவனின் அழகுப் பெண்மகவாக உதித்தவள் மீனாட்சி. காஞ்சனமாலையின் மாமகளும் அவளே! அணிமுடி சூடிமதுரையை ஆண்டவள் அவளே! மாதர் தமக் கெல்லாம் தலைமைத் தேவி அவளே!

விலை மதிப்பற்ற நவரத்தினங்களைத் தம் அணிமுடியில் சூடியவள் மீனாட்சி. வெற்றி முரசொலிக்க மேல், நடு, கீழ் என்று சொல்லப்படும் மூவுலகங்களையும் ஆண்டவள் கயல்விழி அம்மை.

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று சொல்லப்பெறும் ஆறு ஆதாரங்களிலும் முழுதும் கலந்து நிறைந்துள்ளாள் அன்னை மீனாட்சி. தேவி உபாசகர்கள் இதை நன்குணர் வர். மூல குண்டலி சக்தியென்று கூறப்படுபவள் தேவி. வையம் முற்றும் அன்னை சக்தியின் பேரியக்கமே! நீர், நெருப்பு, காற்று, நிலம், விண் என்று கூறப்படும் பஞ்ச பூதங்களும் அவளே!

சகல கலை ஞானங்களும் கைவரப் பெற்றவள் மீனாட்சி அன்னை. வில்வித்தை, வாள்வித்தை ஆகிய போர்வித்தைகளெல்லாம் தேர்ந்தவள் அன்னை அங்கயற் கண்ணி.

உலகிற்கெல்லாம் கண்ணைப் போன்றவளே! முத்தம் தருகவே, காலங்களுக்கெல்லாம் உன்னதத் தலைவியே! தவப் பெருமாட்டியே! கனிந்த முத்தம் தருகவே!

அகத்திய முனிவர் உறைவது அரும் பொதியமலை. அறந்தவறாமல் நாட்டையாள்வதற்கோர் அடையாளமாகத் தன்கொடியிற் பொறித்துக் கொண்டான் பொதிய மலை வடிவத்தை. அதனால் அவன் மலயத்துவச பாண்டியமன்னன் என்றும் பெயர் பெற்றான். துவசம் என்பது கொடியைக் குறிக்கும் சொல்லாகும். அம்மாமன்னனின் ஆட்சியிலும் அவனுடைய திருமகளான மீனாட்சியின் ஆட்சியிலும் அறம் நிறைந்திருந்தது என்பது உணர்தற்குரியது.

வானம் பூமி நீர்காற்று
 மலையுடன் பஞ்ச பூதங்கள்
வடிவாய் ஆன வாகைமகள்
 வாஞ்சை அடியார் உளமுறைவாள்!

தானம் செய்வார் தமைஏற்பாள்
 தவம்செய் வாணர் அமுதாவாள்
தகுதித் தலைமை நிறைவாவாள்
 தமிழின் நீதி அறமாவாள்

மனமும் அறிவும் உரிமைகளும்
 வளர்ந்தே ஒருங்கே புதுமைதேர்
வறுமை இல்லா அமரர்வாழ்
 வாகை சூடும் பொன்னாடு!

மோகத் தவத்தின் முதலான
 முத்தே முத்தம் தருகவே!
முதிர்தேன் வடிக்கும் நறுந்தேவி
 முறுவல் முத்தம் தருகவே! 2



2. அன்பு மிகுந்த அடியார்களின் உள்ளத்தில் உறைகின்ற அன்னை மீனாட்சி நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம் என்று கூறப்பெறும் ஐம் பெரும் பூதங்கள் ஆனவள். மலையெலாம் நிறைந்த மாதரசியும் அவளே!

தான தருமங்கள் செய்யும் சிவச் செல்வர்களை ஏற்பாள் தவஞ் செய்வாரின் தவமாக அமைந்து அவர்தம் உள்ளத்தில் அமுதாக இனிப்பாள். தகுதியுடையோரின் தலைமையாவாள். குறைவிலா நிறைவு ஆவாள் கோல மீனாட்சி. தமிழர்தம் நெறியும் நீதியும் நெறியும் ஆவாள் அவளே!

அவள் ஆட்சி செய்யும் பொன்னாடு மனம், வாக்கு, காயம் இம் மூன்றும் தூய்மையுடையவர்கள் நிறைந்தது. அவள் நாட்டில் வறுமைக்கே இடமில்லை. அனைத்துரிமைகளோடும் அவளுடைய நாட்டில் வாழ் மக்களுக்கு உரிமை உண்டு. தேவர்களும் அவள் நாட்டில் விரும்பி வந்து உறைகின்றனர். வெற்றி வாகை சூடும் நாடு அன்னை மீனாட்சி ஆளும் நாடு.

ஆர்வத்துடன், ஆசையுடன் மலயத்துவசன் செய்த தவத்தால் வந்த முதலான முத்தானவள் அங்கயற்கண் அம்மை. அவளை அருமையாக ''முத்தே! முத்தம் தருகவே!'' என்று அகங்குளிரப்பாடுகிறார் பெருங்கவிக்கோ.

தேன் சிந்தும் மொழியும் முறுவலும் உடையவளே! தேவி மீனாட்சியே! ''முத்தம் தருகவே!

மனம், மொழி, உடம்பு இம் மூன்றும் தூய்மையாகக் கொண்டோர் மாதேவி மீனாட்சி அன்னையின் திருவருளுக்கு நிச்சயம் பாத்திரமாவர் என்பது இப்பாடலில் உணர்த்தப் பெறுகிறது.

பிடியாய் அன்ன நடையாகி
    பீடும் பெருமை யும்மிளிர
பேரறி வாளர் **நரசிம்மன்**
    போன்றார் உதவிப் பொருள்குவிய

வடிக்கும் கோயில் வளர்ந்தோங்க
    மதிக்கும் தோற்றம் ஏற்றமுற
மகுடம் சூடும் குடமுழுக்கும்
    வாழிய வென்றே நிறைவுபெறும்

படிப்பார் மறைதேர் காளிதொழு
    **பணிசிவாச் சாரியார்** பட்டர்களும்
பாங்குடன் பூசை மணிஒலிகள்
    பயன்படக் கொணர்ந்தே நிறைவாக்கும்

முடியாப் பணிகள் முடிதேவி
    முத்தே முத்தம் தருகவே!
முதிர்தேன் வடிக்கும் பெருமாட்டி
    முறுவல் முத்தம் தருகவே! 3



3. பிடியென்னும் பெண்யானை என்று குறிக்கப்பெறும் பேரரசி மீனாட்சி பெருமை மிகுந்திட நடந்துவரும் பெருமிதம் உடையவள். அன்னம் போன்ற நடையழகு அமைந்தவள் பேரறிவாளர் நரசிம்மன் போன்றோரின் உதவியால் குவிந்த பெரும் பொருள் கொண்டு உருவாக்கப் படும் அன்னையின் கோயில் வளர்ந்தோங்கிய வண்ணமுள்ளது. கோயிலின் தோற்றம் எடுப்பாக ஏற்றமுற்றுத் திகழ்கிறது. அக்கோயிலின் குடமுழுக்கும் அதிசிறப்புடன் நிறைவு பெறும். வாழிய வென்ற வாழ்த்தொலிகள் எங்கும் கேட்க, அன்பர்கள் ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் என்று கரங்கூப்பி அன்னையை வணங்கி யேத்தக் குடமுழுக்குத் திருக்காட்சி அமையும்.

அன்னையின் புகழை அமுதத் தமிழிற் படிப்போரும், மறையாகமம் தேர்ந்த சென்னை காளிகாம்பாள் அருள்மிகு சிவாச்சாரியார் மற்றும் குருமார்களும், சிவாச்சாரியார்களும், பட்டர்களும் குடமுழுக்கு விழாவிற் கலந்து கொண்டு, கணகணவென்று கோயிற் பூசை மணிகள் மங்கள நாதம் எழுப்பக்குட முழுக்கு விழாவைக் கோலகலமாக நிறைவு செய்வார்கள்.

முடியாமல் இன்னும் எஞ்சியிருக்கும் பணிகளையும் முடித்து வைக்கின்ற தேவி மீனாட்சியே! ''முத்தே முத்தம் தருகவே! முறுவல் பூத்தவளே! தேனைவடிக்கும் இதழுடைய தேவியே! பெருமாட்டியே! ''முத்தம் தருகவே''!

புவனங்களுக்கெல்லாம் நாயகியான அன்னை மீனாட்சியின் புண்ணியத் திரு முழுக்குப் பெரு விழாவிற் பல துறைவாணர்கள் கலந்து கொண்டு விழாவை நிறைவு செய்வதை இப்பாடலில் பெருங்கவிக்கோ பத்தியுடன் விவரித்துள்ளார். முடியாத பணிகளை முடித்துவைக்க அன்னை யன்றியாரால் முடியும்? ஆம், அவளால் தான் முடியும்; அவளருளால் தான் அனைத்து நிகழ்ச்சிகளும் வெற்றியுடன் நிறைவேறும் என்பதை இப் பாடலின் மூலம் உணர்ந்து, எல்லாம் அவள் பொறுப்பே என்று அமைதியுடன் இருப்போம் என்றிருக்கச் செய்கிறது நம்மை.

மேகம் பொழியும் முத்துமழை
    விரிகடல் விளையும் முத்துக்கள்!
மேன்மைச் செந்நெல் விளைமுத்து
    மிகுதி சுவைக்கும் கரும்புமுத்து!

நாகம் ஒளிரும் முத்துக்கள்
    நாளும் தெரிக்கும் பல்வகையாம்
நானிலம் முதிர்க்கும் முத்துக்கள்
    நாயகி முத்துக் கீடாமோ?

ஏக முத்தம் எலாம்தன்னுள்
    இனிதாய் அடக்கி நகைப்பவளே!
இணைஇல் லாத முதன்மகளே!
    இதயம் வாழும் வான்மகளே

மோக முத்தம் தருகவே
    முத்தே முத்தம் தருகவே!
முதிர்தேன் வடிக்கும் பெருமாட்டி
    முறுவல் முத்தம் தருகவே! 4



4. வான்மேகம் முத்தாக மழைபொழிகிறது! பரந்த கடலில் முத்துக்கள் விளைகின்றன. வயலிற் செந்நெல் முத்துக்கள் விளைகின்றன. கரும்புகளில் கணுமுத்துக்கள் காணப்படுகின்றன. நாகங்களின் ஒளி முத்துக்கள் மற்றும் நானிலத்தில் உள்ள முதிர்ந்த முத்துக்கள். இவையாவும் மீனாட்சி நாயகியின் வாய் முத்துக்கு ஈடாகுமோ? ஆகாது; ஆகாது!

எல்லா முத்துகளையும் தன்னுள்ளே இனிதாக அடக்கி நகைக்கின்ற நாயகியே! இணையில்லாத முதலுக்கும் முதலான முதன்மைத் திருமகளே! அன்னவர்களின் இதயமெலாம் நிறைந்து வானவர்கள் தலைவணங்கிப் போற்றுகின்ற சீருடைய செல்வமாமகளே! ஆசையை மூட்டும் ''முத்தம் தருகவே'', ''முத்தே முத்தம் தருகவே'', ''முதிர்தேன் வடிக்கும் பெரு மாட்டி முறுவல் முத்தம் தருகவே!'' என்றுபாடுகிறார் பெருங்கவிக்கோ.

அன்னை மீனாட்சி உலகமெலாம் ஆளும் உலக நாயகி, அவளுடை அருள் மணம் கமழும் வாய் முத்தத்திற்கு ஈடிணை கூற எவராலும் இயலாது என்பது கருத்திற் கொள்ள வேண்டிய குறிப்பாகும்.

''முருகனைப் பற்றிய பாடல் ஒன்றில், 'முருகா, முத்துக்கள் ஒவ் வொன்றிற்கும் உலகில் ஒவ்வொரு விலையுண்டு. உன் வாய் முத்திற்கோ எவரும் விலை நிர்ணயம் செய்ய இயலாது'' என்று பாடப் பெற்றுள்ளது. இங்குக் கருதத்தக்கது.

கடலிற் பிறவாப் பவளம்போல்
  கனிந்த இதழின் கலைஒயிலோ?
கவின்சேர் திருவார் முகத்தோற்றம்
  கதிர்கள் காணாத் தாமரையோ?

புடம்போட் டெடுக்காத் தங்கம்தான்
  பொன்னார் மேனி அமுதுருவோ?
புலம்பிக் கரையாக் காகங்கள்
  போற்றி வளர்க்காக் குயிலிசையோ?

நடமா டித்தான் பூமியிலே
  நர்த்தனம் ஆடாப் புதுமயிலோ?
நந்த வனத்தின் வண்டினங்கள்
  நாட இயலா ஒருமலரோ?

முடமா காதார் கொம்புத்தேன்
  முத்தே முத்தம் தருகவே!
மூலா தாரத் தொருமகளே
  மூரல் முத்தம் தருகவே! 5



5. இப்பருவத்தின் 5வது பாடல் அம்பிகையின் திருவுருவ வருணனையாக மிக அழகுற அமைந்துள்ளது. வருணனை பெருங்கவிக் கோவின் புலமையை இனிது புலப்படுத்துகிறது.

கடலிற் பிறவாத முத்து அவள். இயற்கையாக முத்து விளையும் இடங்களில் கவினார் கடலும் ஒன்று. அருளம்பிகை அப்படியல்ல. பவளம் போன்ற செவ்வாய் இதழ் படைத்த பராசக்தி அன்னை கலையழகு வடிவிற்கோர் எடுத்துக்காட்டு. அவளுடைய திருமுகத்தோற்றம் மலர்ந்த தாமரையோ எனவியக்கவைக்கிறது.

புடம் போட்ட சுத்தமான தங்கமோ அவளுடைய பொன்னிறமேனி? அமுதவடிவோ அவள்? எனப்புலவர்களைப் புகழ்பாடவைப்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

கரையாத காகங்கள் போற்றி வளர்க்காத குயில்களின் இனிய இசையோ அன்னையின் இன்னிசை?

ஆடிவருவது அழகு மயில்களின் இயல்பு. அன்னையோ நாட்டியம் ஆடாத புதுமயிலோ? என ஆச்சரியப் படவைக்கிறாள். அவள் தெய்வமல்லவா? உண்மையில் சிவசக்தியான அன்னை நடனம் ஆடத் தொடங்கினால் அது எப்படி இருக்கும்? அவள் ஆட அண்டங்கள் ஆடும்! அகில சராசரங்கள் ஆடுமல்லவா? சற்றே கற்பனை செய்துபார்க்கக் கற்பனை கடந்தே இருக்கிறது அவள் திரு நடனம்.

நந்நதவனத்தில் ரீங்காரமிடும் வண்டினங்கள் நாட இயலாத ஒரு புதுத் தேன் மலராகத் திகழ்கிறாள் அம்பிகை.

பொதுவாக, நடக்க முடியாத முடவன் எட்டமுடியாத மரங்களின் கொம்பிலிருக்கும் தேனுக்கு ஆசைப்பட்டால் அது நடக்கக் கூடிய செயலா? அன்னையோ முடமாகாதவர்கள் எட்டும்படியான கொம்புத் தேனாக உள் ளாள். அதனால் 'கொம்புத்தேன் முத்தே முத்தம் தருகவே! மூலாதாரத்தில் குண்டலி சக்தியாக முகிழ்ப்பவளே! மூரல் முத்தம் தருகவே!

இப்பாடலில் அமைந்துள்ள அம்பிகையின் வருணனையான திருவடிவை அப்படியே மனத்தில் இருந்தித் தியானிப்பார்க்கு அம்பிகை நிச்சயம் கருணையுடன் காட்சி தருவாள். இது பெருங்கவிக் கோவின் திடமான நம்பிக்கை.

## வேறு

இந்தியத் திருநாட்டி ருந்துவந்து குடியேறிய
இனியபல மொழிபேசும் மக்களெல்லாம்
இருகரம் கூப்பிமனம் இருத்தி வழிபடவே
ஏற்றதோர் ஆலயம் இலாநிலையை

சிந்தையில் எண்ணிய சித்தமுடைப் பக்திதொழு
சிறந்தஞா னந்தரும் போதனையர்
சிரமேற்கொண்டு வரமேற்கொண்டு தேவிமீனாட்சி அம்மை
சிலைவடி சிற்பிபோல் எண்ணிஎண்ணி

வந்தித்து வந்தித்து வனைந்தேத்தி பணிந்துபணிந்து
வணங்கிஇணங்கி வடித்தெடுத்த வான்கோயில்
மணிகொண் டிழைத்திடும் வளர்கோயில் நிலைகோயில்
மகுடத்தின் மகுடமான வனப்பாகவே

செந்திருக் கோலமா மயிலே செம்பொற்பாதத் தேவியே
செவ்வாயின் முத்தமருளே!
தேவநாடு போலவே பூவுலக நாட்டம்மை
செவ்வாயின் முத்தமருளே! 6



6. இந்தியத் திரு நாட்டில் இருந்து வந்து அமெரிக்காவில் குடியேறிய இனிய பல திறப்பட்ட மொழிகள் பேசுவோர்கள் யாவரும் பக்தியுடன் சிரங்குவித்தும் இருகரங்குவித்தும் வழிபடுவதற் கோர் திருக்கோயில் இல்லாத நிலையைப் போக்கிட முனைந்தனர் பலர். அவர்களின் சிந்தையில் அன்னை மீனாட்சிக்குத் திருக்கோயில் அமைக்கும் எண்ணம் நிறைந்தது. அந்த எண்ணத்தின் பயனாக அன்னையின் ஆலயம் சிறப்புடன் எழுந்தது. அன்பர்கள் வந்தித்தும் சிந்தித்தும் பயன் பெறவே, ஒளிவீசும் மணிகள் கொண்டிழைக்கப் பெற்றவானோங்கும் திருக்கோயிலில் அமர்ந்த வனப்போங்க ஆட்சிசெய்யும் தேவி மீனாட்சி அன்னையே! செம்பொற்பாதக் கமலங்களுடன் செந்திருமாமகளைப் போல் காட்சிதரும் கோல மாமயிலே! அம்பிகையே! செவ்வாய் முத்த மருளே! தேவர்களின் உலகம் போல் திகழும் பூவுலகில் பொன்னாடான அமெரிக்காவில் கூசுடன் உயர் நகரில் உறையும் தேவியே! செவ்வாயின் முத்த மருளே!

உண்மையிலேயே பன்மொழி பேசும் உயர்ந்த அன்பர்கள் முனைந்து அன்னைக்கோர் ஆலயம் எழுப்பிட உறுதியாக முயன்றதால், இன்று இவ்வையம் பக்தியுடன் பணிந்து வணங்கி அன்னையின் திருவருளுக்குப் பாத்திரமாக முடிந்தது என்பது பெருங்கவிக்கோவின் கருத்தென்பதில் ஐயமில்லை.

அறிவியல் துறைகளில் நிறைவுடைப் பணிபல
ஆக்கங்கள் சேர்க்கும் நிலையும்
அன்றன்று புதுமைகள் என்றென்றும் நிலைத்திடு
அற்புதம் படைக்கும் திறனும்
பொறிஇயல் துறைகளின் புலம்தெளி ஆற்றலும்
புடம்போட்ட செம்மைக் களமும்
புறம்புறம் வெளியெலாம் புடைபுடை மறைவெலாம்
புகுந்துதாம் தேடலின் நலமும்
நெறிஇயல் வான்வெளி நிலைகொணர் பதமும்
நெடும்புவி இணைதொடர் புகளும்
நிகரிலாப் பல்துறை அறிஞரைத் தம்நாடே
நெஞ்சேற்க வைத்திடும் புகழும்
செறிஇய லெல்லாம்வளர் அமெரிக்கா அமர்தேவி
செவ்வாயின் முத்த மருளே
தேவநாடு போலப்பூ வுலகு நாட்டம்மை
செவ்வாயின் முத்தமருளே! 7



7. அமெரிக்க நாட்டில் அறிவியல் துறைகள் ஆக்கங்கள் காணப் பணிகள் பல நிறைவாகச் செய்யப்படுகின்றன. அன்றன்று அற்புதம் சேர் புதுமைகள் தோன்றிய வண்ணமிருக்கின்றன.

பொறியியல் துறைக் நெறிப்படத் தெளிந்த ஆற்றலுடன் செயற் படுகின்றது. திறந்த வெளியெலாம் மறைவான இடமெலாம் நிறைந்த நலங்கள் தேடப் பெறுகின்றன.

வான்வெளியில் நிகழும் இயல்பான நெறிகளை வையகம் போற்றத் தொடர்ந்து ஆய்வு செய்யப் பெறுகின்றன. இணையில்லாத பல்வகைத் துறைகள் அறிஞர் தம்மை நெஞ்சேற்க வைப்பதால் நிலைத்த பெரும் புகழை எய்துகின்றன. இவ்வாறு பற்பலவகைப்பட்ட எண்ணிலா இயல்கள் அற்புதகமாக வளர்ந்து வரும் அமெரிக்க நாட்டில் அமர்ந்தருளும் அன்னை தேவி மீனாட்சியே! செவ்வாயின் முத்த மருளே! தேவருலகு போன்று திகழும் பூவுலகில் வணங்கும் அமெரிக்க நாட்டு அம்மையே!

செவ்வாயின் முத்தமருளே!

ஆக்கம் தரும் துறைகள் ஊக்கமுடன் இயக்கம் பெறும் காரணத்தால் அமெரிக்கத் திருநாடு அவனியிலேயே முதன்மை பெற்றுத் திகழ்கிறது என்பதை அழகுற ஆணித்தரமான பாடலால் விளக்குகிறார் பெருங்கவிக்கோ அவர்தம் இப்பாடலின் வாயிலாக அமெரிக்க நாட்டில் எல்லா இயல்களும் துறைகளும் இருப்பதை உணரமுடிகிறது.

ஆண்பெண்கள் பேதங்கள் தானிந்த உலகினில்
அற்றிடச் சமனிலை மேவி
ஆண்பெண்ணாம் இருபாலும் ஒருபாலாய்ச் செயற்படும்
அளப்பரும் அன்புநிலை தாவி

பூண்பணி அனைத்திலும் பொரும்நிலை ஒருநிலை
புரியாமை அறியாமை சீவி
பொதுப்பணி முதலெந்த தனிப்பணிவரை இந்த
புண்ணியத் திருநாடு கூவி

காண்பார்கண் பூக்கவே காதலால் இறுக்கியே
கட்டியே அணைத்திடும் ஆவி
காளையர் குமரியர் கிழவர்முதல் கிழவிவரை
கலந்து கலந்தின்பம் கூடி

தீண்டாமை இருபாலும் இலாநாட்டுத் தேவியே
செவ்வாயின் முத்தம் அருளே
தேவநாடு போலப்பூ வுலகநாட் டம்மையே
செவ்வாயின் முத்தமருளே! 8



8. ஆண், பெண் பேதம் இன்றி, ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்ற நிலை மேவியது மேன்மை பெற்ற முதன்மை நாடு அமெரிக்கா. ஆண், பெண் இருபாலாரும் அன்புடன் கூடிக் குலவி எங்கும் உலவுவதைக் காணமுடியும். அவர்கள் எவ்விதப்பேதமின்றிச் செயற்படுவார்கள்.

ஏற்றுக் கொள்ளுகின்ற எல்லாப் பணிகளிலும் ஏற்படும் அறியாமை, புரிந்து கொள்ளாமை என்ற இரண்டையும் வாள் கொண்டு அறுத்துச் சீவி விடுவர் அமெரிக்க நாட்டுப் புண்ணியத் திருமக்கள்.

காண்பவர்கள் கண்கள் பூக்கவும் காதலினால் ஒருவருக்கொருவர் கட்டித் தழுவிடுவார். பொதுப்பணிகள் அனைத்திலும் பெருநலமே குடி கொண்டிருக்கும். கைகுலுக்கிக் கலந்து இன்பம் கூடும் வண்ணம் உறவாடுவர்.

தீண்டாமை என்கின்ற தீயதன்மை ஆண், பெண் இருபாலரிடமும் இல்லாது அமெரிக்க நாட்டை ஆளுகின்ற தேவி மீனாட்சி அன்னையே! செவ்வாயின் முத்த மருளே! தேவர்களின் உலகம் போல் திகழும் பூவுலச் சுவர்க்க பூமி அமெரிக்க நாட்டின் அம்மையே! முத்த மருளே!

இறைவன் படைப்பில் ஆண், பெண் இருவருக்கும் சரிசம உரிமைகள் உண்டு. ஆணுக்கொரு பெண்ணும் பெண்ணுக்கோர் ஆணும் இல்லற வாழ்க்கை அமைதியுற, ஒழுங்குற, நடைபெற அவசியமாகும். இது இறைவன் வகுத்த விதியாகும். இவ்விதியை எவரும் மாற்ற இயலாது. இதனை இப் பாடலில் இனிது விளக்கியுள்ளார் பெருங்கவிக்கோ. அவருடைய இப்பாடலின் மூலம் அமெரிக்காவில் ஆண், பெண் என்கின்ற பேதமில்லை. இருபாலாரும் வாழ்வியலிற் சமமே. தீண்டாமை என்கின்ற தீயபேய்க்கு அமெரிக்காவில் அறவே இடமில்லையென்பது குறிப்பிடத் தக்கது.

வாரியும் மலைகளும் வளமான பூமியும்
　　வகுத்தளி இடைஇடைப் புகுந்து
வளமோங்கு பச்சைசூழ் மரகதப் பாவாடை
　　மார்பகக் குவடுமறை கச்சையாய்

நாரியரும் ஆடவரும் வேறுபாடி லாவகையில்
　　நன்னாடு செழிக்கஉழை அமெரிக்கா,
நளிகடல் நீருண்டு கருக்கொண்டு மேற்சென்று
　　நனிகரு முகில்பொதிய மலையினில்

மாரியாய்க் கருவுயிர்க்கும் மாட்சித் தமிழ்நாட்டின்
　　மடிதவழ் ஒப்பிலா அன்னை
வனிதையர் தம்மினம் சமநிலை நோக்கியே
　　வந்திங்கு தங்கியே அருளுவாள்.

தேரிய கொள்கைகள் வீரிய நிலைத்தேவி
　　செவ்வாயின் முத்த மருளே!
தேவநாடு போலப்பூ வுலகநாட் டம்மையே
　　செவ்வாயின் முத்தமருளே! 9

கடலும் மலையும் நிறைந்த வளமான பூமி அமெரிக்கா அப்பூமி யெங்கும் மரகதப் பாவாடையும் கச்சையும் அழகுக் காட்சி தருகின்றன.

பெண்டிரும் ஆடவரும் வேறுபாடின்றிப் பழகும் பண்புள்ள, பாங்குள்ள, செழிப்புள்ள, செல்வமுள்ள நன்னாடு அமெரிக்கா. நீருண்ட மேகங்கள் கருக் கொண்டு மாரி பொழிகின்ற நீர்வளங்கொண்ட பொன்னாடு அமெரிக்கா.

மாரி வளங்குன்றாத மாட்சிமை தங்கிய தமிழ் நாட்டின் தவமடியில் தவழ்கின்ற தன்னிகரில்லாத அன்னையான மீனாட்சி வனிதையர் கொண்டாடும் வல்லியாக விளங்குகின்றாள் அத்தமிழ் நாட்டு மதுரை மீனாட்சி அன்னை அமெரிக்க நாட்டிக்கு வந்து தங்கி அனைவருக்கும் அருளுகின்றாள்.

நேரிய, சீரிய, தேரிய, செவ்விய கொள்கைகள் மேவிய அமெரிக்க நாட்டில் வீரியநிலையுடன் விளங்கும் தேவி மீனாட்சி அன்னையே! செவ் வாயின் முத்த மருளே!

தேவர்கள் வாழ்கின்ற திருவுலகம் போல் திகழும் பூவுலகத்தில் அமைந்த அமெரிக்க நாட்டின் அம்மையே! செவ்வாயின் முத்தமருளே!



முத்தம்பனி முத்துதிரும் முத்தங்கள் வழிந்திட
　　முத்தமுகில் முத்திரங்கி வரவும்
முத்துச்சொல் கரும்புதிர் முத்தங்கள் இனித்திட
　　முதிர்முத்தம் முனைந்து விஞ்சிட

முத்தமுங் கில்கள்தாம் முத்துதிர்ந்தே நிறைந்திட
　　முத்துமுத் தாக விளையும்நல்
முத்துக்கடல் முத்துக்குவி முத்தொளி குவிந்திட
　　முத்தொளிர் முத்துநகை மங்கையர்

முத்துப்பல் காட்டியே முத்தைவெல் ஒளிநகை
　　முத்துக்கள் சிந்திச் சிதறிட
முத்துச்சொல் விளைநிலம் முத்தங்கள் முத்திதிர்க்கும்
　　முத்துமுத் தாய்வளர் திருநாடு

முத்தங்கள் பொலிமுத்தம் முத்துக்கள் அருள்தேவி
　　முல்லையே முத்த மருளே!
முத்தங்கள் மொத்தங்கள் வித்தகம் குவிப்பவளே
　　முதல்வியே முத்தமருளே! 10

10. பனித்துளிகள் முத்துக்களாகக் காட்சி தருகின்றன. வானிலிருந்து நட்சத்திர முத்துக்கள் இறங்கி வருகின்றன. வாயிலிருந்து வரும் சொற்கள் மதிப்புடைய முத்துக்களாக வெளிப்படுகின்றன.

கரும்புகளில் காணப்பெறும் கணுமுத்துக்கள் இனிக்கின்றன. மூங்கிற்கணுக்களிலும் முத்துக்கள் காட்சி தருகின்றன. கடலிலும் முத்துக்கள் விளைந்திருக்கும் காட்சி இன்பம் அளிக்கிறது. மங்கையர்கள் முத்துநகை யுதிர்க்கின்றனர். அவர்களின் நகைப்பில் இருந்து முத்துக்கள் சிந்திச் சிதறிய வண்ணமிருக்கின்றன. முத்துக்கள் விளைகின்ற முத்தான மூத்திருநாடான அமெரிக்காவில் முத்தான தாய் வளர்கின்றாள். அங்ஙனம் அழகுடன் வளர்கின்ற தேவி மீனாட்சி அன்னையே! முத்தங்கள் அருளுகின்ற முதல்வியே! முல்லை மலரே! முத்த மருளே!

வித்தகியே! முத்தழகியே! முல்லைப் பூவே! முதல்வியே முத்த மருளே!

இப்பாட்டில் இடம் பெற்றுள்ள யாவும் முத்துக்களாக, முத்தங்களாக உள்ளன. இவ்வண்ணம் அமைத்துக் கவிதை யழகு மிளிரும் வண்ணம் பாடியிருக்கிறார். முத்தான பெருங்கவிஞர் பெருமான் பெருங்கவிக்கோ. இப்பாடல் மிகவும் அன்பர்கள் சுவைத்தின்புறுதற்குரியது. பல தடவைகள் பாடியின்புறுவோம். (இத்தகையதொரு முத்தான பாடலைத் தந்த பெருங்கவிக்கோவைப் போற்றி வாழ்த்துவோம்).

# 6. வருகைப் பருவம்

இது பதிமூன்றாம் திங்களில் நிகழ்வது, இது தோழியர்கள் பிள்ளை நடந்து வருதலை விழைந் தழைப்பதாகும்.

முகில்கொஞ்சும் மலைமேவும் தகவுபல் லடுக்குகள்
முற்றும் மரம்செடி கொடிகளே!
முற்றுகை இடவுமதில் முற்றிலும் இலைதழைகள்
முதிர்ந்தே உதிர்ந்துமே போகவும்

தகிதகிக்கும் வான்சுடர் தான்மயங்கிக் கார்களிலும்
தட்டுத் தடுமாறிப் பின்நேரத்தில்
தாவுமேல்வான் போகும்நே ரத்தினில் முகம்காட்ட
சந்தனப் பொட்டுவை முகம்போல

மகிமைமிகு செந்தூரம் மஞ்சளில் கலந்ததுபோல்
வட்டவடிவ மாகவே தெரிந்திட
வனப்புக்கும் வனப்பாகி செங்களம் கண்டபோல்
வான்காண மேல்மாறி மாறவே

வகிடெடுத்த உச்சிபோல் நெடுஞ்சாலைசூழ் வளர்நாட்டு
மதிமகளே வருக வருகவே!
மனிதநே யம்வளர் மாட்சியின் காட்சியே
மனைமகளே வருக வருகவே! 1

அம்மையை அன்புடன் வருக வருக வென்று அழைக்கும் அருமை மிகுந்த வருகை பருவத்தை மிக அற்புதமாகப் பாடியுள்ளார் பெருங்கவிக்கோ.

வானையெட்டும் மலைகள்! மரம் செடி கொடிகள். முதிர்ந்த இலைகள் தழைகள் முற்றிலும் உதிர்ந்து கிடக்கினறன.

வான் சுடரான கதிர் உதயமாகிப் பகல் முழுதும் ஒளிவீசி மாலையில் மஞ்சள் வண்ணத்தொடு மறைகிறது. சந்தனப் பொட்டு வைத்த திருமுகத்தை இயற்கை அன்னை காட்டுவது போலவும், தலை உச்சியில் வகிடெடுத்தாற் போன்ற நெடுஞ்சாலைகள் சூழ்ந்திருப்பது போலவும் அமைந்த அமெரிக்க நாட்டில் அழகுக்கு அழகாகித் திருக்கோயில் கொண்ட, மதி கொண்ட மீனாட்சி அன்னையே! வருக வருகவே!

மனிதநேயம் வளர்கினற புனிதக் காட்சியின் மாட்சியானவளே! மங்களம் பொங்கச் செய்பவளே! மனையறம் வளர்ப்பவளே! மலைமகளே! வருக வருகவே!

மனிதநேயம் அமெரிக்க நாட்டு மனிதரிடை மிகுந்து காணப்படுவதால், அந்நாட்டார் அனைவர்களும் ஒருவருக்கொருவர் அளவளாவி மகிழ்கின்றனர். இம்மனித நேயத்தைத்தான் இன்னும் ஒருபடி உயர்த்தி ஆன்மநேயம் என்று வள்ளலார் கூறுவது இங்குக் கருதத்தக்கது.



சங்கர குமரனின் தண்டமிழ் மழலையின்
தவமேவு பழநிமலை ஆண்டி
சாந்திதரு தேவகழல் தானொலிக்கும் சிலம்பினுடை
தந்தோம் தினத்தோம் இசைபோல

பொங்கிடும் தாளமொடு பொடிப்பொடி அடிபடப்
போடுதா எங்களே வெடிபட
புனைபல மொழிகளின் வினைஎழும் சந்தங்கள்
புதுப்புதுக் கோலங்கள் ஆகவே

செங்கரம் உடைகுழல் மாதர்கள் பாடிஆடி
சேர்ந்துமகிழ்ந் தேகொஞ்சி வாழவும்
தினைஅளவும் வேறுபாடு தனைஅறியா மாந்தர்களின்
தேசம் அமெரிக்கா தன்னிலே

மங்கையர் குலத்திற்கோர் மாத்தலைமை மீனாட்சியே
மதிமகளே வருக! வருகவே!
மனிதநே யம்வளர் மாட்சியே காட்சியே
மனைமகளே வருக! வருகவே! 2

சங்கரனாகிய சிவபெருமானின் திருக்குமரன் பழநியில் ஆண்டியாகியுள்ளான், அவனுடைய பாதச் சிலம்புகள் தாம்தோம் தினதோம் தகிகிடதோம் திமிகிடதோம் என்று இன்னிசைத் தாள ஒலி எழும்புகின்றன இத்தாள ஒலிகளைப் போலப். பல மொழிகளின் சந்தங்கள் புதுப்புதுக் கோலங்கள் ஆகின்ற.

மாதர்கள் ஆடிப்பாடிச் சேர்ந்து மகிழ்ந்து வாழ்கின்றனர். தினையளவு கூட வேறுபாடு கூற முடியாத தேசமான அமெரிக்காவில் மங்கையர் குரு மாமணியாகத் தலைமை கொண்ட மீனாட்சி அம்மையே! மதிமகளே, வருக வருகவே!

மனித நேயமும் ஆன்ம நேயமும் மிகுந்திட மனையறம் விளங்கச் செய்பவளான மலைமகளே! வருக வருகவே!

தேசங்கள் அனைத்திலும் உயர்ந்தொளிர்கின்றது அமெரிக்காவெனும் தேசம். அத்தேசம் துறைகள் யாவும் நிறைந்தோங்கித் திகழ்வதற்கு முக்கிய காரணம் அப்பெருந்தேசத்தில் தினையளவு கூட வேறுபாடென்பது கிடையா தென்று திட்டவட்டமாக உறுதிபடச் சொல்கிறார் பெருங்கவிக்கோ. அது முற்றிலும் ஏற்பதற்குரியது.

தவமிருந்து பரமனுடைத் திருவுடம்பில் ஒருபாதி
தனக்கெனப் பெற்றவளாம் அருள்மகளைத்
தான்விடுத்துப் 'பிருங்கிமா' முனிவனென் போனும்தான்
தகாதவழி வண்டுருவாய்ச் சென்றுதான்

சிவன்பாதி கண்டுநுழைந் தேவணக்கம் செய்போதினில்
சினந்தெழும் அன்னைதன் ஆற்றலால்
திமிரினை இழந்தான்முனி பிருங்கியே ஒப்பிலாத்
திசைதொழு தாயையும் போற்றினனே!

தவறுபுரி வோர்தெளிவு தகுதிபெற அருளுநிறை
சால்புநெறி உணர்த்துமறை தருதேவி
தனிப்பெரும் புவனவடி வாகிய பராசக்தி
தன்னளிசெய் காதலுக்குத் தானேங்கி

அவலமுறும் பெம்மானே ஊடல்தீர அடிபணியும்
அன்னாய் வருக வருகவே!
அருள்மனித நேயம்வளர் ஆட்சிக்கரு ணைத்தேவி
அம்மாவே வருக வருகவே! 3

தவமிருந்து சிவபெருமானுடைய உடம்பின் திருப்பாதியைப் பெற்றவள் தாய் பார்வதி. சிவனையன்றி வேறு எப்பெருமானையும் தலைவணங்காத மிருங்கி மாமுனிவர் வண்டின் உருக்கொண்டு சிவனை மட்டும் வணங்கினார். அது கண்ட அன்னை சினந்து சினந்தெழுந்து சிவன் ஒரு பாதி என்று சொல்லும் படியாக அர்த்த நாரீசுவரர் ஆகிப் ''பிருங்கி'' மாமுனிவரின் அகந்தையை அடக்கினாள். அதன்பின்னர் முனிவர் பிருங்கியும் அண்டமெலாம் திசையெலாம் தொழும் அன்னையைப் போற்றினார். இச் சரித்திரத்தை இனிது உள்ளடக்கி இவ்வருகைப் பாடலைப் பாடியுள்ளோர் பெருங்கவிக்கோ.

தவறிழைப்போரைத் தெளிவுபெறச் செய்து அவரை ஆட்கொண்டருளு கின்றாள். அன்னை மீனாட்சி.

புவன நாயகி பராசக்தி ஈசுவரியின் காதலுக்கேங்கியவர் ஈசுவரரான சிவ பெருமான். இருவருக்கும் அடிக்கடி ஊடல் நிகழும். முடிவில் தேவியே வெற்றி கொள்வார். அவ்வாறு தம் ஆவியான சுந்தரேசப் பெருமானைத் தம்வசமாக்குபவர் அன்னை. அவரை ''அன்னாய் வருக வருகவே!, ''அருள் மனித நேயம்வளர் ஆட்சிக் கருணைமேவி அம்மாவே வருகவருகவே'' என்று பாடுகிறார் பெருங்கவிக்கோ.

அகந்தை கொண்டோர் வெற்றியடையார்! அன்னையின் அருளுக்குப்பாத் தியம் ஆகார். முடிவில் தோல்வியினால் வருந்தி அகந்தை தீர்வர். இவ்வுண்மை யைத் தாயை விடுத்துச் சிவனை வணங்கிய பிருங்கி மாமுனிவரின் சரித்திரம் சான்றாக அமைகிறது.



மேகங்கள் மேற்தட்டில் வானூர்திகள்பல
மென்மேலே பறக்கின்ற தோவென
மிகுதியாய் வானிடைப் பறந்திடவும், மிகுந்திடவும்
வேறுபல வாகனங்கள் இணையவும்

போகங்க ளெலாம்திரண்டு புகுந்ததோ எனவியக்கும்
புடைபுடை நிறைந்திடும் வளங்களும்
புறம்புறம் நிறைசோலை எழில்களும் பொழில்களும்
புகுந்தங்கு வண்டுகள் பாடவும்

வேகத்தின் வேகமாய் விளைவுக்கும் விளைவாக
விழித்தெழுந்தே சூரியனை எழுப்பிப்பின்
வீழும்பரிதிபின் நேரம்தான் வீடுவந்து நன்றாக
வெற்றிவாழ்வு உழைவாழ்வு வாழும்சீர்

ஆகப்பல நிலைகளும் ஆளுமை காண்நாடுள்
அன்னாய் வருக வருகவே!
அருள் மனித நேயம்வளர் ஆட்சிக்கரு ணைத்தேவி
அம்மாவே வருக வருகவே! 4

மேகங்கள் மேவும் வானில் ஊர்திகள் பறக்கின்றன. அதேசமயத்தில் நிலத்தில் வாகனங்களெல்லாம் இணைந்து ஓடுகின்றன. போகபூமியென்று புகழும் படியாக எங்கு நோக்கினும் பூங்காக்கள் பொலிகின்றன. பொழில் வண்டுகள் எழில் இசை ரீங்காரம் புரிகின்றன.

சூரியன் எழுமுன்னே எழுந்து, அச்சூரியன் மறையும் வரை உழைத்து மக்கள் யாவரும் வெற்றி வாழ்வு காண்கின்றனர். இப்படியாகத் திகழும் அமெரிக்காவில் இனிது ஆட்சி மீனாட்சி ''அன்னாய் வருக வருகவே'', ''அருள்மனித நேயம்வளர் ஆட்சிக்கருணைத் தேவி அம்மாவே வருக வருகவே!

உழைப்பவரே உயர்வர். வெற்றி வாழ்வை விரைந்து அடைந்தவர் ஆவர்! 'அம்மாவே' என்று உள் அன்புடன் அழைப்போரின் குரலுக்கிரங்கி யருள் செய்ய அகில உலகங்களையும் பெறாது பெற்ற ''அம்மா'' வான அன்னை மீனாட்சி ஓடிவருவாள் என்ற உண்மையை உணர்த்துகிறார். ''அம்மா'' என்ற ஒலிக்கும் அவ்வளவு மகிமையுண்டு!

''அம்மம்மா என்றே அனுதினமும் உன்னை அழைத்தேனே! அருள் நலம் விழைந்தேனே!'' என்ற பாடலின் கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது.

கூதலோ கூதலென குளிர்நடுக்கம் தாங்கவொணா
　　கொடுங்கூதல் ஆட்டத்திற்குத் தகவே
குவிஆடை மேடையாய் உடல்மறைத்து முகம்மட்டும்
　　கூடுபாதை பார்த்துச்செல் பூமியுள்

பூதலத்தார் கூன்குருடு இருமல் குட்டம் குன்மம்
　　புலனுளபல நோய்களெல்லாம் தவிர்க்கவும்
புதிதாக வருநோய்கள் உடல்முடக்கு எயிட்சுமுதல்
　　புண்படுத்தும் பலநோய்க ளெல்லாம்

தீதகலக் குணமாக்கித் தெளிவுதரு வழிஅமைத்துத்
　　திருவடிப் பேறுதரும் செவ்வியாக
திசையெலாம் புகழ்பரவு வசையெலாம் தவிர்த்தருளி
　　திகழ்தொண் டர்தமையே ஓங்குவிப்பாள்

அதிகருணை அழகொளிரும் ஆனந்தி அம்மையே
　　அகமறையாம் பொருளே வருக வருகவே
அருள்மனித நேயம்வளர் ஆட்சிப் பெருந்தேவி
　　அம்மாவே வருக வருகவே! 5



5. கூதற்காலம், பனிக்காலம் உடல் நடுக்கம் தரும் குளிர்காலத்தில் நடுக்கம் தெரியாதபடி உடலைக் கம்பளி ஆடையால் மறைத்துச் செல்ல வேண்டிய பூமி.

இப்பூமியில் கூன், குருடு, செவிடு, இருமல், குன்மம், வாதத்தால் முடக்கு, எயிட்சு முதலான பிணிகளெல்லாம் தீர்த்துத் தீதகற்றிக் குண மாக்கி இறுதியில் திருவடிகள் சேரும் பேற்றினையளித்தும் தொண்டர் களை ஆட்கொள்ளுவாள் கருணையுருவான அன்னை மீனாட்சியென்று மிக அருமையாகப் பாடுகிறார் பெருங்கவிக்கோ.

அன்னையின் கருணைக்கோ, அரவணைப்புக்கோ ஓர் அளவே இல்லை. அவள் அழகே வடிவானவள் ஆனந்தவல்லியென அவளை அருமறைபாடும். அதனால் அன்னையவளை. ''ஆனந்தி அம்மையே'' என்கின்றார் பெருங்கவிக்கோ.

''அகமறையாம் பொருளே வருக வருகவே!''

அருள்மனித நேயம்வளர் ஆட்சிப் பெருந்தேவி அம்மாவே வருக வருகவே!

இப்பாடலின் மூலம் கூன், குருடு, செவிடு முதலானவற்றைப் போக்கி, உடற்பிணியையும் உள்ளப்பிணியையும், இறுதியில் பிறவிப் பிணியையும் போக்கியருளுவாள் அன்னையென்பதை உணரமுடிகிறது.

''அரிதரிது மானிடர் ஆதல் அரிது,மானிடர் ஆயினும் கூன் குருடு செவிடு குறைவு ஏதுமின்றிப் பிறத்தல் அரிது'' என்ற அமுதத்தமிழ் ஔவைப் பிராட்டியின் பாடல் இங்கு நினைவு கூர்வதற் குரியது. ''திமிர உததி அனைய நரக செனன மதனில்'' என்று தொடங்கும் அருணகிரிநாதரின் திருப்புகழ்ப்பாடலின் கருத்தும் இங்கு எண்ணிப்பார்க்கத்தக்கது.

(வேறு)

ஆய்வின் உச்சத்(து) உளநாடு
அடங்கார் அடக்கும் விதிநாடு!
அமெரிக் காவின் **'டெக்சாசில்'**
அமைந்த அன்னை ஆலயத்தில்

ஓய்வின் இல்லம் மேலமைய
ஓங்கும் தாயக அறங்காவல்
உயர்மீ **னாட்சி மைந்தர்**நல்
உரிமைத் தலைவர் **சிதம்பரம்**தாம்

தோய்தமிழ்க் கையால் திறந்தாரே!
தொடரும் பணிகள் தொடர்தொடராம்
சுற்றும் முற்றும் திருத்தலங்கள்
சுடரும் திருப்பணி காலமெல்லாம்

வாய்த்த தமிழ்த்தாய் உருவான
வடிவே வருக வருகவே
மணம்கமழ் குழல்கோ மதித்தேவி
வருக வருக வருகவே! 6



6. ஆய்வாளர்களும், அடக்கமுள்ளவர்களும், வாழ்வின் உயர்நதிருப்பவர்களும் உள்ள அமெரிக்க நாட்டில், ''டெக்காசு'' மாநிலத்தில் அன்னை ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தைச் சார்ந்து ஒய்வு இல்லம் மேலமைய தமிழக அன்னை மீனாட்சி கோயில் தலைமை அறங்காவலர் உயர்ந்தமீனாட்சிமைந்தர் நல்லுளம் படைத்த சிதம்பரம் தம் தமிழ்த் திருக்கரத்தால் திறந்தார்.

திருக்கோயிலை அழகுறச் செய்யப் பணிகள் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அன்னை மீனாட்சியின் அருட்பணிகளெல்லாம் காலமெல்லாம் இசை பாடிக் கொண்டிருக்கும். தமிழ்த் தாயின் வடிவான அங்கயல் விழி அம்மையே! ''வடிவே, வருக வருகவே! மணங்கமழும் கூந்தலுடைய கோமதித் தேவியே! வருக வருக வருகவே!

இப்பாடலில் அன்னை மீனாட்சியைக் கோமதித்தேவி என்று குறிப்பிட்டிருக்கிறார். அக்கோமதியான அழகுப் பெருமாட்டியானவள் தண்டமிழ்த் தென்னாட்டில் சங்கரன் கோவில் என்னும் ஊரில் திருக்கோயில் கொண்டுள்ளாள். ஆலயங்களில் உறையும் ஒரே அன்னை பற்பல அற்புதத் திரு நாமங்களுடன் திகழ்கிறாள் என்பது சிந்தையிற் கொள்ளத்தக்கது. சிதம்பரத்திருத்தலத்தில் சிவகாம சுந்தரி என்னும் திருநாமம் கொண்டும் திருக்காசித்தலத்தில் விசாலாட்சி என்ற திருநாமம் கொண்டும் திருச்சிராப் பள்ளியில் மட்டுவார் குழலி யென்ற திருநாமம் கொண்டும், சென்னைத் திருமயிலையில் கற்பகம் என்ற திருநாமம் கொண்டும் காஞ்சியில் காமாட்சி யென்ற திருநாமம் கொண்டும் அழகிய சிக்கற் சிங்காரவேலன் உறையும் சிக்கலில் சக்தியாயதாட்சியென்ற திருநாமம் கொண்டும் திருநெல்வேலியில் காந்திமதியென்ற திருநாமம் கொண்டும், மதுரையில் மீனாட்சி யென்ற திருநாமம் கொண்டும் விளங்குகிறாள் என்பது உள்ளத்தில் இருத்தத்தக்கது. திருநாமங்கள் பலவயினும் தேவியானவள் ஒனறேயாகும்.

தமிழ்தமிழ் தமிழென் றேதொடர்ந்து
தமிழாய்ச் சொல்லும் போதினிலே
தமிழே அமிழ்தாய் வாய்வந்து
தமிழ்விருந் தாகத் தமிழ்சுரக்கும்
தமிழே அமிழ்தே ஆம்தேவி
தவத்தின் கொழுந்தாம் பெருந்தேவி
தாயகம் காக்கும் அருட்தேவி
தகைஅமெ ரிக்கா அமர்தேவி
அமரர் வந்தே வழிபாடு
ஆக்கல் போன்றே அர்ச்சகர்கள்
அகம்பூ சிக்க அவர்க்கெல்லாம்
ஆழகார் இல்லம் அமைத்துதவித்
தமர்போல் அனைவரும் வாழச்செய்
தாயே வருக வருகவே!
தமிழ்மணம் கமழ்குழல்கோ மதித்தேவி
தாயே வருக வருகவே! 7

தமிழ்தமிழ் தமிழென்று வாய்குளிரச் சொல்லும்போது அமிழ்து அமிழ்து என்றாகி தமிழே இனிக்கும் தண்ணமுதாகவும் இன்ப விருந்தாகவும் அமைந்து அருள் சுரக்கத் தமிழாகவே அமைந்த பெருந்தேவியானவள் தவக்கொழுந்தாகவிளங்குகிறாள். தமிழ்வழி வழிபாடு விரும்பி அவள் அமெரிக்காவில் அமர்ந்து ஆட்சி செய்து தாயகம் காக்கிறாள்.

தேவர்கள் யாவரும் உவந்து வந்தே அன்னையைப் பூசித்து வழிபாடு செய்வது போன்றே அர்ச்சகர்கள் அமெரிக்காவின் தேவி மீனாட்சியை அகத்திலிருத்திப் பூசிப்பதற்காக அவர்களுக்கு அழகான இல்லங்கள் அமைத்து அன்னை உதவியுள்ளாள். அன்னையினிடத்துப் பேரன்பும் பெரும்பக்தியும் நிறைந்த அருட்பெருஞ்செல்வர்கள் அர்ச்சகர்களுக்குக் குடியிருக்க இல்லங்கள் அமைத்துதவி அவர்களை வாழச் செய்திருப்பது அன்னையே அவ்வாறு செய்திருப்பதாகும். அர்ச்சர்கள் அர்ச்சனை செய்வதால் அன்னை திருப்தியடைந்து அன்பர்களுக்கு அருள்புரிகிறாள். அதனால் அன்பர்களின் வாழ்வு வளமாகிறது என்பது உண்மை. ஒரு கோயிலுக்குத் தெய்வம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் அத்தெய்வத்திற்குப் பூசை செய்யும் பூசாரியும். இதனைத் தெளிவுபடுத்துகிறார் தமிழ் வாழ்க, தமிழ்வெல்க வென்று பாடித்தமிழ் தமிழ் தமிழ் என்று எப்போதும் முழங்கிக் கொண்டிருக்கும் கவிவள்ளல் பெருங்கவிக்கோ.



பழய கால முறைப்படியே
பணத்தைச் செலவு செய்கின்றீர்
பதித்தீர் கோபுர மாபுரங்கள்
பழமைக் குள்ளோர் புதுமையாய்
நிழல்போல் இளைஞர் தாம்கூடும்
நிலையாய் நிலையம் திருமணம்போல்
நேர்ந்த பலவகை நிகழ்ச்சிகளும்
நிலைக்க நிலையம் காண்கவென்றார்!
சுழலும் எண்ணம் தோன்றுவகை
சுந்தரத் திருமண மண்டபமும்
தொகுபல நிகழ்வும் அமையும்வகை
தூய பணிநிறை செய்தேவி
மழலை அருள்வளர் மனத்தேவி
மாமணி வருக வருகவே!
மணங்கமழ் குழல்கோ மதித்தேவி
வருக வருக வருகவே! 8

8. பழைய கால முறைப்படி வழுவின்றி மரபு விளங்கக் கோபுரங்களும் பல மாபுரங்களும் அமைத்துப் பணத்தைப் பணமென்று பாராது செலவிடுகின்றார் பதமுடையவர்கள். பண்டைய நெறி தவறாது வாழ்வோரும் புதுமை விழையும் இளையோரும் கூடும் நிலையம் நிறுவப்படுகிறது. அந்நிலையந் தன்னில் பலவகை நன்னிகழ்ச்சிகளும் நடைபெற்ற வண்ணம் இருக்கும்.

சுந்தரத் திருமணமண்டபமும் அமைத்து அத்திருமணமண்டபத்தில் திருமணங்கள் நிகழ்ந்திடும் வண்ணமிருக்க அன்னை அருள்புரிகின்றாள். இவ்வாறு தூய திருப்பணிகளை இனிது நிறைவாகச் செய்கின்றாள் தேவிமீனாட்சி!

இன்ப மழலை அன்புடன் உதிர்க்கும் அருள்மனங்கொண்ட "மாமணி வருக வருகவே! மணங்கமழ் குழல்கோ மதித்தேவி வருக வருக வருகவே!

பழைமைக்கும் பழைமையாக மரபு வழாது, புதுமைக்கும் புதுமையாக எல்லாப் பணிகளும் துலங்க அருள் பாலிக்கிறாள் அமெரிக்க நாட்டின் அன்னை என்று கூறாமற் கூறுகிறார் பெருங்கவிக்கோ

முதியோரும் இளையோரும் மற்றோரும் கூடும் அருள் நிலையமும் திருமண மண்டபமும் நல்ல வருவாய் தரும். அதனால் அன்னை ஆலயத்தில் வளர்ச்சிக்காண அரிய மேலான பணிகளை மேற்கொள்ளமுடியும். அனைத்தும் அன்னையின் திருவருட் செயலால் நிகழ்வதை அகத்தில் வைப்போம்.

சிற்பிக் கெல்லாம் சிற்பியெனத்
திகழும் சிற்பி **முத்தையா**
செவ்விய தேவி மீனாட்சி
சேவைத் திலகம் **கண்ணப்பர்!**

அற்புத அருளின் செகத்குருவாம்
ஆன்றோர் **காஞ்சிப் பெரியவரின்**
அடிகள் போற்றிப் பணிபோதில்
அன்னை மீனாள் தமக்கங்கே

பொற்புடை இராச கோபுரத்தைப்
புதுக்கிக் காண்பீர் எனப்பணித்தார்!
புண்ணியப் பெரியவர் சொற்படியே
புனிதக் கோபுரம் நிறைவேற்றும்

மற்றோர் தெய்வம் ஈடாகா
மாமணி வருக வருகவே
மணங்கழ் குழல்கோ மதித்தேவி
வருக வருக வருகவே! 9

சிற்பிகளுக்கெல்லாம் தலைமைச் சிற்பி முத்தையா, தேவி மீனாட்சி, திருக்கோயில் செம்மையாக அமைய ஆர்வமுடன் பணிகள் மேற்கொண்ட "திருப்பணிச்செம்மல்", "சேவைக் கொரு திலகம்" ஆன கண்ணப்பர் ஆகியோர் திருகாஞ்சிப் பெரியவர் ஆன செகத் குருவின் திருவடிகள் பனிந்து அன்னை மீனாட்சி ஆலயத்தின் பணி செவ்விதின் நிறைவுற அருளாசி வேண்டினர்.

காஞ்சிப் பெரியவர் தவ அருள்வடிவினர் அப்புண்ணிய குருபெருமானின் சொற்படியே ஆலயத்தின் இராச கோபுரத்தைப் புதுக்கினர்; பொலிவுறச் செய்தனர். இராச கோபுரப் பணியும் இனிது நிறைவேறச் செய்யும் தெய்வமான அன்னை தேவி மீனாட்சிக்கு மற்றோர் எந்தத் தெய்வமும் ஈடாகாது என்று சொல்லும் வண்ணம் ஏற்றம் கொண்டு இலங்குகிறாள் அன்னை!

"மற்றோர் தெய்வம் ஈடாகா மாமணி வருக வருகவே! மணங்கமழ் கோ மதித்தேவி வருக வருகவே!"

அமெரிக்காவில் தேவி மீனாட்சியின் ஆலயம் காண அல்லும் பகலும் முயன்றோர் அகில குருவான காஞ்சிப் பெரியவரின் அருளாசி பெற்றதனால், ஆலயம் பல்வகையிலும் சிறப்புற்று, உலகினரை ஈர்த்து அருள் வழங்கும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார். பெருங்கவிக்கோ. ஆக, எப்பணிக்கும் குருவருளும் திருவருளும் அவசியம் வேண்டும் என்பது அறிதற்குரியது.



இயற்கை வளங்கள் மிகுநாட்டில்
இயல்பாய் வாழ்செவ் விந்தியர்கள்
இற்றைந் நூறின் ஆண்டின்முன்
இருந்த நாடோடி கள்மண்ணை

முயற்சிக் கொருபேர் **'கொலம்பசு'** தான்
முன்னே கண்ட அமெரிக்கா!
முனைந்து முனைந்து பலநாட்டார்
முற்றுகை யிட்டே வளர்த்தின்றே

அயர்ச்சி இன்றி உழைத்துபெரும்
அயராப் பணிசெய் செயற்கைகளும்
அன்றன். றேசூழ் புதுமைகளும்
அடரும் தொடரும் வியன்நாட்டில்

மயலே இன்றி உழைஎம்மோர்
மாண்பே வருக வருகவே!
மணங்கமழ் குழல்கோ மதித்தேவி
வருக வருக வருகவே! 10

10. இயற்கை எழில்வளங்கள் மிகுந்த அமெரிக்கத் திருநாட்டில் இந்தியப் பெருமக்கள் எல்லாரும் தங்கட்குரிய இயல்புடன் வாழ்ந்து வருகின்றனர். இற்றைக்கு ஐந்நூறு ஆண்டு கட்குமுன் நாடோடிகளே பெருகியிருந்த செவ்விந்தியர் நாட்டை முயற்சி மிகுந்த ''கொலம்பசு'' தளரா முயற்சிகளால் புதிய கண்டமான அமெரிக்காவைக் கண்டு பிடித்த வரலாற்றை உலக சரித்திரம் விரிவாக உரைக்கக் காணலாம்.

இன்று அவ்வாறு பெருமுயற்சியுடன் ''கொலம்பசு'' என்பவரால் கண்டு பிடிக்கப் பெற்ற அமெரிக்கா உலகிலேயே தலைமை நாடாகப் பொலிவோங்கித் திகழ்கிறது. பல நாட்டவரும் அமெரிக்காவிற்கு வந்து குடியேறி அயர்வின்றி உழைத்துப் பெரும் பயன் அடைகின்றனர். புதுமைகளும் விஞ்ஞானச் செயல்களும் நிறைந்துள்ள அமெரிக்காவில் மயக்கமுல் தயக்கமும் இன்றி உழைத்து உயர்வெய்தி வருகின்றனர் நம்மவர்கள்.

ஆக்கமும் ஊக்கமும் அருளுகின்ற அன்னை மீனாட்சியை நோக்கித் தமிழ்க் கவித்தென்றல் பெருங்கவிக்கோ ''மயலே இன்றி உழைஎம்மோர் மாண்பே!'' என்று பாடுகின்றார். ''மாண்பே வருக வருகவே!'', ''மணங்கமழ் குழல்கோமதித்தேவி வருக வருகவே!'' அன்னை மீனாட்சியை மையல்போக்கும் தையல்நாயகி என்று கூறுவதும் பொருத்தமாக அமையும்.

# 7. அம்புலிப் பருவம்

இது பதினைந்தாம் திங்களில் நிகழ்வது. அது பிள்ளையைப் பெண்கள் ஒக்கலையில் வைத்துக் கொண்டு வானத்தம்புலியை அப்பிள்ளையுடன் விளையாட வரும்படி இன்சொற்சொல்லல் - வேறுபடுத்தல் - கொடுத்தல் ஒறுத்தல் என்னும் நால்வகையான சூழ்ச்சிகளால் அழைப்பதாகும்.

வராய்நீ வெண்ணிலா! வடிவழகொளி உனைப்போல
வளரொளிக் கலைசிந்தும் வடிவினாள்
வையகமெலாம் திரிந்தொளி வழங்குமா போலிவளும்
வழங்குமொளி சிந்துநகை மாதரசி

நீராரும் கடலுடுத்த புவனத்தைக் கண்டுதெளி
நின்கருத்துக்(கு) ஒப்பதெளி கருத்தினள்
நேருக்கு நேருவமை நேர்ந்திட ஒப்புவமை
நிலைத்திடச் சீரருளும் தேவியள்!

காரோடும் பனிக்கிரணன் இவளுமாக ஒப்பாவாள்
கடிபனிக் கதிர்மகள் ஆவாளே
கருதிடினோ இவள்நீயும் ஒத்ததன்மை புலனாகும்
கண்டுதெளிந் தோடிவந் திங்குள

ஆராஅமுதத் துளிசிந்து மொழிஅன்னை யோடுநீ
அம்புலி ஆட வாவே!
அரியபல நிறைகளொடு அறங்காக்கும் அன்னையொடு
அம்புலி ஆட வாவே! 1



1. அம்புலிப் பருவம் அழகியது. இப்பொழுது இப்பருவத்தை இன்னொளி சிந்தும் தம் அருங்கவிதையால் மிக அருமையாக அம்புலியான சந்திரனுக்கும் அருளொளி வீசும் அங்கயற்கண் அம்மைக்கும் ஒப்புமை காட்டிப் பாடியுள்ளார்.

முதலில் ''வாராய்நீ வெண்ணிலா'' என்று வாய்குளிர அழைக்கிறார் பெருங்கவிக்கோ. ''வாராயோ வெண்ணிலாவே '' என்ற திரைப்படப்பாடல் இங்கு நினைவிற்கு வருகிறது. வெண்மை நிற ஒளிமேவும் தண்ணிலாவைப் போன்று அம்மையும் கலை சிந்தும் வடிவுடன் விளங்குகிறாள் வளரொளி வீசி. அவள் உலகமெலாம் திரிந்து வலம் வரும் மாமதி ஒளியுடன் திகழ்கிறாள். அவள் வெண் முத்தச் சிரிப்புதிர்க்கும் மாதரசி.

நீர்நிறைந்த நீலவண்ணக் கடலை உடுத்தியிருக்கும் நிலத்தைக் கண்டு தெளிகின்ற கருத்திற்கு ஒப்ப தெளிந்த கருத்துடையவள் தேவி மீனாட்சி. ''நீராரும் கடலுடுத்த''என்று தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்து இங்கு நினைவிற்கு வருகிறது.

குளிர்ந்த தண்ணமுதக் கதிர்வீசும் சந்திரனும் பனி இமயத்தை உறை விடமாய்க் கொண்ட அம்மையும் குளிர்நத தன்மைக்கு ஒப்புமை காட்டப் பெறுகிறார்கள்.

எவ்வகையிலும் எண்ணிப்பார்க்கும் போது அம்புலியும் அம்மையும் தண்ணொளி வீசும் அருள் மேன்மையினால் ஒத்திருப்பது இனிது புலனாகிறது.

அமுத ஒளித்துளி சிந்துகிற மொழி வாய்ந்த அன்னையுடன் ''அம்புலி ஆடவாவே'' அறங்காக்கும் நிறைவான அன்னையுடன் நீ ''அம்புலி ஆடவாவா''!

அழுகின்ற குழந்தைக்கு வான் வெளியில் தோன்றுகின்ற அழகிய சந்திரனைக் காட்டி அன்னம் ஊட்டுவது அன்னைமார்களின் இயல்பு. ''அன்னையை மறவாதே! உனை அருமையுடன் ஈன்ற தமிழ் அன்னையை மறவாதே! அம்புலியைக் காட்டியுன்றன் அழுகைதனை நிறுத்தியவள்! அம்மாஎன இன்தமிழால் அழைக்கவும் நீ எடுத்தணைத்தவள்'' என்ற பாடல் இங்கு நினைவு கூர்தற்குரியது.

முன்னமொரு கால்நீயும் முண்டெழு கதிர்நெருப்பில்
முதிர்ந்து புண்டு விழுந்ததைப் போலிவளும்
மூண்டெழு தீயினிடைத் தோன்றியதோர் குறிப்புண்டே
முறைஇதனால் ஒப்புஇவட் காவாயே
பின்னும்பல வழிமுறைகள் பேதுற்றுக் கார்மறைவாய்
பீடுதரும் தேவிஇவ ளும்தனின்
பேறுபெறச் சிவம்பாதி உடல்மறைத்தே அருள்பொதிந்து
பெற்றிதரு கற்றதவக் கொழுந்தொப்பே

உன்னையொரு துணையாக அழைப்பதுவும் உன்தவமே
உடன்நீயும் உன்வருகைக்கு வழியாயுள்
ஒப்பிலாக் கோபுரமாம் ஏணிப்படி வழியாகவே
ஓடிவருக இவளோடு விளையாடவே

அன்பறிவு ஆற்றல்குவி மும்முலைகாண் அன்னையொடு
அம்புலி ஆட வாவே!
அரியபல நிறைகளோடு அறம்காக்கும் அன்னையொடு
அம்புலி ஆட வாவே! 2

''கதிராகிய கனலிருந்து நீ புண்டு விழுந்தது போல், அன்னை மீனாட்சியும் வேள்வித்தீக் குண்டத்தினின்றும் எழுந்தவள்தான். ஆக, நீங்கள் இருவரும் ஒத்தவர்களே!'' என்று பாடுகிறார் பெருங்கவிக்கோ அம்புலியை நோக்கி.

கருமேக வானத்திடை மதி மறைந்தாற் போன்று காட்சி தருவதைப் போல் அன்னையும் தன்னொரு பாதி மறைய அருளுடன் காட்சி தருகிறாள். அவ்வகையில் நீங்கள் ஒத்தவர்கள் ஆவீர்கள்.

''உன்னையொரு துணையாகக் கொண்டுள்ளான் அன்னை. அதனால் நீ உவகையுடன் ஆலயக் கோபுரமாம் ஏணிப்படிவழியாக விரைந்து வந்து அன்னையுடன் விளையாடுக.

அன்பும் ஆழ்ந்த அறிவும் நிறைந்த, முலை மூன்றுடைய அன்னையொடு ''அம்புலி ஆடவாவே!'' தருமம்பேணும் ''அம்புலிஆடவாவே!''

அன்னை அம்புலியை ஒருதுணையாக அழைப்பது அம்புலியின் தவமாகும், தவத்தில் தாயும் தண்மதியும் ஒத்திருப்பதைக் கணிவான தமிழில் இனிது நம் சிந்தையேற்கும் வண்ணம் பாடியிருக்கும் பெருங்கவிக்கோவின் கவித்திறம் போற்றுதற்குரியது.



எல்லாக்க லைகளுக்குமிவளே கொள்கலம்நீ
எண்ணிரண்டு கலைஉடையா யன்றோ?
இருந்துமென்? ஒவ்வோர் கலையாய்க் குறைந்து குறைந்து நீ
இரவியோ டிணைந்துரு நீப்பாயே!

நல்லார்க ளான அடியார்க ளேஇவள் பணிந்தேந்திட
நாளும்நாளும் சந்நிதி வருகுவரே!
நாடுநீ உன்னோடு முயல்மான் வடிவினையே சேர்ப்பாய்
நன்றிதா? ஒப்புஇவளுக்குநீஈடோ?

பொல்லாநி லைஇருள் மேவுவாய் கூடிக்குறைந் தாகுவாயொரு
பொருட்டாக உனையும் தானெண்ணி
பொய்தவிர்த் திடுமெய் யுருவாகி விளையாடுபேதையாள்
புகழ்விளையாடிடவே அழைத்தாள்!

அல்லாதுநீ அவட்கே ஒப்பில்லைகாண் அன்னையொடு
அம்புலி ஆடவாவே!
அரியபல நிறைகளொடு அறம்காக்கும் அன்னையொடு
அம்புலி ஆட வாவே! 3

3. ஆயகலைகள் அறுபத்து நான்கும் தேர்ந்தவள் அன்னை. அக்கலைகள் அனைத்திற்கும் இருப்பிடம் ஆனவள் அவள். ஆனால் அம்புலியாகிய சந்திரனோ வளர்வான்; தேய்வான்; இறுதியில் உருவே தெரியாமற்போய் விடுவான். கதிரவனுக்குள் ஐக்கியமாகி எங்கும் காரிருளை உண்டாக்கி, அமாவாசை என்று உலகத்தோர் உரைக்கும் வண்ணம் அமைந்திடுவான். பிறை வளர்ந்து வருவதைச் சுக்கில பட்சம் என்றும் தேய்த்து குறைந்து வருவதை அமர பட்சம் என்றும் சோதிடக்கலை சொல்லும். குறைமதியாகும்போது குணமிழப்பான் சந்திரன். நிறைமதியாகும் போது புகழ் நிறைவான். எனவே, குறையும் நிறையும் உடைய மதியானவன் நிறைவே உடைய முழுப் பிரகாசம் நிறைந்த அன்னைக்கு ஈடாகான்.

நல்லடியார்கள் நாளும் அன்னையைப் பணிந்திட அவள் திருச்சந்நிதி வருவார்கள். ஆனால், மதியானது முயல் மான் வடிவுகளையே ஈர்க்கும். இவ்வகையில் சந்திரன் இன்ப அன்னைக்கு ஈடே ஆகான். இவ்வாறு வளர்புகழ்கொண்ட பெருங்கவிக்கோ பாடுகிறார்.

குறைந்து குறைந்து தேய்ந்து வடிவு தெரியாவண்ணப் ஆகிவிடும் அம்புலியை ஒரு பொருட்டாக வெண்ணிப்பொய் நீக்கி மெய்தரும் அன்னை மதித்து அழைக்கிறாள். பேதை அவளோ? விளையாட அழைக்கும் விரிபுகழ் மேவிய அன்னையொடு, ஒப்பில்லாத நீ "அம்புலி ஆட வாவே! அறங்காக்கும் அருள் நிறைவான அன்னையொடு, "அம்புலி ஆட வாவே!"

வளர்ந்தும் தேய்ந்தும்வரும் மதி வாழ்வியிலில் முக்கியத்துவம் பெறுகிறது. அமாவாசையை அடுத்துவரும் மூன்றாம் பிறை காண வேண்டு மென்று மக்கள் முனைவர். அவ்வாறு காண்பதால் வாழ்வில் உயர்வும் பிறையைப் போல் வளர்ந்து வரும் என்பது அவர்களின் திடமான நம்பிக்கை. அது தவிர, வளர்பிறையான சுக்கில பட்சத்தில் பிறந்தவர்கள் அவ்வளவு மேன்மை யடைவார்கள் என்றும் சோதிட நூல் கூறுவது அனுபவத்தில் காணலாம். சந்திரன் நின்ற இராசிக்கு 6,8,12 ஆம் இடங்களில் குருவெனும் கிரகம் இருந்தால் அதைச் சகடயோகம் என்பர். வாழ்வில் ஏற்றமும் தாழ்வும் ஏற்படுத்தும் இந்தச் சகடயோகம். சகடம் என்பது சக்கரம் கொண்ட வண்டியாகும். மேலும் கீழும் சுழன்று வரும் வண்டியின் சக்கரம். இதைப் போன்று யோகம் வாய்ந்தோர் வாழ்ந்தோர் ஒரு காலத்தில் உயர்ந்திருந்து, மற்றொரு காலத்தில் தாழ்ந்திருப்பர். இச்சகடயோகம் சிறந்தயோகம் அன்று. பெருங்கவிக்கோவின் தவமிகுந்த சாதகத்தில் சந்திரன் நின்ற மேட இராசிக்கு 7 ஆம் இடத்தில் குருவும், குருநின்ற துலாம் இராசிக்கு 7ஆம் இடத்தில் சந்திரனும் இருப்பதாலும், இரண்டும் சரஇராசிகளாக இருப்பதாலும் ஒய்வு ஒழிவின்றிப் பெருங்கவிக்கோ உலகம் முற்றும் சுற்றிய வண்ணமிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



**கணிதத்தின் கணக்கினைக் கடந்தவெகு தூரத்தில்**
**கவின்வடி வாகியே திரிவாய்**
**காலாதி காலங்கள் ஞாலங்கொள் ஒளியினைக்**
**கனிவுற வழங்கியே வருவாய்!**

**மணியொளிர் மாணிக்கக் குன்றம்போல் வானிடை**
**வந்துபுகழத் தங்கியே தொங்குவாய்**
**மதியாதார் தமையுமே மதித்துநீ சமங்காண்பாய்**
**மதியிலி எனஉனைக் கூறாதே**

**பணிந்திந்த உலகெலாம் பராவிடும் பராசக்தி**
**பாருக்கோர் திலகமாம் ஈசுவரி**
**பழகுதமிழ் அருளுவள் மழலையாய் உலகுகாண்**
**பழுத்ததோர் வடிவினா ளோடுநீ**

**அணிக்கெலாம் அணிதரும் அம்பிகை மதலையொடு**
**அம்புலி ஆட வாவே!**
**அரியபல நிறைகளொடு அறம்காக்கும் அன்னையொடு**
**அம்புலி ஆட வாவே!** 4

கணக்கிட இயலாதவாறு கணக்கெலாம் கடந்து வெகுதூரத்தில் காணும் மதி அழகு வடிவாகி, ஆதி காலத்திலிருந்து அகிலத்திற்குத் தண்ணருள் ஒளி வழங்கி வருகிறது.

மாணிக்க மணிக்குன்றைப் போன்று, பேரொளி வீசி, வானில் புகழொடு வந்து தங்கித் தொங்குகிறது. இவ்வாறு வருணிக்கிறார் கற்பனைக் கொரு பெருங்கவிக்கோ

மதியாதவர்களையும் மதிப்பவர்களையும் சமமாக மதிக்கும் மாண்புள்ள மதியை மதியற்றதென்று யாராலும் கூற இயலாது.

பரந்திருக்கும் இந்தப்பாரெலாம் பணிந்து பரவிடும் படியான பராசக்தி, திலகமாகத் திகழும் ஈசுவரியான தேவி மீனாட்சி அன்னை மழலையின்பம் தந்து கனிந்த வடிவுடன் காட்சி தருகிறாள்; திருவருள் புரிகிறாள். அணிக்கெலாம் அணியான மணிக்கெலாம் மணியான மதலை மொழி பொழி அம்பிகையுடன் "அம்புலி ஆடவாவே"! தருமத்தைக் காக்கும் தலைவியான தாயுடன்" அம்புலி ஆடவாவே!"

ஆதிபராசக்தி அன்னை ஆட்சி செய்யும் காலத்திலிருந்து அருள் அழகு மதியும் வான் மண்டலத்தை ஆட்சி செய்து வருகிறது. தன்னை மதிப்பவர் களையும் மதியாதவர்களையும் சமமாகப் பாவித்து ஒளிவழங்கிற மதியின் தன்மை மனத்திற் கொள்ளத்தக்கது "மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!" என்ற வள்ளலாரின் வாக்கு இங்கு நினைவு கூர்தற்குரியது.

வெம்பாம்பு பற்றுமாபோல் அஞ்சிமறை குவாய்நீ
வெற்றிதரு அருமகள் இவட்கோதான்
விரைமலர்கொண் டந்தணர் விரும்பிஅர்ச் சனைபுரிந்தே
வேண்டிடில் உன்குறையும் தீர்நன்மையே!

தெம்புதரு முயற்சியெழு திறத்தினளை வரத்தினளை
திசையெலாம் வணங்கிடும் தலமுறைத்
திருவாட்டி யிங்குன்னைத் தேர்ந்துவிளையாடிடவே
தீராத பேராசை கொண்டனளே!

வம்புசெய்து நீயுமே வாராவிடில் இவளுக்கோர்
மாறுபாடும் வாராதே காண்கநீ!
வாகைதரு பேறுபல வந்துனையே தேடியும்நீ
வாராதி ருக்கவே நியாயமுண்டோ?

அம்புவி யெலாம் புரக்கும் ஆத்தாளோடு கூடியே
அம்புலி ஆடவாவே!
அரியபல நிறைகளொடே அறங்காக்கும் அன்னையொடே
அம்புலி ஆடவாவே! 5



5. விடங்கொண்ட கொடிய அரவுபற்றியதைப் போன்று அஞ்சி மறைகிறது மதி அருள் மாமகளான அன்னைக்கு அந்தணர் பக்தியுடன் அருச்சனை புரிந்து வேண்டினால் மறையும் மதியின் குறையும் தீர்ந்து நன்மையே விளையும் என்கிறார் பெருங்கவிக்கோ.

ஊக்குவிக்கும் திறமும் வரமும் கொண்டு திசையெல்லாம் அருள் வழங்கிடும் திருவாட்டியான அங்கயற்கண் அம்மையானவள் மதியைத் தேர்ந்து விளையாடிடவே தீராத பேராசை கொண்டாள்.

வம்பு பண்ணி வராமல் மதியிருக்கும் பட்சத்தில், அன்னைக்கு எவ் விதமாறுபாடும் அதனால் வராது. வலிந்து விரும்பி நாடித்தேடியும் வாராதிருக்கு மதிக்கு நியாயம்ஏதும் இருக்கமுடியாது.

அழகு பொலியும் புவனமெலாம் காக்கும் அருளன்னையுடன் கூடியே ''அம்புலி ஆடவாவே!''

அறம்காக்கும் அன்னையே! ''அம்புலி ஆட வாவே!''

சந்திர கிரகணம் உண்டாகும் போது அச்சந்திரனை விடங்கொண்ட இராகுவெனும் கருநாகம் பிடிப்பதாகப் பஞ்சாங்கம் பகரும். விஞ்ஞானம் வேறுவிதமாக விளம்பும்.

அன்னை மீனாட்சியை அந்தணர்கள் அருச்சிப்பதால் குறையகன்று மதிக்கு நன்மையே நிறையும் என்பது அகத்திற் கொள்ளத் தக்கது. வேதநாயகியான அங்கயற்கண் நாயகியை வேண்டிமலர் தூவி அருச்சித்துப் பூசனை புரிந்தால் எவருக்கும் நலமே அவளருளால் உண்டாகும் என்பது குறிப்பாகும். இதுவே பெருங்கவிக்கோவின் உறுதியான நம்பிக்கையாகும்.

காடுசெறி மான்வடிவு கானமுயல் போலுமுன்
களங்கத்தைக் காலத்தால் தேய்வதைக்
கதிரொளி மேவிவரு காலையிலே இலாததை
காண்வையம் நன்றாக அறியுமே!

கோடுபல வெலாம்சுற்றிக் குவலயமெ லாம்கண்டும்
குறையிதனைத் தீர்த்திட வல்லையோ?
குற்றமுடையாய் நீயே கூறுகுறை விஞ்சுமே
கொஞ்சிவிளை யாடிடவே ஓடிவா!வா!

வாடுபவர் தம்வாட்டம் வாஞ்சையொடு தீர்ப்பவள்
வையத்தின் நிழலாக இருப்பவள்!
வழிபடவே வந்துநீ விழிகருணை ஏற்றிடாதே
வாளாநீ சுற்றிடின் பயனென்?

ஆடுமகள் கூடிவிளை யாடிடவே தேவியொடு
அம்புலி ஆடவாவே!
அரியபல நிறைகளொடே அறங்காக்கும் அன்னையொடு
அம்புலி ஆடவாவே! 6

6. காட்டு மானைப்போல் கலைமதியிடம் களங்கம் காணப் பெறுகிறது. இரவின்போது தேயும் மதியானது தெரிகிறது. காலைப்போதில் கதிரொளி பரவும் போது மதியிருந்த இடம் தெரியாமற் போய்விடுகிறது.

குன்றுகள் மேவும் குவலயமெலாம் கண்டும் குறைமிகும் தன் களங்கத்தைப் போக்கிக் கொள்ளும் வல்லமை மதிக்கு இல்லை. அதனால் குற்றமுடைய மதி குறையதிகமாகக் கூறும் அளவிலேயே திகழ்கிறது. அவ்வாறு மதியின் நிலை அமைந்திருந்தும் அதனைப் பெரும் பொருட் டாகக் கருதாள் அன்னை. எனவே, மதியைக் "கொஞ்சி விளையாடிடவே ஓடிவா! வா!" என்று கனிவுடன் மதியை அழைக்கிறார் பெருங்கவிக்கோ.

வாழ்வோர் வாட்டம் போக்கி, வையகத்திற்குத் தண்ணிழலாக விளங்கும் மாதாவை வழிபட்டுப் பயன்பெறாது, எத்தகைய பயனுமின்றிச் சுற்றிவரும் மதிக்கு என்ன மதிப்புண்டாகும்? ஒரு மதிப்பும் உண்டாகா தென்று திண்ணமாக உரைக்கலாம்.

சிவனுடன் ஆடும் சிவகாம சுந்தரியான தேவி சிவசக்தியொடு விளையாடிடவே "அம்புலி ஆடவாவே!" நிறைபலகாணும் நெறியோடு அறம்பேணும் அன்னையே! "அம்புலி ஆடவாவே!"

இப்பாடலிலும் இறைவியை வழிபடுவதன் வாயிலாகவே குறையும், குற்றமும் நீங்கி மதிதிகழும் என்பதை அறியமுடிகிறது.



சுழற்காற்றின் சருகெனச் சுற்றிஏன் அலைகுவாய்
தொடர்ந்துபல் இன்னலைப் பெருகுவாய்
தூயஉன் எண்ணத்தின் ஆயநல் ஆசையைச்
சொல்லிடில் அனைத்துமே பெறுகுவாய்

பழம்பெரும் பண்பாட்டுப் பதிப்பினில் வளர்ந்தவள்
படைப்பிலக் கியத்தினில் மூலமாம்
பதிமேவும் நோற்பவர்க்கோ பதம்தரும் மருந்தினள்
பணிந்தெழு வார்தமின் நிறைவினள்

வழக்குகள் செய்துநீ மாறுபா டடைவதேன்?
வானுலக அமரர்க்கும் கற்பக
வளர்தரு வானவள் வையக விழிக்கெலாம்
வனப்புஇமை ஆனதோர் மாதவள்

அழல்கரம் கொள்சிவன் அதிபதி யாளொடே
அம்புலி யாட வாவே
அரியபல நிறைகளொடே அறக்காக்கும் அன்னையொடே
அம்புலி ஆடவாவே! 7

7. சுழன்றடிக்கும் பலமான காற்றில் சருகு உதிர்ந்து என்ன பாடுபடுகிறது? அதைப்போன்று அல்லலுக்கு ஆளாகிறது மதி. அம்மாமதி தன் தூய எண்ணத்தையும் ஆசையையும் அன்னையிடம் சொல்லிடில் நலங்கள் அனைத்துமே பெறும்.

அருளன்னை எப்படிப்பட்டவள்? பழைமையள், பண்பாடுடையவள், தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் மூலக்கருவினள், அப்படிப்பட்டவள் விரதம் இருப்பார்க்குப் பதந்தருவாள்! இதந்தருவாள்! பிணிக்குப் பெருமருந்தாகிக் குணந்தருவாள். தம்மைப் பணிவார்களின் குறைகளைப் பாராது அருள் புரிவாள். நிறைவான அவளொடு வழக்கொடுமாறுபாடு அமையக் கூடாதென்று மதிக்குப் புத்திமதி புகலுகிறார் பெருங்கவிக்கோ.

வானுலகத்தில் வாழ்கின்ற கண்ணிமைக்காத அமரர்களுக்குக் கருதிய தெல்லாம் கற்பகமாக, வனப்பிற்கெல்லாம் வனப்பான மாதவளமாக விளங்குகின்றாள் அருட்பேரொளி அன்னை.

கெங்கரத்தில் அழலேந்தியுள்ள சிவபெருமானின் தேவியான சுந்தர மீனாட்சி அன்னையொடு ''அம்புலியாட வாவே!''

அறம் வளர்க்கும் அகிலாண்ட நாயகி அன்னையொடு ''அம்புலி ஆட வாவே!'' மதிக்கு உரைப்பதுபோல் உலகமாந்தர்களுக்குச் சுழற்காற்றின் சருகெனச் சுற்றி அல்லற்பட்டு அலையவேண்டாம்; அதனால் ஆகும் நற் பயன் ஏதுமில்லை. மாதாவின் மலர்ப்பதம் துணையெனப் புனையெனப் பற்றி மாதாவின் பேரருளுக்குப் பாத்திரமாகி மானிடப்பிறவியின் பயனைப் பெறுகவெனத்தம் கருத்தைத் திடமாகத் தெரிவிக்கும் பெருங்கவிக் கோவின் உரையேற்று நடந்திடில் உயர்வே உண்டாகும் என்பது உறுதி.



வரம்தரும் பெருந்தேவி பரம்பொருள் பங்கினள்
வண்டமிழ் வேந்தர்க்கும் வேந்தனாம்
வாகைசூடு உக்கிர குமாரராசப் பாண்டியன்
வளமிகு சென்னியாகிய சோழன்
கரம்குவி மாடனும் வேடனும் ஆதிசேடனும்
கைதொழுது செயற்கரிய தவசினால்
கருதியதை அடைந்தனர் அறிவுடைய சங்கபத்மர்
காண்பேறு பற்பல கண்டனர்!
பரமான சக்திதரு முக்திதரு பரமேசுவரி
பரிந்துணை வாவென்றே அழைக்கிறாள்
பாலினில் பழம்நழுவி வீழ்தல்போ லாகும்நின்
பணிக்கிதோ பெரும்பேறுப் பரிசிலாகுமே!
அரன்அரி ஒன்றாக அருந்தவம் கண்டவளோடே
அம்புலி ஆடவாவே!
அரியபல நிலைகளொடே அறங்காக்கும் அன்னையொடே
அம்புலி ஆடவாவே! 8

மாதொரு பாகனாக விளங்கும் சிவபெருமானின் தேவியான மீனாட்சி அன்பர்கேட்ட வரம் தருபவள் மன்னர்க்கெல்லாம் மன்னனான பாண்டியன் உக்கிரராசன், சிரங்குவித்துச் சேவிக்கும் சோழன், கரங்குவித்துத் தொழும் மாடன், வேடன், ஊர்ந்து வணங்கும் ஆதிசேடன் ஆகியோர் அருந்தவத்தால் எண்ணிய நலன்கள் எய்தினர். அறிவுடைய சங்கபத்மனார் ஆதிபராசக்தி அன்னையை வழுத்திப்பற்பல நற்பேறுகள் பெற்றனர்.

சக்தியும் முக்தியும் தருகின்ற சராசரமெல்லாம் போற்றும் அன்னை பரமேசுவரியாள் மதியை மிகப்பரிவுடன் அழைக்கிறாள். அது பாலில் பழம் நழுவி வீழ்தல்போல் ஆகும்; மதியின் அரும்பணிக்கொருபரிசிலும் ஆகும்.

சங்கரனும் சங்கரியும் சேர்ந்த சங்கர நாராயணன் என்ற திருப்பெயரோடு திகழும் பெருமானின் தேவியான மீனாட்சி அன்னையொடு ''அம்புலி ஆடவாவே!'' பல சீரிய நிலைகளொடு பாரெல்லாம் பத்தியுடன் வணங்க அறங்காக்கும் நாயகியோடு ''அம்புலி ஆடவாவே!''

இப்பாடலில் யார் யார் இவ்வுலகெலாம் ஈன்ற அன்னையைப்பணிந்து பேறுகள் எய்தினர் என்பதை வெகு தெளிவாக விளக்கியிருக்கிறார் பெருங்கவிக்கோ. அன்னையின் திருவடிக்கமலங்களை அகமுருகிப்பற்றிப் பத்தி செய்தால், சக்தி, சர்வகாரிய சித்தி, முக்தி முதலிய பேறுகள் பெறலாம் என்பது அறியத்தக்கதாகும்.

கங்கை அணி கடவுட்கும் கைமாறு கருதாமல்
 கனிவுடைய காதற்கொடை நல்குவாள்!
காலங்கள் வென்றொளிரும் தண்ணருள் முகத்தொளி
 கரைகாணாக் கொடைக்கருணை வழங்குவாள்!

வெங்கொடிய தீவினைகள் மேவவரும் பக்தர்களும்
 வெற்றிபெற நல்வினையால் பேணுவாள்
வீராதி வீரர்களும் சூராதி சூரர்களும்
 மேவித்தான் பணிந்துநன்று தேடுவார்!

சங்கொலிக்கும் சலஞ்சலம் தானொலிக்கும் குரலினள்
 தடைகடந்து கொடைதரும் அமுதினள்
சங்கரி சுந்தரி சன்மார்க்க நாயகி
 தயை உனக்குத் தானேயே வருதல்காண்!

அங்கைசெவ் வேளுடையன் அம்மாவோடே கூடிநீ
 அம்புலி ஆடவாவே!
அரியபல நிறைகளொடே அறங்காக்கும் அம்மையொடே
 அம்புலி ஆடவாவே! 9

கங்கையை முடியில் அணிந்த கடவுளான சிவபெருமானுக்குப் பிரதிபலன் வேண்டாமல் தன் அருங்காதலைக் கொடையாக அளிப்பாள் தேவி மீனாட்சி! காலங்கள் வென்று தண்ணருள் முகவொளியுடன் கருணையைக் கொடையாக வழங்குவோள் அவள்.

பக்தர்களின் வெவ்வினைகளை வேரறக்களைந்து, அவர்களுக்கு வெற்றியும் நல்வினை கூடும் செல்வ வாழ்வும் தந்து காப்பாள் கருணைத் தாயான அங்கயற் கண் அம்மை. வீராதி வீரர்களும் சூராதி சூரர்களும் அவளைப் பணிந்து நன்மை அடைவார்.

சங்கம் ஒலிக்கும் படியான தண்ணமுத மதுரையிலே மங்கள மணிக ளொலிக்க, அணிகள் ஒலிக்கத் தடை தவிர்த்துக் கொடைதரும் தேவியாக அமுத இசைக்குரல் வாய்நதவளாக, சங்கரியாக, சுந்தரியாக, சன்மார்க்க நாயகியாகத் திகழும் தாயின் தயையானது பெரு மதியைத் தானே தேடி வருகிறது. இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டால் பெறுதற்கரிய பேறனைத்தும் சித்திக் கும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார் பெருங்கவிக்கோ.

வரும் நல்ல சந்தர்ப்பங்களை வழுவவிடாமல் பயன்படுத்திக்கொள் வோர்கள் உண்மையில் வாழ்வின் தோல்வியறியாது வெற்றி குவிப்பார்கள் என்பதில் ஐயமே இல்லை.



ஒவ்வொரு நொடிக்குமோ ஒவ்வொரு புதுமைகள்
 ஒவ்வொரு போதிலும் உன்னதம்
ஒவ்வொரு நிலையிலும் வெவ்வேறு புதுயுகம்
 உண்டாக்கும் வித்தைகள் கற்றவர்

செவ்விய அறிவியல் தெளிவினால் பண்டுன்றன்
 திருமுகம் மீதினில் 'இராக்கெட்'டைச்
செலுத்தியே நீயுமொர் கோள்களின் நிலமென
 செய்திகள் உண்மைகள் தந்தவர்

தெவ்வர்களை மருட்டிடும் செவ்வியதோந் திடும்நாட்டர்
 செவ்வாய்முதல் பலகோள்கள் மிரட்டுவர்
திறம்விளையாடநீ வரவில்லையேல் உன்னையும்
 தெருட்டியே உருட்டித்தான் பூமிகொணர்வரே!

அவ்வியநின் குறைதவிர்த்தே அருளாட்சி அம்மையொடு
 அம்புலி ஆடவாவே!
அரியபல நிறைகளொடே அறம்காக்கும் அன்னையொடே
 அம்புலி ஆடவாவே! 10

*10.* ஒவ்வொரு நொடிக்கும் ஒவ்வொரு புதுமை, ஒவ்வொரு பொழுதிலும் ஒவ்வொரு உன்னதச் செயல், ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு புதுயுகம் உண்டாக்கும் வித்தையில் தேர்ந்தவர்கள் தம் மேம்பட்ட விஞ்ஞான அறிவுத் தெளிவினால் வான மண்ட லத்தில் புதுப்புது ''இராக்கெட்டைச்'' செலுத்தி விரட்டி மிரட்டி மதியைக் கலக்கிடுவர். முன்பு உன் மீதும் இறங்கி முகத்தில் முத்தமிட்டவர் மதியான சந்திரனையும் ஒரு கிரகம் என மதிக்கச் செய்தவர்கள். செவ்வாய் முதலான கிரகங்களைச் சுட்டிக் காட்டி உலகையே ஒரு நொடியில் அழிக்கும்படியாகச் செய்ய முடியும் மதியையும் தெருட்டி உருட்டி இப்பூமிக் குக் கொண்டுவந்திடுவார். மிரட்டலான எச்சரிக்கை மதிக்கு விடப்படுகிறது. ஆதலால் தேவியான அன்னையொடு விளையாட மதிக்கு அழைப்புதானே வருகிறதுரு என்கிறார் பெருங்கவிக்கோ.

அருள் உள்ளம் கொண்ட தாய் மீனாட்சி மதியின் மயக்கத்தைப் போக்கி அருள் புரிவாள். அந்த அம்மையொடு ''அம்புலி ஆடவாவே''

அறங்காக்கும் அன்னையொடு ''அம்புலி ஆடவாவே!''

கணந்தோறும் விஞ்ஞானப் புதுமைகள் உண்டாகிப் ''புதியதோர் உலகு செய்வோம்'' எனும்படியாகச் செயல்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன.

அமெரிக்காநாசாவில் ''இராக் கெட்'' செலுத்தி அணு ஆயுத சோதனையும் நிகழ்நத வண்ணமிருக்கிறது. இதனால் அழிக்கும்படியான அணுஆயுதசோதனை நிகழாமல் அதை அறவே தடுத்து உலகில் அமைதியே நிலைநாட்டச்செய்பவள் '' கூடசுடன்'' நகர்வாழும் தெய்வமான கருணைத் தெய்வம் மீனாட்சித் தாயேயன்றி வேறெவரும் இல்லை. அதனால் அன்னையைச் சரண்புகுவோம்.என்பது பெருங்கவிக்கோவின் உள்ளக்கிடக்கை தீமைதரும் அணுஆயுத சோதனை நிகழாமல் அவளருளை வேண்டுவோம் அவளருளால் நன்மை விளையட்டும்; அறம் நிலைக்கட்டும்!

# 8. அம்மானைப் பருவம்

இது பதினேழாம் திங்களில் நிகழ்வது, இது பிள்ளையைப் பார்த்துத் தோழிகள் முத்து மாணிக்கம் - நீலமணி முதலிய வைகளோடு அம்மானைகளைக் கொடுத்து ஆடும்படி வேண்ட ஆடுவதாகும்.

செந்தளிர்க் கைகளிலுள சிந்தொளிர் முத்தம்மனை
செவ்விய லிடத்தினில் கொடுத்தே
சீருடன் ஆடிடவே சிறப்புடன் வேண்டுபொழுது
சேணிடைத் தூக்கியே எறிந்திடவும்

திங்கள்மண் டலம்போயதும் முட்டிமுட்டி மோதியதே
தெய்வீக எழில்தனை, மதியும்தான்
திருடியே கொணர்ந்துமுகம் சேர்த்துள தன்மையாலே
திரும்பத்திரும்பவே உதைத்தபின்

தங்காதே விரைந்தம்மை கரம்வந்து சேர்ந்ததும்
தையல்நா யகியாள் தன்னுடைய
தகைக்கரம் மேவிடும் தகவெழில் அன்னஇளந்
தழற்குஞ் சினையேதான் ஒத்திடும்

அங்கயிலை அண்ணலின் அகம்பாதி பதிந்தவளே
அம்மானை ஆடி அருளே!
அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரம் அளிஅம்மை
அம்மானை ஆடிஅருளே! 1



*1.* செந்தளிர்க் கரங்களில் ஒளிசிந்தும் அம்மானைகளைச் செம்மையுடையவளிடம் தந்து சிறப்புடன் ஆடிட, அவற்றை ஆகாயம் அளாவும் உயரத்தூக்கி எறிந்திடவும் சந்திர மண்டலம் சென்று அவை மோதின. தெய்விக எழில்மதி அவற்றைத் திருடிக் கொண்டு வந்தாற்போல் திருமுகம் சேர்த்துள்ள தன்மையால், திரும்பத்திரும்ப ஓங்கி உதைக்கப்பட்டபின் அம்மானைகள் தங்க இடமின்றி விரைந்து அம்மையின் கரங்களிடம் வந்து சேர்கின்றன. அங்ஙனம் சேரும் அம்மானைகள் அக்கினிக் குஞ்சுகளை ஒத்திருக்கின்றன. இத்திருக்காட்சியைப் பெருங்கவிக்கோ தம் இனிய கற்பனையால் பந்தாடியிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

திருக்கயிலை இறைவனின் செம்பாதியாகத் திகழும் அருளன்னை *மீனாட்சியே!*

*''அம்மானை ஆடி அருளே!*

*அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரமான கருணையுடைய அம்மையே!*

*''அம்மானை ஆடி அருளே!''*

தூக்கி எறியப்படும் அம்மானைகள் தூரச் சென்று கடைசியில் அம்பிகையின் அருட் கரத்திற்கே வந்து விடுகின்றன. ஏனெனில், எல்லாவற்றிற்கும் ஆதாரமான மூலப்பெரும் சக்தியாக அவளிருப்பதனால். இதை இதயத்திற் பதியும் வண்ணம் உணர்த்துகிறார் பெருங்கவிக்கோ.

மாணிக்கச் செம்மணியும் முத்துமிழைத் திட்டுஇரு
வகைஅம் மணிகளை மலர்க்கரம்
மதித்தளிக்க வானோக்கிச் சுழற்றி எறிந்தாடிடவும்
வானந்தனி லிருந்தஅக் கதிர்மதியர்

நாணிடவே வருமொளியைக் கண்டுகை கூப்பிவணங்கி
நல்வரமும் வேண்டியே பணிந்திட
நனிபரம் பொருள்சிவன் கரமுடைக் கங்கைதான்
நர்த்தனங்கள் பெருக்கெடுத் தாடும்படி

வேணிகள் சூழ்தலை அசைத்து அடிமகிழ்ந்து போற்றிட
மேவுகலை மகள்அலை மகளும்தான்
மென்னகைசூழ் பண்ணிசையில் பாடியே இசைத்திட
மீதூர்ந்த பார்வையால் நோக்கிட

ஆணிப்பொன் நன்மகள் அன்புக்கு ரிமைஉமை
அம்மானை ஆடி அருளே!
அருளுக்கும் பொருளுக்கும் ஆதார மளிஅம்மை
அம்மானை ஆடி அருளே! 2



2. செந்நிற ஒளிவீசும் மாணிக்கமும் வெண்ணிற ஒளிவீசும் முத்தும் வைத்து இழைத்தாற்போல் தோற்றமளிக்கின்றன இருவகையான அம்மானைகள் அவற்றை ஆகாயம் நோக்கிச் சுழற்றி எறிந்தாடிட வானமண்டலத்தை ஆளும் சூரியன் சந்திரர் கண்டு நாணுகின்றனர். அம்மானைகளின் அருட்பேரொளியைக் கண்டு கரங்கூப்பி வணங்கி நல்வரம் வேண்டிப் பணிகின்றனர்.

சிவபெருமானின் சிரமிசைவிளங்கும் கங்கை பெருக்கெடுத்து நர்த்தனம் புரிகிறாள் சடைசூழ் தலையாடுகிறது. கலைமகளும் திருமகளும் இசைப்பண்பாடுகின்றனர். அவ்அழகுத் தெய்விகத் திருக்காட்சியை அருட்பார்வை கொண்ட அன்னை மீனாட்சி நோக்குகிறாள்.

அன்னை மீனாட்சி ஆணிப் பொன்போன்றவள், நன்மகளான அவள் உலகிற்கெல்லாம் உயர்நாயகியான உமையே ஆவாள். அதனால் பெருங்கவிக்கோ அப்பெருமாட்டியை "அன்புக்குரிமை உமை அம்மானை ஆடி அருளே!" என்று அன்புரிமையுடன் பாடுகிறார் பெருங்கவிக்கோ. அருள், அரும்பொருள் இவ்விரண்டிற்கும் ஆதார மளி அம்மை அம்மானை ஆடி அருளே!"

சோதிடக்கலை சொல்லுவதை இவ்விடத்திற்குறிப்பிடுவது பொருந்தும் சூரியனுக்கு உரிய இரத்தினம் செந்நிற ஒளிதரும் மாணிக்கம் சூரியனே சிவன் ஆவன்.

சந்திரனுக்குரிய இரத்தினம் வெண்ணிற ஒளிதரும் முத்து, சந்திரனே அம்மை, ஈசுவரி எனவே, மாணிக்கச் செம்மணியும் முத்துமிழைத்திட்டு" என்றுபாடும் பெருங்கவிக்கோவின் கவிதை வரி சிவமும் சக்தியான அம்மையும் சேர்ந்திருக்கும் திருக்காட்சியைப் படம் போற் கண்முன் காட்டியின்புறச் செய்கிறது.

பண்டுமா தவத்தினள் செண்டாடும் அம்மானை
பதித்தாடவது விண்வெளி பாய்ந்திட
பதிஆளு வோரோங்கும் விதியமை அறிவியலின்
பயன்தரும் பற்பல கோள்களெலாம்

விண்டிட முடியாத வியனாட்சி 'நாசா'வின்
வெளிப்பாட்டு விண்கலங் களெல்லாம்
மேலேறிச் சென்றுதிரி வெற்றிதரும் ஆற்றலுக்கே
வீறுதரும் நல்லருளை நல்கிட

கொண்டதெளி வதனாலே குறிக்கோள் நிறைவேற்றும்
குறிப்பினைப் பெற்றிடவே ஏகிடும்
கூவிடும் அதிசயக் கூத்ததைப் பார்த்தமரர்
குதித்துக் குதித்தாடி மகிழ்வரே!

அண்டர் நாயகனோடே ஆடிய பராசக்தி
அம்மானை ஆடி அருளே
அருளுக்கும், பொருளுக்கும் ஆதாரம் அளிஅம்மை
அம்மானை ஆடி அருளே! 3

பண்டு மாதவம் பண்ணிய பரமேசுவரி செண்டாடும் அம்மானை பதித்தாட, அது விண்வெளி நோக்கிப்பாய்கிறது. இது விஞ்ஞான அறிவியலை வெளிப்படுத்துவது போன்று அமைந்துள்ளது மதிமண்டலம், செவ்வாய் மண்டல முதலிய கிரகம் மண்டலங்களையெட்டும் அளவிற்கு விண்கலம் விடப்படுகிறது. இவ்விண்கலம் விண்வெளி சென்று வெற்றி பெறும் குறிக்கோளை உண்மையாக்குகிறது; நிறைவேற்றுகிறது இவ்வியன் காட்சி ''நாசா''விற் காணலாம் இந்த, அதிசயத்தைப் பார்த்து ஆனந்தத்தால் அமரர்கள் குதித்துக்குதித்தாடுவார்கள் என்பதில் ஐயமில்லை என்கிறார் பெருங்கவிக்கோ.

அண்டர் நாயகனான, ஆடும் பெருமான் ஆன நடராசப் பெருமானோடு தில்லையில் ஆடும் சிவகாம சுந்தரி அம்மை மதுரையிலே வெள்ளியம்பலத்தில் சோமசுந்தரப் பொருமான் தேவி மீனாட்சி அம்மையாவள் என்பது குறிப்பிடத் தக்கது.

இதனைத் தெளிவுபடுத்துகிறார் ''அண்டர் நாயகனோடே ஆடிய பராசக்தி'' என்று குறிப்பிட்டுப்பாடிப் பெருங்கவிக்கோ!.

''பராசக்தி அம்மானை ஆடிஅருளே!''

அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரமான மூலசக்தியாக மிளிரும் அம்மையே! ''அம்மானை ஆடிஅருளே!''



செம்மலர்த் தேவியாம் திசைமகள் செம்மணி
அம்மானை கையிருந்திட
வெண்மலர்த் தேவியாம் நாமகள் முத்தொளிர்
விரும்புஅம் மானைகரம் ஏற்றிட

இம்மலர்த் தேவியள் இருவரும் வான்மிசை
இருவகை அம்மானை யையும்வீசிட
இச்சேடி யர்களின் இரண்டோடே மூன்றாக
எதிர்மாதும் ஆங்கேதான் எறிந்திட

எம்மம்மா! எனவியக்க இம்மூன்றும் வானூற
இதன்வேகம் ஞாயிறும் திங்களும்
இரவிமகன் சனியும் தான் இதுகண்டே விண்ணிடையில்
ஏகமாய் தாவியொளி மேலொளிர

அம்மானைத் தவிர்த்தேதான் செம்மான்வைத் தவர்தேவி
அம்மானை ஆடி அருளே!
அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரம் அளிஅம்மை
அம்மானை ஆடி அருளே! 4

செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகளின் செம்மணிக்கரத்தில் அம்மானை இருந்திட, வெள்ளைத் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் கலைமகலின் கரம் அம்மானை யேற்றிட இவ்விரு தேவியர்களும் இருவகையான அம்மானையை வானகம் நொக்கி வீசுகின்றனர்.

இவ்விருவர்களுடன் மூன்றவதாக எதிர்மாதும் அம்மானை வீசுகிறாள்; எறிகிறார். இம்மூன்று அம்மானைகளையும் கண்டு ''அம்மம்மா'' வென ஆச்சரியம் அடைகிறது அகிலம். இத்திருக்காட்சியைச் சூரியனும் சந்திரனும் சூரியனின் மக்களான சனியும் கண்டு விண்ணிடையே தாவுகின்ற ஒளியானது மிளிர அப்போது அம்மானையைத்தவிர்க்கின்றாள் அன்னை என்கின்றார். சூரியன், சந்திரன், சனி என்ற வான் கிரகங்களைக் குறிப்பிட்டுக் கவிதைபடைத்த பெருங்கவிக்கோ. சிவபெருமான் தம் செங்கரத்தில் மான் ஏந்தியுள்ளார் மான் ஏந்தியவரின் மனம் நிறைந்த தேவியாகத் திகழந்கிறார் மீனாட்சி அருளன்னை. ''செம்மான் வைத்தவர்தேவி அம்மானை ஆடி அருளே!''

அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரமான அம்மையே! ''அம்மானை ஆடி அருளே!''

சூரியன், சந்திரன், சூரியன் மகன் சனி ஆகிய கிரகநாயகர்களைப் பராட்டிக் குறிப்பிட்டுப்பாடியிருக்கும் கவிஞர் பெருமான் பெருங்கவிக்கோ சோதிடக்கலையறிவும் அக்கலையில் மிக நம்பிக்கையுமுடையவர் என்பதும் நன்கு புலனாகிறது.

களிபெரும் மகிழ்வுந்த கண்ணிமை விழிகள்தாம்
கண்கண்டே மேல்கீழாய் உலவவும்
கவின்செழும் பிறைநெற்றி சுருங்கியே விரியவும்
கைவளை யல்கள் கணீரென ஒலிக்கவும்

தெளிவாக அம்மானைத் திகழொளிப் பந்துகளை
செந்திருக் கரம்வைத்துச் சிறப்பாக
திந்தோம்தோம் தினத்தோம்தோம் திதிங்கினத்தோமெனவே
திக்கெட்டும் தாளங்கள் முழங்கவும்

வளிசுழல் மண்டலங்கள் இப்பாலும் அப்பாலும்
வரம்பிலாது பல்லாயிரம் மென்மேலும்
வனப்பொளிகள் வண்ணவண்ண மாகவே மேவியே
வரவுமது போகவுமே மாறிமாறியே

அளிகருணை வழங்கிஅருள் அதிசயம்செய் அம்மையே
அம்மானை ஆடி அருளே!
அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரம் அளிஅம்மை
அம்மானை ஆடி அருளே! 5

களிப்புடன் கண்ணிமை விழிகள் மேலும் கீழும் உலவுகின்றன. அழகான பிறைநெற்றி சுருங்கி விரிகிறது. கைவளைகள் கணீரென ஒலிக்கின்றன. ஒளி திகழும் அம்மானைப் பந்துகளைச் செங்கரங்கள் ஏந்தித் "திந்தோம் தோம் தினத் தோம்தோம் திதிங்கினதோம்" எனத்தாள ஒலிகளைத் திக்கெட்டும் எழுப்புகின்றன.

காற்று மண்டலங்கள் இப்பாலும் அப்பாலும் வண்ண ஒளியை மாறி மாறி வந்து போகச் செய்கின்றன. இந்நிலை அங்கயற்கண் இறைவி அம்மானை ஆடி அதிசயம் நிகழ்த்துகிறார் அத்தகைய அன்னையை "அதிசயம்செய் அம்மையே!" என்று குறிப்பிடுகிறார் பெருங்கவிக்கோ "அம்மையே அம்மானை ஆடி அருளே!"

அருளுக்கும்பொருளுக்கும் மூலாதாரமனை சக்தி அம்மையே!

"அம்மானை ஆடி அருளே!"

"திந்தோம் தோம் தினத்தோம்தோம் ததிங்கினத்தோம்" எனத்தாளச் சொற்கட்டுகளை இப்பாடலில் பெருங்கவிக்கோ சமைத்துப்பாடியிருக்கிறார். இந்தாளச் சொற்கட்டுகளைப்பாடுவோர், நடனம் ஆடுவோர் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது இப்பாடல் இப்பாடல் நடனமணிகளின் கவனத்திற்குரியது.



பழகுதற் கொருநிதி பயன்நிதி அருள்நிதி
பதிகலைஞர் உடன்பிறப்புக் கருணாநிதி
பதிநிதியாம் முதல்வர்சிவத் தனிக்கயிலை மலைஉமைப்
பாவையாள் கரமேவு அம்மானைகள்

எழஎழஎழ இருளெலாம் எங்கேயோ மறைந்ததே
இரவியும் திங்களும் உள்ளதோ
என்றயர வென்றுதிரி நன்றுபுரி அங்குமிங்கும்
ஏகவிசை படிந்துகைக் கதிர்களால்

தொழச்சிவன் தனைவானம் துளைக்கத்தான் செல்லுமோ
தொண்டர்கள் அயர்வினை நீக்கவே
தொடுத்தபல ஆர்வமிகு எடுத்தவினை யாட்டிதோ?
தொல்வையத் தார்களெலாம் வியப்பவும்

அழகுக்கும் அழகெனவே அழகிய மீனாட்சி
அம்மானை ஆடி அருளே!
அருளுக்கும் பொருளுக்கும் ஆதார மளிஅம்மை
அம்மானை ஆடி அருளே! 6

6. இனிமையுடன் பழகுவதற்கொரு நிதியாகவும், கலைஞர்களுக்குப் பயன்தரும் அருள் நிதியாகவும், உடன் பிறப்புகளுக்கு அருள் பாலிக்கும் கருணைக்கருணா நிதியாகவும் விளங்குகின்றாள் அன்னை மணிமலையான திருக்கயிலையில் உறைபவள் பாவையான உமாதேவி.

அத்தகைய உமையம்மையின் அழகுத் திருக்கரம்மேவும் அம்மானைகள் எழ எழ எழ இருள் மறைகிறது. சூரியர் சந்திரர் உள்ளனர் என்று சொல்லும் படியாக ஒளி நிறைகிறது சிவந்த கதிர்கள் வானத்தைத் தொலைக்கச் செல்லுகின்றனவோ என்று செப்பும்படியான காட்சி சிந்தையிற் குடிகொள்ளுகிறது. இவையெல்லாம் இனிய தொண்டர்களின் அயர்வினைப் போக்க எழுந்த விளையாட்டு என்று வியனுலகம் வியக்கின்றது என்று கூறுகிறார் பெருங்கவிக்கோ.

அழகுக்கும் அழகு ஆனவள் அழகே வடிவான அன்னை மீனாட்சி. ''புதிய அழகு பொலிந்திடும் கற்பகப் பூங்கொடி''யானவள் அவள்! ''அழகுச் சொக்கர் மனத்தினிக்கும்'' அமுதானவள் அவள்!

''அழகிய மீனாட்சி அம்மானை ஆடி அருளே!''

அம்பிகை பழகுதற் கொரு நிதியாகவும் கலைவாணர்களுக்கு அருள்புரியும் நிதியாகவும், அடியவர்களுக்கு அருள் தரும் நிதியாகவும் நீதியாகவும் திகழ்கின்றாள் என்பதை பெருங்கவிக்கோ நிதியென்ற பதத்தை தமிழக முதல்வர் கருணாநிதியையும் நினைவுகூர்வதைப்போலச் சிலேடையாக இப்பாடலின் முதலில் மூன்று இடங்களில் வைத்துப் பாடியுள்ளார். இதனை அடிக்கடிபாடும் அன்பர்கள் வாழ்வில் நிதிபெறுவார் என்பது நிச்சயம். குறைவொன்றும் காணார் என்பது நிச்சயம்.



கோனாட்சி செலுத்தலின் கொடைஆட்சி தந்திடக்
குளிர்பனி கொட்டிடும் குறிபதி
குறிக்கோள்கள் உரைத்திடவும் நிறைச்செயல் விரித்திடவும்
கோபுர வாசல்கள் துளங்கிட
மீனாட்சி ஆட்சியே ஆட்சியென வையகம்
மென்மேலே பாராட்டிப் பேசிட
மென்கரம் நன்கரம் தன்கரம் மேவியே
மின்னல் நிலைத்தஒளி சிதறிட
தானாட்சி செலுத்திடும் தவமாட்சி அளித்திடும்
சத்சங்கத் துள்ளவர் துள்ளிட
தளிர்க்கரம் தானுருளும் தங்கஒளிப் பந்துகள்
தங்காதே அங்கிங்கும் தவித்திட
ஆனாத திருவருள் தருமருள் அம்மையே
அம்மானை ஆடி அருளே!
அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரம் அளிஅம்மை
அம்மானை ஆடி அருளே! 7

கோனாட்சி மூலம் கொடையாட்சி மேவுகிறது. குறிக்கோள்கள் கொண்ட செயல்கள் நிறைவு பெறுகின்றன. கோயிற் கோபுரவாசல்கள் அன்பர்களை அழைக்கின்றன.

அன்னை மீனாட்சியின் தமிழ் ஆட்சியே ஆட்சியென்று அகிலம் மேலும் மேலும் பாராட்டி வியந்து களிநடம் புரிகிறது. நற்கரமாகிய பொற்கரம் மேவிய மின்னல் ஒளி சிந்திச் சிதறுகிறது.

தவமாட்சி கொண்ட சதசங்கத்தவர் மகிழ்வுறவே தளிர்க்கரத்தில் தானாகவே உருளும் தங்கநிற ஒளிப்பந்துகள் ஓரிடத்தில் தங்காது தவிக்கின்றன வென்று பாடுகிறார் கவிப்பண்புடன் பெருங்கவிக்கோ.

ஆனாத அதாவது அழியாத நிலையைத் தருகின்ற திருவருளைத் தருகின்ற அருள் அம்மையாவாள் மீனாட்சி. அப்படிப்பட்ட ''அம்மையே அம்மானை ஆடிஅருளே!''

அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரமாக இருக்கும் கருணைநிறை ''அம்மை அம்மானை ஆடி அருளே!''

''எங்கும் புகழ்விளங்க இனிய தமிழ் துலங்கத் தங்கும் வளமுடனே தனியாட்சி'' செய்தவள் மதுரை மீனாட்சி. ஆம் ''மீனாட்சி ஆட்சியே ஆட்சி'' யென்று அகிலம்வியந்து போற்றிப் பாராட்டுகிறது. அதற்குக் காரணம் அவள் ஆட்சி அருளாட்சி! அறத்தின் ஆட்சியாக இருப்பதனால். ''அருளது சத்தியாகும்'' என்று கூறப்பெறுவது சிந்தையிற் கொள்ளத்தக்கது.

விண்ணுலோர் மண்ணுலோர் வியந்தே அயர்ந்திடவும்
வீறுகொள் நிலைநீடு விளங்கவும்
வேணவாக் கொண்டாசை வேண்டுவோர் மாசில்மனம்
விரும்பிய அடைந்திடும் நலங்களும்

கண்ணுளே கருத்துளே கதித்திடும் உளத்திலே
காட்சியும் மாட்சியும் காட்டியே
கருத்துக்குள் அடங்காத கலங்கரை ஒளிவென்று
கரைபுரண் டெழும்ஆட்சிக் கவினெனவே

எண்ணிடும் எண்ணங்கள் ஏகமாய் மோகமாய்
எங்கெங்கோ சிதறலைப் போலவே
எகிறிடும் எதிர்புதிர் இணைபுனை விட்டங்களே
எத்தனை எத்தனை கோடியோ!

அண்ணலாம் பரம்பொருள் அகம்பதி அம்மையே
அம்மானை ஆடி அருளே
அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரம் அளிஅம்மை
அம்மானை ஆடி அருளே! 8

விண்ணுலகத்தோறும் மண்ணுலகத்தோறும் வியந்து வியந்து போற்றுகின்ற பெருமை கொண்ட நிலைமை நீடூழி விளங்கவும், வெகு ஆசை கொணடு வேண்டுவோரின் மாசில்லாத மனம்விரும்பியபடி நலன்கள் அடையவும், கண்ணாலும் கருத்தாலும், எழுச்சியுற்ற உள்ளத்தாலும், கலங்கரை விளக்கொளியாலும் காணுகின்ற காட்சியும் மாட்சியும் தரும் கவினார்ந்த அருளாட்சி மலரவும் பாடுகின்றார் பாடல் கவி வேந்தர்கட்கெல்லாம் வேந்தரான பெருங்கவிக்கோ.

எண்ணிடும் எண்ணங்களெல்லாம் ஒன்று கூடிமோகம் உண்டாக்கி எங்கெங்கோ சிதறுகின்றன. எண்ணங்களின் எதிரும் புதிருமாக இணைந்த விட்டங்கள் எத்தனை, எத்தனை கோடிகள் என்று மதிப்பிட முடியாமலிருக்கின்றன.

அனைத்துலகிற்கும் பரம்பொருள் ஆன சோமசுந்தரப் பெருமானின் திருவுளத்தில் ஓவியமெனப் பதிந்த "அம்மையே அம்மானை ஆடி அருளே!"

அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரமான மூலசக்தி "அம்மே அம்மானை ஆடிஅருளே!"

வேண்டுவோர் வேண்டிவிரும்பியவாறு நலன்கள் அடைகின்றனர். அதற்கு மூல காரணம் அம்மையின் திருவருளே ஆகும் என்பதை இப்பாடலின் மூலம் உணர்த்துகிறார் பெருங்கவிக்கோ.



எழுகதிர் விழுகதிர் எதிர்எதிர் ஒன்றாக
இதனோடு மதிஅதும் சென்றுமே
இறைசிவம் தேடவோ மறைஅறம் கூடவோ
ஏக்கங்கள் சுமந்தேதான் சென்றபோல்

பழுகதிர் பல்வகை மாணிக்க அம்மானை
பல்கோடி பல்கோடிச் சுழற்சிகள்
படிமிசை வாராமல் பைங்கரம் வரையாபல்
பவனிகள் வருவதன் அழகினை

முழுவதும் கண்டிட மோனமும் ஞானமும்
முயல்வினை அரிதாகும் படியாக
முத்துக்கள் பல்வகை வித்துக்கள் போலவே
முன்பின்னும் கைலாகு காட்டியே

அழுதொண்டர்க் கருளிடும் ஆனந்த அன்னையே
அம்மானை ஆடி அருளே!
அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரம் அளிஅம்மை
அம்மானை ஆடி அருளே! 9

9. காலையில் எழுங்கதிரவனை உதயசூரியன் என்கிறோம். மாலையில் விழுங்கதிரவனை மறையும் சூரியன் என்கிறோம். தோன்றிமறையும் சூரியனை இருவிதமாக இவ்வாறு கூறுகிறோம்.

சூரியன் மறைந்ததும் சந்திரன் வளர்பிறை - தேய்பிறை எனும் பட்சங் கட்கேற்பக் காட்சி தருகிறான். சிவம் என்ற சொல்லுக்கு அன்பு என்று கூறுகிறார் திருமூலர். அவர் வாக்கின்படி அன்பே வடிவானவர் சிவ பெருமான். அப்பெருமான் எங்குள்ளார் என்று அடியவர் தேடுவர்; மறை விதிக்கும் நல்லறம் கூடவே நாடுவர். அதற்குரிய ஏக்கங்கள் அவர்களிடம் வெளிப்படும் என்கிறார் பெருங்கவிக்கோ.

ஒளிமிகுந்த பல்வகைப்பட்ட உயர் செம்மாணிக்க அம்மானை, அதனால் ஏற்படும் பல்கோடிச் சுழற்சிகள் உலகில் வரக் கூடாது. அழகிய பைங்கரம் வரையாமல் இயற்கையாகவே அம்மானையின் சுழற்சிகள் அவனிமிசை அழகாகப் பவனிகள் வருகின்றன. அதனைக் கண்டிட, அது வும் அரை குறையின்றிக் கண்டிட அமைதி தரும் மோனமும், அம்மோன நிலையைக் கையாளும் ஞானமும் வேண்டும். மோன நிலையும் ஞான நிலையும் ஒருவருக்கு வாய்ப்பதென்பது அரிது. அவ்விரண்டையும் அடைய இடைவிடாத முயற்சி வேண்டும் என்று கூறுகிறார் பெருங்கவிக்கோ.

முத்துக்களும் பல திறப்பட்ட வித்துக்களும் முன்னும் பின்னும் கைலாகு காட்டியே அழும் தொண்டர்களுக்கு அருளுகின்றாள் ஆனந்தமே வடிவான அங்கயற்கண் அம்மை

''ஆனந்த அன்னையே! அம்மானை ஆடிஅருளே!''

அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரமாக மிளிரும் மூலாதாரச் சக்தி முதல்வியே!

''அதாரம் அளிஅம்மை அம்மானை ஆடி அருளே!''

இப்பாடலில் வரும் ''அழுதொண்டர்'' என்ற பதம் மாணிக்கவாசகரின் திருவாசகப்பாடல் ஒன்றை அப்படியே நினைவு படுத்துகிறது. ''யானே பொய், என் நெஞ்சும் பொய், அன்பும் பொய், ஆனால் வினையேன் அழுதால் உன்னையும் பெறலாமே!'' என்று பாடும் மணிவாசகரின் திருவாசகம் சிந்தித்துத் தெளிவு பெறுவதற்குரியது. பொய்யே முழுதும் நிறைந்திருந்தாலும் அதற்காக உளம் வருந்தி உண்மையுணர்ந்து ஒருவர் கண்ணீர் விட்டு அழுதால் ஆண்டவனின் புனித அருளுக்குப் பாத்திரமாக லாம் என்பதை அறிந்து உய்ய வேண்டுவது தொண்டர் கடமையாகும் என்று திட்டவட்டமாகத் திண்ணமாகக் கூறுகிறார் பெருங்கவிக்கோ.



உருகிஉரு கியேநிதம் உளமாசில் லாமல்வாழ்
உத்தமர்க்கே ஒளிதரும் ஒளியே
ஓங்காரப் பொருளாகி நீங்காத அடியார்க்கோ
ஒப்பிலா அருள்புரியும் தெளிவே!

பெருகிப் பெருகிவரு பெய்கண்ணீர்த் துளிவடி
பேதுற்றார் பேணிடும் பொருளே!
பெருமைக்கும் உரிமைக்கும் பீடுதரும் அருளே!
பிழையினைப் பொறுத்திடும் அறமே!

கருதாத நாத்திகம் கருதிடும் உண்மையே
கருத்தொளிக் கோயிலின் விளக்கே!
கவலைதீர் அமுதேஎம் கண்மணிப் பாவையே
காலங்கள் கடந்தஎம் வாழ்வே

அருந்தமிழ்ப் பிறப்போடே பிறந்தஎம் அன்னாய்
அம்மானை ஆடி அருளே!
அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரம் அளி அம்மை
அம்மானை ஆடி அருளே! 10

*10.* இந்த அம்மானைப் பருவத்தின் இறுதியில் பத்தாவது பாடலைப் பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடியுள்ளார் பெருங்கவிக்கோ.

உள்ளத்தில் மாசில்லாமல் உள்ளம் உருகி உருகி நிதம் வாழ்கின்ற உத்தமர் தமக்கே ஒளிதரும் ஒளியானவளே!

ஓங்காரப் பொருளானவளே! ஓம் என்னும் பிரணவ ஒளியினளே! அம்பி கையை அகத்தில் எப்போதும் இருத்தி வழிபடும் ஒப்பில்லாத அடியவர்களுக்கு அருள்புரியும் தெளிவானவளே!

பக்திப் பெருக்கினால் ஆனந்தக் கண்ணீர் வடிக்கும் நற்பேறுபெற்றவர்களை எக்காலமும் காத்தருளும் தெய்வப் பெருஞ்சக்தியானவளே! பொருளானவளே!

பெருமைக்கும் உரிமைக்கும் பீடுதரும் பேரருள் ஆனவளே!

செய்பிழை பொறுத்திடும் சீர் அறம் ஆனவளே!

கடவுட்சக்தியான அன்னையை நாத்திகர் கருதுவதில்லை. கடவுள் நம்பிக் கையும் அவர்களுக்கு அறவே கிடையாது . கண்முன் நிற்பதையே மெய்யெனக் காண்பார்கள். கடவுளை நம்புபவர்கள் அவர்கள் கண்களுக்கு முட்டாள்களாகவே தெரிவார்கள். அவர்கள் அவ்வாறிருந்தாலும் அவர்கட்கும் அவர்களின் கருத் தொளிக்கோயிலின் விளக்கானவளே!

கவலைகளைப் போக்கி இன்பம் தரும் அமுதம் ஆனவளே! கண்மணிப் பாவையானவளே! காலங்கள் யாவும் கடந்தவளே! வாழ்வானவளே!

தமிழ்முழுங்கும் தண்ணருள் மதுரையம்பதியில் உதித்ததனால், தமிழே ஆட்சி புரிகிறதென்று சொல்லும் படியாக அன்னை விளங்குவதனால் ''அருந் தமிழ்ப் பிறப்போடே பிறந்தஎம் அன்னாய்'' என்று குறிப்பிடுகிறார் பெருங் கவிக்கோ பெருமிதத்துடன்.

''அன்னாய் அம்மானை ஆடி அருளே!''

அருளுக்கும் பொருளுக்கும் ஆதாரமான அருஞ்சக்தி மூலமான ''அம்மையே அம்மானை ஆடி அருளே!''

இப்பாடலை உளதுமுருகி எவர் பாடுகிறாரோ அவர் முன்னே அம்பிகை நேரில் தோன்றி அருள்புரிவாள் என்பது நிச்சயம்.

அம்பாளை விளித்து அழகுறப் பாடும்படியான பெருங்கவிக்கோவின் இப்பாடலுக்கு இணையான பாடல் கிடைப்பது கடினம் பாடிப் பாடிப்பார்த்தால் இவ்வுண்மை புலப்படும்.

உள்ளமாசின்றி வாழ்பவர் உத்தமர் என்று கூறுகிறார். உத்தமர் என்றபதம் வள்ளலார் பாடியிருக்கும் ''ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்'' என்று சென்னைக் கந்த கோட்டக் கந்த பெருமான் மீது அமைந்த அருமையான பாடல் இங்கு நினைவுகூரத்தக்கது.

''கருதாத நாத்திகம் கருதிடும் உண்மை'' என்ற கவிதை வாக்கியம் ''நாத் திகம் பேசி நாத்தழும் பேறினர்'' என்று பாடும் மணிவாசகரின் அகவல் வரியை எண்ணிப் பார்க்கச் செய்கிறது.

# 9. நீராடற் பருவம்

இது பத்தொன்பதாம் திங்களில் நிகழ்வது அது பிள்ளையை நோக்கித் தோழியர்கள் ஆற்றுப் புதுவெள்ளநீர் ஆடுமாறு வேண்டுவதாகும்.

பாரதத் தாய்ப்பாலுள பனிகங்கை யமுனைமுதல்
    பல்வேறு புண்ணிய நதிகளும்
பணிந்து வந்துவந்து தமிழ் நாடுதென்பாலுள
    பலவேறு மூலிகைகள் கலந்து மேல்மேல்

வாரித்தேனாறு எனவே வருகைதரும் மணிநீருள்
    வாணிநதி காளிநதி போல்பல
வருநதிகள் பெருகியே வடிந்தொழுகி ஒன்றாகும்
    வான்பொருனை ஆற்றிலிருந் தேநீரை

நேரழகு நிகரிலாத நிலைஅழகு கலைஅழகு
    நெஞ்சழகு கொஞ்சழகு மஞ்சள்முக
நீள்வானத் தேவமாதர் நீர்சுமந்து வான்வழியே
    நேராகச் சுடர்க் கொடியாள் பக்கநின்று

ஆரமுத நீராடற் கணிசெய்யும் அணங்கான
    அம்மைநீ ராடி அருளே
ஆக்கமும் ஊக்கமும் நோக்கமும் கொண்டுயர்த்தும்
    அம்மை நீராடி அருளே! 1



*1.* பாரத நாட்டிலுள்ள குளிர்ந்த கங்கை, யமுனை முதலான பல்வேறு புண்ணிய நதிகளும் தென்னாடாம் தமிழ்நாட்டிற்கு வருகின்றன. மூலிகைகளும் அவற்றுடன் கலந்து வருகின்றன.

தித்திக்கும் வாரித்தேனாறுகள் என்று கூறும்படியான வாணிநதி காளி நதிமுதலிய தெய்வநதிகள் கலந்து ஒன்றாகின்றன.

நேரழகும், நிகரில்லாத நிலையழகும், கலையழகும், நெஞ்சழகும், மஞ்சள் முக அழகும் கொண்ட தேவமாதர்கள் அப்புண்ணிய நதிகளின் நீரைச் சூழ்ந்து கொண்டு தேவமாதர்கள் நேராக வான்வழியே வந்து சுடர்க் கொடியாளான மீனாட்சி அன்னையின் பக்கத்தில் நின்று, அன்னையைத் தாங்கள் கொண்டுவந்த அமுத நீரால் குளிக்கும் படியாகச் செய்கின்றார்கள்.

அன்னை அமுத நீராடும் அழகுக் காட்சியை அப்படியே படம் பிடித்தாற் போன்று கண்முன் காட்டுகிறார் பெருங்கவிக்கோ.

அமுத நீராடற்கோர் அணங்கான, தெய்வமான ''அம்மை நீராடி அருளே!''

ஆக்கமும், ஊக்கமும், அன்பர்களை உணர்த்தும் நோக்கமும் கொண்ட ''அம்மை நீராடி அருளே!''

கங்கை, யமுனை, கோதாவரி, துங்கபத்ரா, காவிரி முதலிய புண்ணிய தெய்வ நதிகளின் நீர் கொண்டு அம்மையை நீராட்டுகிறார்கள், நீராடும் அன்னை மீனாட்சி மேலும் குளிர் நெஞ்சம் கொண்டவள் ஆகத் தண்ணருள் புரிகிறாள் என்பது கருத்திற் கொள்ள வேண்டிய குறிப்பாகும்.

நிலையழகு, கலையழகு, நெஞ்சழகு, கொஞ்சழகு, மஞ்சளழகு முதலிய பல அழகுகளை இப்பாடலில் அழகு சொட்டும் அமுதத்தமிழிற் பாடியிருக்கிறார் பெருங்கவிக்கோ. இப்பாடலின் அழகுக் கவிதை மொழிகள் சுவைத்தின்புறத்தக்கன.

கயல்பாசி வள்ளை செவ்வாம்பல் செங்கிடைப், பதுமமாம்
    களிஞெண்டு பாய்வராலுடனே
கமட முடன் பவளக்கொடி யோடுஆதி பத்தும்தான்
    கணக்கெண முறையாகத் தொடரும்ஆதி

புயல் கூந்தல் கண்காது வாய்அதரம் தனத்தோடு
    பொலிவுள முழந்தாள் கணைக்கால்
புறவடி செவ்விரல் புத்தம் புதுமலர்பேலொளிரும்
    புடைவரிசை ஒப்புமை ஆகவும்

வியப்பார்க்கும் கவிவாணர் நயஉவமை கொழித்தொழுக
    விகுளையர்கள் சிவிறியினில் நிறைவாக
மிகமிகக் குங்குமம் கரைத்து மஞ்சளும் கலந்துதான்
    மணிகொழிக்கும் உம்பராற்று நீர்பொலிய

அயர்விலாதே புத்தமுத நீராடற் செய்தருளும்
    அம்மை நீராடி அருளே!
ஆக்கமும் ஊக்கமும் நோக்கமும் தந்துயாத்தும்
    அம்மை நீராடி அருளே! 2



கயல் பாசி வள்ளை செவ்வாம்பல், செங்கிடை, பதுமம், ஞெண்டு, வரால், கமடம் பவளக்கொடி ஆகிய ஆதிபத்தும் கருங்கூந்தல், கண், காது, வாய், உதடு, முலை, முழந்தாள், கணைக்கால், செவ்விரல், புத்தம் புதுமலர் போல் மிளிரும் புடைவரிசை ஆகிய பத்திற்கும் ஒப்புமை ஆகின்றன என்றுரைக்கிறார் பெருங் கவிக்கோ.

கவிவாணர்கள் நயமாக உவமை கூறி வியந்து களிப்பெய்துகிறார்கள். மிக அதிகமாகக் குங்குமம் கரைத்து மஞ்சளையும் கலந்து தேவருலகில் உள்ள ஆறு களில் நீர் பொலிய அம்மையை நீராடச் செய்கிறார்கள்.

அமுத ஆறுகளின் புதுநீரால் அயர்வின்றி ஆடல் செய்தருளுகின்றாள் அம்மை.

புத்தமுத நீராடற் செய்தருளும் அம்மை நீராடி அருளே!''

ஆக்கம், ஊக்கம், உயர்த்தும் அருள்நோக்கம் மிகுந்த ''அம்மை நீராடி அருளே!''

புண்ணிய ஆறுகளின் நீரில் குளிப்பதால் உடல் தூய்மையாகிறது. அதனால் உள்ளத்திற்கு உற்சாகமும் உண்டாகிறது.

எனவே, உடல் தூய்மையும் உள்ளத்திற்கு உற்சாகமும் உண்டாக்கும் நீராடல் தெய்வ அன்னையின் திருவருளைப் பெற உதவும் என்பதில் ஐயமேஇல்லை.

நீலங்கொள் வான்கங்கை நீறுத்திய பகீரதனும்
　நின்வடிவு கண்டுவணக்கம் செய்து
நீங்கிப் பின்புறம் சென்றிடவும் நேராகவே
　நெடிய அமெரிக்கப் பூமி விழுந்ததோ?

காலங்கள் கணிக்கவியலாக் கரைபுரண் டோடும்படி
　கதித்தெழு குதித்தெழு கணக்கிலாக்
கானாறு கள்பல வானாறு நிலம்தேடி ஓடல்போல்
　கண்கவர் காட்சிக்கோ மீட்சியின்றி

கோலங்கள் கொட்டிமுழக்கும் கொடைநாட்டு நதிநீர்கள்
　குளிருக்கும் குளிராம் கொடும்பனியாய்க்
கூடிவரும் நிலையாதலால் கொண்டல்கள் வான்முகடு
　கொண்டுவரும் நறுமணம் கமழ்நீரை

ஆலமுண்ட சிவன்தமிழ் கண்டம் பிடிநாயகி
　அம்மை நீராடி அருளே
ஆக்கமும் ஊக்கமும் நோக்கமும் கொண்டுயர்த்தும்
　அம்மை நீராடி அருளே! 3



3. நீல நிறங்கொண்ட வானத்திலிருந்து அதாவது வானுலகிலிருந்து கங்கையைக் கொண்டுவரப் பகீரதன் மிகப் பெருமுயற்சிகள் செய்தான். பாடுபட்டுச் சிவபெருமான் திருவருளால் கங்கையைக் கொண்டு வந்தான். பொங்கிப் பெருகிப் பாய்ந்து வரும் அக் கங்கையைத் தம் செஞ்சடையில் தாங்கிக் கொண்டார் சிவபெருமான். பகீரதன் கங்கைக்கு வணக்கம் செய்தான்.

அத்தேவலோகக் கங்கை அமெரிக்க நாட்டில் விழுந்ததோ? என்ற வினாவை எழுப்பி வியக்கவைக்கிறார் பெருங்கவிக்கோ.

காலங்கள் கணிக்கமுடியாதவாறு கரைபுரண்டோடும் காட்டாறுகள், வானாறுகள் கண்கவர், உளங்கவர் காட்சிகளாகின்றன.

கோலங்காட்டிவரும் அமெரிக்கக் கொடை நாட்டு நதிகளின் நீர் குளிர் மிகுந்துள்ளது கொடும் பனிநீர் என்று கூறும் படியாக உள்ளது.

கருமேகங்கள் வான் முகட்டிலிருந்து கொண்டு வரும் நீரில் தெய்வ நறு மணம் கமழ்கிறது. அந்நீரில் அம்மை நீராடுகிறாள்.

பாற்கடல் கடைந்த போது முன்னே வந்தது ஆலகாலம் என்னும் கொடிய பாம்பின் விடம் அவ்விடத்தைக் கண்ட அமரர்கள் அஞ்சியோடினர். சிவபெருமானோ அத்திய விடத்தை மகிழ்ச்சியுடன் உண்டபோது, அவருடைய பிரிய பிராணநாயகியான பார்வதி தேவி பயந்து ஓடிவந்து கண்டத்தை அதாவது சிவபெருமானுடைய கழுத்தைக் கெட்டியாக மேலும் விடம் உடம்புள்ளே போகாதாவாறு பிடித்துக்கொண்டார். அப்போது முதல் சிவன் நீலகண்டப் பெருமான் ஆனார். இச்சரித்திரத்தை உள்ளடக்கிப் பெருங்கவிக்கோ இப்பாடலைப் பாடியுள்ளார்; அம்மையே "ஆலமுண்ட சிவன்கண்டம் பிடிநாயகி அம்மை" என்று குறிப்பிட்டுள்ளார். "அம்மை நீராடி அருளே!"

ஆக்கம், ஊக்கம், அன்புடன் வழிபடுவோரை உயர்த்தும் அருள் நோக்கம் கொண்ட "அம்மை நீராடி அருளே!"

இப்பாடலில் பகீரதன் தன் முன்னோரை மீட்கப் பெருமுயற்சி செய்து, சிவபெருமான் திருவருளால் தன் முயற்சியில், கங்கையைக் கொண்டு வரும் அயராத முயற்சியில் வெற்றி பெற்றது பெருங்கவிக்கோவால் பெரிதும் உணர்த்தப்படுகிறது.

சிவபெருமான் விடம் உண்டதால் அவரது கண்டம் நீலமானதைப் புலவர் ஒருவர் மன்னன் ஒருவன் புகழைக் "கறைமிடற் றொருவன்போல் மன்னுக" வென்று பாடியுள்ளார். விடமுண்ட காரணத்தால் சிவபெருமான் தியாகமூர்த்தியும் ஆனார்.

தளராது தொடர்ந்து தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் தீவிர முயற்சியே முடிவில் ஒருவருக்குப் பகீரதனுக்கு உண்டான வெற்றியைப் போல் முழுவெற்றையைத் தரும் அறியத்தக்க பேருண்மையாகும்.

பொங்கிப் புரண்டுவரு கார்மேகக் கூட்டம் போல்
புனைந்தழகுக் கூந்தலும் நனைந்திட
பொன்வடிவைத் தன்வடிவாய் மின்னல் நிலைத்தபோல்
பொற்கொடிக் கோதையர்கள் பூசிய

எங்கும்கமழ் சந்தனத்தின் இனியநல் மணமும்
ஏந்திழைகள் சூடுமலர் வாசனையும்
ஏரார்ந்த தேவமாதர் சீர்தெய்வ வாசமாதர்
ஏகமாய்க் கலந்துதான் பெருகுநீரை

மங்கலங்கள் சூழ்கவென மன்பதை செய்பாவங்கள்
மாய்ந்தோய்ந்தே தீர்கவென மனத்தெண்ணி
மாவிலைகள் தாழைகமுகு மருக்கொழுந்து கமழ்நீரை
வானோர்கள் மகிழ்ந்து நின்றுதரிசிக்க

அங்கமெலாம் தங்கிவழி அருவிநீராடு நாயகி
அம்மை நீராடி அருளே
ஆக்கமும் ஊக்கமும் நோக்கமும் தந்துயர்த்தும்
அம்மை நீராடி அருளே! 4



4. கருமேகங்கள் மழையை வருவிக்க, அம்மழை நீரில் அழகுக் கருங்கூந்தல் நனைகிறது பொன்வடிவைத் தங்கள் வடிவாகக் கொண்ட மின்னல் நிகர்த்த பொற்கொடியர்கள் என்ற புகழுக் குரிய கோதையர்கள் சந்தனம் பூசியிருக்கிறார்கள். அதனால் சந்தனத்தின் இனிய நறுமணமும், ஏந்திழையர் தங்கள் கூந்தலிற் சூடும் மலர்களின் நல்வாசனையும் எங்கும் கமழ்கின்றன.

தேவமாதர்கள் வாசங் கலந்து நீரைத் தெய்வவாசமுடைய தாக்கிப் பெருகச் செய்கிறார்கள்.

மங்கலங்கள் எங்கும் சூழ்கவென்றும் உலகில் செய்கின்ற தீய பாவங்கள் மாய்கவென்றும், தீர்கவென்றும் மனம் எண்ணுகிறது.

மாவிலை, தாழை, கமுகு, மருக்கொழுந்து முதலிய மணங்கமழும் நீரை மகிழ்ந்து நின்று வானவர்கள் தரிசிக்கின்றனர்.

அவ்வினிய சூழ்நிலையில், அருவியில் அங்கமெலாம் தங்கி வழிய நீராடுவது போன்று அம்மை நீராடுகிறாள். அதனால் அவளை ''அருவிநீராடு நாயகி'' என்று குறிப்பிடுகிறார் பெருங்கவிக்கோ.

''அருவிநீராடு நாயகி அம்மை நீராடி அருளே!''

ஆக்கமும், ஊக்கமும், நோக்கமும், தந்து உயர்த்தும் ''அம்மை நீராடி அருளே!''

மங்கலங்கள் எங்கும் சூழ்ந்து மன்பதை மக்களின் பாவங்கள் தீர்ந்து, மக்கள் யாவரும் மங்களமாய் வாழ வேண்டும் என்பதே பெருங் கவிக்கோவின் பெருவிருப்பமாக இருக்க வேண்டும் என்பது தெள்ளத் தெளி வாகத் தெரிகிறது.

பெருக்கெடுத்த வானாறு பெருமாட்டி தனைத்தேடி
பீடுகொள வந்ததோ எனுமாறு
பேசுபுகழ் உலகமுள புண்ணிய ஆற்றுநீர்
பேறுபெறக் கொணர்வித்தே பெற்றிநலக்த்

திருமகளும் கலைமகளும் அருள்மகளும் பக்கநின்று
சீர்மல்க நீர்மல்க வனப்புடலில்
செழுமணிக் குன்றமிருந் தேவடியும் தன்மைபோல்
சிந்துநீர் ஊற்றியே மனமகிழ

வருநதிகள் ஒப்பாகா மானதிகள் தாய்மண்ணின்
வைகைநதி பொன்னிநதி தாமிர பரணி
வளநதிநீர் அத்தனையும் வருகைதர நிமிர்ந்தழைத்தே
வானளந்தே வளைந்தேதான வடியவும்

அருள்வளர்க்கும் பெருந்தேவி அருள்உலக நாயகி
அம்மை நீராடி அருளே
ஆக்கமும் ஊக்கமும் நோக்கமும் தந்துயர்த்தும்
அம்மை நீராடி அருளே! 5



5. வான் ஆறு எனப்புகழ் கொண்ட கங்கையாற்றைக் கங்காதேவி யென்பர். அக்கங்கா தேவி பெருமை கொள்ள நிலம் நோக்கி வந்தனளோ? தன் புண்ணிய நீரைத் தந்தனளோ? என்று வையகம் வியக்கிறது. உலகில் உள்ள புனித நதிகளெல்லாம் ஒன்றாக வருகின்றன.

அலைமகளான திருமகளும், கலைமகளும், அருள்மகளும் பக்கம் நின்று, சீரளிக்கின்றனர். அன்னையின் ஒளிமல்கும் மாணிக்கக் குன்று போன்ற எழிலொழுகும் உடலிலிருந்து புண்ணிய ஆற்று நீர் வழிந்தோடு கிறது.

மதுரை வைகை நதி, சோழ நாட்டுப் பொன்னி நதியெனும் காவிரி, திருநெல்வேலிச் சீமையை வளமாக்கும் தாமிரபரணி வளைந்த வண்ணம் வடிகிறது.

அனைத்து அமுதப்புண்ணிய ஆறுகளின் நீர்கலக்க அழகுற நீராடு கிறாள் அன்னை மீனாட்சி.

அவள் அருள்வளர்க்கும் பெருந்தேவியாவாள். அகில உலக நாயகி ஆவாள். அத்தகைய அன்னையைத்தம் கவிதையழகு மிளிர அருமையுடன் அழைக்கிறார் பெருங்கவிக்கோ.

''அருள் உலக நாயகி அம்மை நீராடி அருளே!''

''ஆக்கமும் ஊக்கமும் நோக்கமும் தந்துயர்த்தும் அம்மை நீராடி அருளே!''

அலைமகளான திருமகளும் கல்விதரும் திருவுடைய கலைமகளும் தேவிகொலுவிருக்க இருபக்கங்களிலும் நின்று கவரி வீசும்படியான திருக்காட்சி அம்மை இராச இராசேசுவரியாகச் சகல உலக நாயகியாக ஆட்சி செய்யும் கோலத்தை நினைவு கூரச் செய்கிறது. அவ்வாறு நினைவு கூறச் செய்பவர் கவியாற்றல்மிக்க பெருங்கவிக்கோவெனும் பேராளர்.

மணிமணிநீர் மளமளென மதிதழுவி இரங்கியபோல்
மாஅருவி நயகரா நதிபெருக
மடியிருத்தி முடிதனிலே மல்குநீர்தான் வடிய
மணமெல்லாம் கமழ்ந்துநிதம் வரம்பாக

பணிசெய்யப் பிறந்தவர்க்குப் பணிநூறு கோடிமேலும்
பல்லூழிப் பெருமையினைத் தரும்தேவி
பாலாறும் தேனாறும் பதிஆறு பற்பலவும்
பணிந்தொன்றாய் வந்துதரி சித்ததைப்போல்

கணினியுகம் கற்பனைக்கும் எட்டாத அறிவியலின்
கலைவெல்லும் நிலைசொல்லும் காலத்தில்
காலவெள்ளம் பெருகிவடி தன்மைதனில் நீராடி
கனகவல்லி புனிதமிகு புண்ணியத்தாய்

அணிஅணியாய் ஓங்குவிக்கும் ஆனந்த நாயகி
அம்மை நீராடி அருளே
ஆக்கமும் ஊக்கமும் நோக்கமும் தந்துயர்த்தும்
அம்மை நீராடிஅருளே! 6



6. மணிமணயாக நீர் மளமளவென்று மதியைத் தழுவிவருகிறது. உலகில் உள்ள பேரருவிகளில் ஒன்றான 'நயகரா' வின் நீர் நதிபோன்று பெருகிவருகிறது. மடியில் இருந்திட முடியிலிருந்து நீர்வடிகிறது. அந்நீர் மணங்கமழ்கிறது. பணிசெய்யப் பிறந்தவர்க்கு நூறு கோடியெனப் பணிகள் தந்து அவர்களுக்குப் பல்லூழிக் காலம் பெருமையினைத் தருகிறாள் தேவி யென்று பாடுகிறார் பெருங்கவிக்கோ.

நடைபெறும் இந்தயுகம் கணினியுகமாக உள்ளது. கற்பனைக்கும் எட்டாத அளவில், புதுப்புதுக் கண்டு பிடிப்புகள் உள்ள விஞ்ஞான அறிவியல் உலகமாக இன்றுள்ள உலகம் விளங்குகிறது.

கலைவெல்லும், நிலைசொல்லும் கதை நிறைந்த காலம் இது. இக்காலத்தில் காலமெனும் கோல வெள்ளம் பெருகி நீர் வடியச் செய்கிறது. அப்புனிதமணங்கமழும் அருள் மண நீராடுகிறாள் பொன் குவியச் செய்யும் கனகவல்லியெனும் புகழுக்குரிய மீனாட்சித் தாய்.

அப்புண்ணியத்தாய் வளமோங்கச் செய்து வாழ்வளிக்கும் ஆனந்தமே வடிவான அன்னை பராசக்தியாவாள். அனந்த நாயகியென்பாளும் ஆனந்த நாயகி யென்பாளும் அவளே!

''ஆனந்த நாயகி அம்மை நீராடி அருளே!''

''ஆக்கமும் ஊக்கமும் நோக்கமும் தந்துயர்த்தும் அம்மை நீராடி அருளே!''

பாலாறும் தேனாறும் இன்னும் பல ஆறுகளும் ஒன்றுபடக்கூடி வந்து தரிசிக்கின்ற காட்சியை அழகுற வருணிக்கிறார் பெருங்கவிக்கோ.

பணிசெய்வோர் அன்னையின் அருளுக்குப் பாத்திரமாகிப் பல்லூழிக் காலம் நீடுவாழ்வர்.

''பணிசெய்யப் பிறந்தவர்'' என்று பெருங்கவிக்கோ குறிப்பிடுவது, ''என் கடன் பணி செய்து கிடப்பதே!'' என்று அப்பரின் பாடல் வரியைக் குறிப்பிடுகிறது.

பணி செய்யவே பிறந்தவர் பெருங்கவிக்கோ வென்பதைப் பலருக்கும் உதவும் பரந்த, திறந்த உள்ளம் படைத்த அவர்தம் வாழ்நெறி முறைகளை நேரிற்கண்டவர் உணர்வர் என்பது உறுதி.

### வேறு

அகில மாந்தர் ஆணவமாம்
அவ்விய சேற்றை நீக்குதற்கே
அடிமுடி பரவி ஓடுகின்ற
அந்நீ ராலே கழுவுதற்கும்

தகிக்கும் துயரச் சூழல்களில்
தாங்காப் பிறவிப் பெருங்கடலில்
தவித்து வாழும் மாந்தர்களை
தாம்தாம் கடக்க அருளுதற்கும்

மகிமை நல்கும் திருவடியாம்
மன்னு புனைதாள் தோணியினை
வழங்கி அருளும் செவ்வியளே
வரங்கள் தந்தே காப்பவளே

மிகினும் பக்தர் மன்னிக்கும்
விதி நீராடி அருளுகவே
வெற்றித் தேவி உளச்செம்மை
விதி நீராடி அருளுகவே! 7



7. உலக மாந்தர்களின் ஆணவமலத்தையும் அழுக்காறெனும் சேற்றையும் அடியிலும் மடியிலும் முடியிலும் பரவி ஓடும் அருள் நீராலே போக்கிடுவாள். நெஞ்சத்தின் அழுக்கெல்லாம் தம் அருட்புனலால் நீக்கிடுவாள் அவள் யார்? அவள் தான் அருளே வடிவான மீனாட்சி அன்னையென்கின்றார் பெருங்கவிக்கோ.

வெப்பம் போல் தகிக்கும் துயரச் சுழல்களிற்சிக் குண்டு தவிப்போரின் துயர்போக்கிடுவாள். பிறவிப்பெருங்கடலை நீந்திக் கடக்கத் தம் திருவடியைப் புணையாகத் தருவாள். அவள் யார்? அவள் தான் நல்வரங்கள் நல்கிக்காக்கும் பேராண்மை மீனாட்சி.

பக்தர்கள் அறியாமல் குற்றங்கள் புரிந்தாலும் அவர்களை மன்னித்தருளும் மனம்படைத்தவள். நல்லன்பர்கட்கு நல்ல விதியமைத்துத் தந்து வாழ்விப்பவளும் அன்னை அவளே! அவள் எதிலும் வெற்றிபெறச் செய்து முதன்மை நிலை அளிப்பவள்.

''மிகினும் பக்தர் மன்னிக்கும் விதிநீராடி அருளுகவே!''

''வெற்றித் தேவி உளச் செம்மை விதி நீராடி அருளுகவே!''

இடப்பாடலில் வரும் ''பிறவிப் பெருங்கடல்'' என்ற பதம் திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்தில் உள்ள'' பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார் இறைவனடி சேராதார்!'' என்ற திருக்குறளை நினைவூட்டுகிறது. அத்திருக்குறளின்படி இறைவன் - இறைவியின் திருவடியைப் புணையாகத் துணையாகப் பற்றிக் கொண்டால் பிறவிப் பெருங்கடலைக் கடந்து இனிப் பிறவாத நிலையை அடையலாம் என்பது இதயத்தில் இருந்தவேண்டிய நுண்ணிய கருத்தாகும். இதுவே இன்னருட் பெருங்கவிஞர் பெருங்கவிக்கோவின் திடமான கருத்தும் ஆகுமென்று இயம்பலாம்.

காருள் சிவந்த வான்கோட்டில்
　　காட்சி நல்கி மேற்கில்போய்
கவியும் குளிர்ச்சிக் கதிரவன்போய்க்
　　காணா இருளும் வரும்நேரம்

பாருள் எதிர்த்த திசையினிலே
　　பரிபூ ரணநன் நிலவாக
பைஞ்சுடர் பரப்பும் முக்கடலின்
　　பதியாம் குமுரி முனைத்தேவி

நீருள் வையம் மிதக்கின்ற
　　நிலையால் புனித நீராற்றுள்
நீரா டும்எம் நிலைத்தேவி
　　நெஞ்சில் குடிகொள் அருந்தேவி

மேரு மலையுள் சிவன்தேவி
　　விதிநீ ராடி அருளுகவே
வெற்றித் தேவி உளச் செம்மை
　　விதிநீ ராடி அருளுகவே! 8



8. ''செம்மைநிறக் கதிர்வீசிச் செகமெல்லாம் புரக்கும் சீர்படைத்த விண்ணரசே!'' என்று செங்கதிரவனை விளித்து அவனை வணங்குகின்றனர். அக்கதிரவன் காலையில் கிழக்குத் திக்கில் சிவந்த கதிர்களுடன் உதய மாகிறான். அவன் உயர உயர வெப்பமும் அதிகமாகிறது. மாலையில் மஞ்சள் நிறத்துடன் காட்சி தரும் கதிரவன் குளிர்ச்சி தருகிறான் இதயத்திற்கு இதமும் தருகிறான்.

இரவிமறையவே இருள்நிறைகிறது. அவ்விருள் அகலவே மதி உதயமாகிறது. அம்மதியின் உதயம் கண்ட அகிலம் ''தண்ணமுதக் கிரணமதால் தரணிமகிழ்விக்கும் தாய்க்கிரக வான் சுடரே!'' என்று விளித்துப் புகழ்பாடுகிறது. மதிநிறைமதியாகும் போது அதன் பெருமை மிகவும் அதிகரிக்கிறது.

பதினாறு கலைகளோடு விளங்கும் மதியைப் ''பரிபூரணநன் னிலவாக''ப் பாடுகின்றார் பெருங்கவிக்கோ அந்நிலா முக்கடலில் தன் குளிரொளியைப் பரப்புகிறது. அவ்வாறு நிலா பரப்பும் பதி குமரி முனையாகும். அக் குமரிமுனையெனும் பதியில் கன்னியாகுமரி அன்னை முழுமதியாகப் பேரொளி வீசுகிறாள். அக்கண்ணியா குமரித்தாயை வேண்டிப்பாடுகிறது அகிலம்.

நீருள்ளே வையம் மிதிப்பது போல் தோன்றுகின்ற நிலை. இந் நிலையில் அன்னை புனித ஆற்று நீராடுகிறாள். அவள் அடியவர் நெஞ்சைக் கோயிலாகக் கொண்ட அருந்தேவியாவாள் மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமானின் தேவியாவள் அன்னை ''சிவன் தேவி விதி நீராடி அருளுகவே!'' ''வெற்றித் தேவி உளச் செம்மை விதி நீராடி அருளுகவே!'' என்று அம்மை நீராடும் அற்புதக் காட்சியை அருமையாகப் பாடியிருக்கிறார் பெருங்கவிக்கோ.

கதிரவனின் உதயமும் கதிரவனின் மறைவும் வாழ்க்கையின் தோற்றம் - மறைவு இரண்டும் வாய்ந்ததென்பதை உணர்த்துகிறார் பெருங்கவிக்கோ. முக்கடல் சங்கமிக்கும் குமரிமுனையும் அக்குமரிமுனையைத் தாம் வாழும் இருப்பிடமாகக் கொண்டதும் பெருங்கவிக்கோவின் இப்பாடல் இனிமை தெளியவைக்கிறது.

கங்கை சிவனார் தலைமீதில்
காதல் அலைகள் பாய்ச்சுகிறாள்
காவியத் தலைவி நீயாகக்
கண்ட மாற்றாள் தனில்பூத்த

செங்கு முதம்தா மரைநீலம்
செழித்த நறுமலர்ப் பூக்களினை
தினமும் தினமும் அலைக்கையால்
திருவடி வழங்கி வழிபடுவாள்

சங்கப் பன்னிரு திருமுறைகள்
தமிழிசைத் தெய்வ மொழிப்பாடல்
தன்னால் உன்னை வாழ்த்திஅருள்
தன்னல மில்லார் விருந்தினளே

வெங்கொடு மைகள் தீர்ப்பவளே
விதிநீ ராடி அருளுகவே
வெற்றித் தேவி உளச்செம்மை
விதிநீ ராடி அருளுகவே! 9



9. செஞ்சடையன் சந்திரசேகரன் சிவன் முடிமிசை விளங்கும் கங்கையானவள் காதல் அலைபாய்ச்சுகிறாள். காவியத் தலைவியானவளோ அன்னை. கங்கா தேவிக்கும் உமா தேவிக்கும் ஒத்துப் போகாதென்று வேடிக்கையாகப் புராணம் கூறும். ஆயினும் சிவனை இருவரும் அலட்சியம் செய்துவிட முடியாது.

செங்குமுதம், தாமரை, நீலம் ஆகிய நறுமலர்கள் சொரிந்து அலைக்கரத்தால் அன்னையைத் திருவடி போற்றி வழிபடுவாள் அலைமகளான கங்கைத் திருமகள்.

சங்கத் தமிழ்ப் பன்னிரு திருமுறைகள் தமிழிசைத் தெய்வப் பாடல்களாகும். அப்பாடல்களைக் கொண்டு அன்னையை வாழ்த்துவர். அன்னவர் தன்னலமில்லாதவர். அவர்தம் அருள் விருந்தினளாக இருப்பவள் அன்னை. அவள் வெவ்வினைக் கொடுமைகளைத் தீர்ப்பவள் என்று பாடுகிறார் பெருங்கவிக்கோ.

''வெங்கொடுமைகள் தீர்ப்பவளே விதிநீராடி அருளுகவே!''

''வெற்றித் தேவி உளச்செம்மை விதிநீராடி அருளுகவே!''

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் பாடிய தேவாரப் பாடல்கள் ''அடங்கன்முறை'' ஏழுதிருமுறைகள் எனப்படும். தேவாரம், திருவாசகம் தமிழிசைக்குப் பெருந்துணைபுரிவன; அவை செவிக்குத் தமிழிசை விருந்தாகவும் அமைவன. தேவாரம், திருவாசகம் முதலியன சிவாலயங்களில் பாடப்பெறுகின்றன. அதனால் தமிழிசை வளர்ச்சியும் பயன்தருகின்றன.

''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன், தமிழோடிசைபாடல் மறந்தறியேன்'' என்று பாடியிருக்கும் திருநாவுக்கரசரின் தேவாரப் பாடல்கள் இங்கு எண்ணிப் பார்க்கத் தக்கன. இசையோடு தமிழும் வளர்ந்தது,தமிழோடு இசையும் வளர்ந்தது தேவார, திருவாசக ஆசிரியர்களின் காலங்களில் என்று திண்ணமாகக் கூறலாம்.

தன்னலமில்லார்க்கு அருள் அமுதவிருந்தாக இருக்கின்றாள் தாய் மீனாட்சியென்பதால், தன்னலமில்லார் தமையாண்டருள்பவள் அன்னை மீனாட்சி என்று பெருங்கவிக்கோ திடமாகக் கூறுவது சிந்திக்கத்தக்கது.

குடமுழுக் காட்டும் புண்ணியநீர்
குவடாம் கோபுரக் கலசத்தில்
கோடை மழைபோல் பெருக்கெடுக்க
கும்பிடும் அடியார் தலைவணங்க
இடம்விரி ''டெக்சாசு'' கூசுடனிலே
இனிதார் நகரத் தந்தை ''டாம்ரீட்''
இவண்வரு உலகோர் பார்கோயில்
ஏற்புடைத் தலமாய் முறைசெய்ய
நடமிடு மீனாள் பராசக்தி
நனிதரு வரமாய்க் கொண்டாட
நலங்கள் பூக்கும் புனிதபல
நதிநீர் மெய்யில் புரண்டோட
விடமுண் டான்சிவன் காத்தவளே
விதிநீ ராடி அருளுகவே
வெற்றித் தேவி உளச்செம்மை
விதிநீ ராடி அருளுகவே! 10

புண்ணிய நீர் கொண்டு குடமுழுக்காட்டும் குவடாம் கோபுரக் கலசங்களில் உள்ள நீர் கோடைமழைபோன்று பெருக்கெடுக்கிறது. அதை அடியார்கள் கும்பிட்டு இறைவியாகப் பாவித்துத் தலைவணங்குகின்றனர்.

''டெக்சாசு'', ''கூசுடன்'' நகரில், நகரத் தந்தையான ''டாம்ரீட்'' என்பார், காணவரும் உலகோர் ஏற்கின்ற அளவில் அன்னை மீனாட்சி ஆலயத்தை கண்டு தரிசிக்க முறை வழுவாத ஆணைபிறப்பித்தார். வருவோர்கள் நெஞ்சில் ஆனந்த நடஞ் செய்கின்ற பராசக்தி அன்னை மீனாட்சியைத் தங்களின் நல்லவரமாக அன்பர்கள் போற்றிக் கொண்டாடுகின்றனர். அவ்வன்னையைப் பல நீர் நதிகள் அதாவது புண்ணிய ஆறுகளின் நீர் கொண்டு நீராடச் செய்கின்றனர் என்கிறார் பெருங்கவிக்கோ.

விடமுண்ட நீலகண்டப் பெருமானான சிவனைக் காத்த பெருமாட்டியானவள் அன்னை மீனாட்சி. இதனைப் பெருங்கவிக்கோ அழகாகக் குறிப்பிட்டு ''விடமுண்டான் சிவன் காத்தவளே! விதிநீராடி அருளுகவே!'' ''வெற்றித் தேவி உளச் செம்மை விதிநீராடி அருகவே!''

''டெக்சாசு'', ''கூசுடனி''லே அன்னை ஆலயமும், ஆலயம் காணும் திருத்தலமும் முறை யாக அமையச் செய்தவர்களும் சுற்றுலா வரும் உலகோர் காண் தலமாகச் செய்த நகரத்தந்தை ''டாம்ரீட்''எனபவரும் பாராட்டுக் குரியவர். அவரைப் பாராட்டுவது அமெரிக்க நாட்டில் வாழும் அன்பர்களின் கடமையாகும். இதனைக் குறிப்பால் உணர்த்துகிறார் பெருங்கவிக்கோ.

நீராடற் பருவத்தில் அமைந்த, பெருங்கவிக்கோ புனைந்த அமுதப் பாடல்கள்பத்தும் படித்தவர்கள் புனித நதிநீர்களில் நீராடிய புண்ணியப் பலனை அடைவார்கள் என்பது நிச்சயம் அத்துடன் ''கூசுடன்'' மீனாட்சி அம்மன் திருவளுக்குப் பாத்திரம் ஆவர் என்பதும் நிச்சயம்,

# 10. ஊசற்பருவம்

**இஃது இருபத்தோராவது திங்களில் நிகழ்வது. அது பிள்ளையை ஊசலில் ஏற்றி வைத்துத் தோழியர்கள் ஆட்ட ஆடும் நிகழ்ச்சியாகும்.**

மறைகளையே மனதுமகிழ் மாண்புவடம் ஆக்கியவள்
மதியையும் கதிரையும் விழியாக்கினள்!
மானமருள் ஞானஒளி மோனநிறை கொள்கைகளால்
மாறுபாடு வேறுபாடு அழிவாக்கினாள்!

நிறைவுதரு நிகழ்வுகளை நீள்நிலத்தின் மாந்தர்க்கே
நிதிவளர்க்கப் புடம்போடும் கனலாக்கினாள்
நீண்டநெடுஞ் சாலைவழிச் சோலைவழிக் கற்பகமாய்
நேரியநல் எண்ணங்கள் உயிர்ப்பாக்கினாள்!

உறைபதிகள் உலகெல்லாம் உறவுதமிழ் மனிதநேய
உரிமைஈழ விடுதலைகொள் புலியாக்கினாள்
உயிர்த்தமிழாய் வாழ்வியலில் வளமிகுந்த நால்வர்களின்
ஓதுதமிழ் இசைஅமுதம் செவிதேக்கினாள்!

பொறையுடைமைப் புதுமதுவில் புரண்டுஎழு பூமகளே
பொன்னூசல் ஆடி அருளே!
பொதுமைமலர் உரிமைவளர் புதுமைஅறி நாட்டாளே 1
பொன்னூசல் ஆடி அருளே!



1. மனம் மகிழும் வண்ணம் மறைகளையே மாண்பொளிரும் வடம் ஆக்கிக் கொண்டவள் சூரியன், சந்திரரைத் தம் இருகண்களாகக் கொண்டவள்! மாறுபாடு, வேறுபாடில்லாமல் அருள்மானமும் அபிமானமும் ஒளிதரு ஞானமும் மோனமும் நிறைந்த கொள்கை கண் கொண்டவள்!

இம்மாநிலத்தில் உறையும் மாந்தர் தமக்கே நிறைவளிக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் புடம்போடும் நெருப்பாக்கிக் கொண்டவள். நெடுஞ்சாலைகளில் நிலவும் சோலைகளையெல்லாம் கற்பகச் சோலைகளாக்கிக் கொண்டவள். சீரிய நேரிய நற் சிந்தனைகள் செயற்படும் வண்ணம் உயிர்ப்பாக்கிக் கொண்டவள்.

உலகமெல்லாம் நிறைந்த பதிகளில் தமிழீழமும் நல்லுறவும் மனித நேயமும் ஓங்கச் செய்து அனைவரையும் உரிமை கொண்டு உலவும்படியான விடுதலையால் புலியாக்கிக் கொண்டவள். தமிழே உயிரென்று கொண்ட தமிழர்தம் வாழ்வியலில், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியவர்கள் பாடிய தமிழ்ப் பாடல்களைத்தமிழிசை அமுதமாகத் தம்மிருசெவிகள் பருகும் வண்ணம் தேக்கிக் கொண்டவள்.

அத்தகையவள் தான் அங்கயல் விழி அம்மை. அவள் தான் பொறையை உடைமையாகக் கொண்டவள். புதுமதுவிற் புரண்டெழும் பூமகள் என்று குறிப்பிடுகிறார் புவியெலாம் போற்றும் பொற்கவிஞர் பெருங்கவிக்கோ.

''பூமகளே பொன்னூசல் ஆடி அருளே!''

பொதுமையும் புதுமையும் உரிமையும் என்றும் நிறைந்து ஒளியோங்கித் திகழும் அமெரிக்க நாட்டிற் கோயிற் கொண்டவளே! தேவி மீனாட்சியே!

''ஒளி நாட்டாளே! பொன்னூசல் ஆடி அருளே!''

உலகமெல்லாம் உறவாக்கிக் கொள்ள வேண்டுமென்றால், அது மனித நேயத்தாலும் வள்ளலார் குறிப்பிட்ட ஆன்மநேய ஒருமைப்பாட்டாலும் தான் முடியும் என்று பெருங்கவிக்கோ உறுதிபடக் கூறுவது சிந்தித்து ஏற்கத்தக்கது.

அம்மையின் அருமை பெருமைகளை இப்பாடலில் மிக அழ குறப் பாடியுள்ளார் அமுதத் தமிழ்ப் பெருங்கவிஞர் பெருங்கவிக்கோ. உள்ளத்தெழும் சீரிய சிந்தனைகள் செயல் அளவில் நிறைவேறி உயிர்ப்புடன் இயங்கவேண்டும்என்று அவர் உரைப்பதையும் மனத்திற் கொள்ள வேண்டும்.

படைப்புகளுக் கெல்லாமே மூலமான சிவபெருமான்
 படைப்புக் கலைகோடி கோடிமேல்
பலவகையாம் உயிர்களுடைப் பார்க்குமுகம் வைத்தொழுகு
 பார்க்கவொணாப் படைப்பாள னிடத்தினில்

உடைமையென உளநான்கு முகிலினங்கள் தங்கியுள
 ஒளிதளிர்கொள் மாமரத்துச் சோலையிலும்
உலவிவரு கார்மேக உரிமையொடு திரிந்ததனால்
 உளஅந்தச் சோலைசிவ பெருமானுடை

நடைதனிலே ஒத்துளதால் நன்னீல மணிக்குயில்கள்
 நம்பிஅந்தக் காமனையே அழைத்துசிவன்
நன்றுபொருத அமைந்ததுபோல் நனிகுயில்கள் முழக்கமிடும்
 நாடஉள இயற்கைவள நாட்டாளே

புடைமருவு பச்சைப்பசும் மரகதத்தாய்ப் புண்ணியளே
 பொன்னூசல் ஆடி அருளே!
பொதுமைமலர் உரிமைவளர் புதுமைஅறி நாட்டாளே
 பொன்னூசல் ஆடி அருளே! 2



2. படைப்புக்களுக்கெல்லாம் ஆதிமூலகாரணன் ஆனவன் பரம்பொருளான சிவபெருமான். அவன் படைப்புக்களோ எண்ணிலாப் பல கோடி, கோடி, கோடி, உயிரினங்களும் அப்படியே.

அத்தகைய சிவபெருமானிடத்தில் நால்வகைப்பட்ட முகிலினங்கள் தங்கியுள்ளன. ஒளி மேவிய மாமரத்துச் சோலைகளில் கருமேகங்கள் உரிமையொடு உலவின. அச்சோலை சிவபெருமானுடைய நடைக்கு ஒத்துள்ளது. அப்பெருமான் நன்று எண்ணம் அமைந்தாற்போன்று நீலமணிக்குயில்கள் இசைபாடி முழக்கமிடுகின்றன. அவ்வாறு முழக்கமிடும்படியான இயற்கை வளநாடான அமெரிக்காவை இருப்பிடமாகக் கொண்டவள் அன்னை மீனாட்சி.

 பக்கமிரண்டிலும் பச்சை மிளிரத்திகழும் மரகதத்தாய்ப் புண்ணியளே!
 ''பொன்னூசல் ஆடி அருளே!''

 பொதுமையும் புதுமையும் உரிமையும் மலர்கின்ற ஒளி நாட்டினளே!
 ''பொன்னூசல் ஆடி அருளே!''

படைப்புக்களுக்கு மூலமானவள் சிவபெருமான். அப்பெருமானின் திருவுள்ளப்படியே அனைத்தும் நிகழ்கின்றன. சிவபெருமானின் திருவுளம் எப்படியோ அப்படியேதான் அப்பெருமானின் ஆவியும் தேவியும் ஆன சிவகாம சுந்தரியின், அங்கயற்கண் அம்மையின் திருவுளம் என்பது தெளிவாகிறது. இத்தெளிவினை இனிது தருகிறது பெருங்கவிக்கோவின் இப்பாடல் பொதுவுடைமை நெறி புவனமெலாம் பரவவேண்டும் என்பதும் அவரது எண்ணம் ஆகும் என்பது திண்ணம்.

உழுதுழைக்கும் பழமையொலாம் உருண்டோடக் காலத்தால்
ஒவ்வாத வகையான நிலைநீக்கி
உண்டிகொடுத் தாரன்றோ உயிர்கொடுத்தார் உன்பதற்கோர்
உன்னத இலக்கான உழவுதொழில்

விழுதுவிடும் வகையாக விஞ்ஞான அறிவியல்சேர்
விழைவுதரும் கருவிகளால் வேண்டியநல்
விளைவுசெயும் போதினிலே விளைபயிருள் பல்வகைசேர்
விதவிதமாயப் புல்பூக்கள் தோண்டிகளை

பழுதிலாதே பறித்தெடுத்தல், பரம்பொருள் நம்தாய்கணவர்,
பற்றுபாச ஆசைவெறிப் பந்தங்களில்
பதிதவித்தே போகாமல் பதிஉளத்தின் குறைகுற்றம்
பறித்தெடுக்கும் தன்மையதை ஒத்திருக்கும்

பொழுதெல்லாம் கடமைபுரி பொன்மனத்து நாட்டாளே
பொன்னுசல் ஆடி அருளே!
பொதுமைமலர் உரிமைவளர் புதுமைஅறி நாட்டவளே
பொன்னூசல் ஆடி அருளே! 3



3. மாடு கட்டி ஏர்பூட்டி நிலம் உழும் காலம் மாறிவிட்டது. காலத்தால் ஒவ்வாத நிலை போக்கப்பட்டுவிட்டது. நிலம்உழ இப்போது ட்ராக்டர் பயன்படுத்தும் காலமாகிவிட்டது. இக்கால நிகழ்வுகளை இப்பாடலில் வெளிப்படுத்துகிறார் பெருங்கவிக்கோ.

உண்டி கொடுத்தார் உயிர்கொடுத்தார் என்று மணிமேகலை இலக்கியம் கூறுகிறது உண்டியான உணவு பெற உழவு பெற உழவுத்தொழில் உதவுகிறது. ''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'' என்றும், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்றும் தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறுகிறார். அவ்வுழவுத்தொழில் செவ்வனே நடைபெற இன்று விஞ்ஞானம் தன் அறிவியல் மேன்மையினால் உழவிற்குரிய கருவிகளைத் தந்துள்ளது.

வயல்களில் பலவகைப் பயிர்கள் விளைகின்றன. களைகள் பறிக்கப் படுகின்றன. புற்கள் தோண்டப்ப்டுகினறன.

இச்செயல்கள் பரம் பொருட் சக்தியான அங்கயற்கண் அம்மையின் திருக்கணவரான சிவபெருமான் அடியார்களை உலகப்பற்று, பாசம், ஆசை வெறிப் பந்தங்கள், குற்றங்குறைகள் ஆகியவற்றினின்றும் விடுபடச் செய் வதை விளக்குவதாக அமைந்துள்ளன.

பொழுதெலாம் வீணாகாதவண்ணம் கடமை புரிவதில் மனமும் நாட்டமும் கொண்ட பொன்னாடான அமெரிக்க நன்னாடுடையவளே! மீனாட்சித்தாயே!

''பொன்னூசல் ஆடி அருளே!''
''பொதுமையும் புதுமையும் உரிமையும் வளர்கின்ற ஒளி நாட்டவளே!
''பொன்னூசல் ஆடி அருளே!''

இப்பாடலில் உணவிற்கு ஆதாரமாக இருப்பது உழுதொழிலாகும் என்றும், உண்டி கொடுத்தார் உயிர்கொடுத்தார் என்றும் சுட்டிக்காட்டி உணர்த்துகிறார் பெருங்கவிக்கோ.

அதிக அளவில் உலகப்பற்றும் பாசமும் ஆசைவெறிப் பந்தங்களும் உடையவர் துயரங்கட்கு ஆளாவர். அத்துயரங்களை அகற்றி ஆட்கொண்டருள்பவள் அன்னை சிவசக்தியே. எனவே, அவள் அருளைப் பெற்றுய்ய வேண்டியது, பந்தபாசங்களினின்றும் விடுபட வேண்டியது அறிவுடைமாந்தரின் அருங்கடமையாகும் என்று உணர்த்துகிறார் பெருங்கவிக்கோ.

எல்லாஅப் பொருள்களிலும் இருந்துஅர சோச்சுகின்ற
எம்பெருமான் சிவபெருமான் இதயதேவி
இயக்குகிறாள் இறைவனையும் இறைவிஅவள் என்பதுபோல்
இடைவிடாதே ஊஞ்சலாட்டும் தோழிகளே!

அல்லலறு பெருமாட்டி ஆடுகின்ற அவ்வூஞ்சல்
ஆடாதே அயராதே அமர்ந்திருத்தல்
அடடா ஓ! அழகென்னே! அருளென்னே எனஅமரர்
அண்டசராசர மெல்லாம் கண்டுமகிழ்

செல்வதுவும் வருவதுவும் திகழூஞ்சல் வீற்றஅவள்
திகட்டாத வடிவழகைச் சிவன்கண்டே
திருவுளத்தின் உவகையினால் தீட்டிக் களித்தாட
தேவிமட்டும் ஆடாதே செவ்விஅருள்

பொல்லாங்கே இல்லாத பூவுலகம் வாழ்விப்பாள்
பொன்னூசல் ஆடி அருளே!
பொதுமைமலர் உரிமைவளர் புதுமைஅறி நாட்டாளே
பொன்னூசல் ஆடி அருளே! 4



4. பொருள்கள் யாவற்றிலும் நிறைந்து நிலைபெற்றிருந்து புண்ணிய ஆட்சி புரியும் சிவபெருமானின் சிந்தையில் உறைபவள் தேவி மீனாட்சி.

ஐயனையும் இயக்குகின்ற அம்மை இவள் என்பதுபோல் இடையறாது தோழிமார்கள் ஊஞ்சலாட்டிக் கொண்டிருக்கின்றனர்.

அல்லல்களைப் போக்குகின்ற அன்னை ஆடுகின்ற ஊஞ்சல் ஆடாது, அசையாது, அயராது இருப்பின், அதன் அழகென்னே! அருளென்னே! என்று அமரரும் அண்ட சராசரமும் வியக்கும் படியாகவும், கண்டுகளிக்கும் படியாகவும்வுள்ளது.

ஊஞ்சல் செல்வதுவும், வருவதுமாக இருக்கிறது. அவ்வூஞ்சலில் வீற்றிருக்கும் அன்னையின்வடிவழகை அவ் அன்னையின் நாயகனான சிவபெருமான் தம் திருவுளத்தில் எழுதிப் பார்த்துக் கொண்டிருக்கிறார். உள்ளத்தில் எழுந்த பேருவகையினால் சிரித்த வண்ணம் குலுங்கி ஆடு கிறார். அவர் தில்லையில் 'காலைத் தூக்கி நின்றாடும் நடராசப் பெருமான் அல்லவா? அவரின் இயல்பு ஆடுவது தானே? அவர் ஆடினாரே தவிர, தேவி மட்டும் ஆடாது அருள் சுரந்த வண்ணமிருக்கின்றாள்.

பொல்லாங்கே இல்லாதபடியாக இப்பூவுலகை வாழவித்துக் கொண் டிருப்பவள் பொலிவோங்கும் தாய் மீனாட்சியே!

''பூவுலகம் வாழ்விப்பாள் பொன்னூசல் ஆடி அருளே!''

பொதுமையும் புதுமையும் உரிமையும் வளர்கின்ற பொன்னொளிர் ''நாட்டாளே பொன்னூசல் ஆடி அருளே!''

''ஆட்டிவைக்கின்றபடி ஆடிடுமே உலகம்!'' என்றபடி ஆடும் பெரு மானான இறைவன் உலகை ஆட்டிவைக்கின்றான். அவ்வாறு ஆட்டி வைக்கின்ற ஆண்டவனான தாண்டவனையும் அவனுடைய நாயகியான தேவி ஆட்டி வைக்கிறாள், இதனைப் பெருங்கவிக்கோ ''இயக்குகிறாள் இறைவனையும் இறைவியிவள்'' என்ற தமது பாடல் மூலம் விளக்குகிறார்.

இறைவன் ஆட இறைவி ஆடுகிறாள். இறைவி ஆட இறைவன் ஆடு கிறான். இவ்வாறு இருவரும் ஆடிக்கொண்டிருப்பதால்தான் இவ்வையம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் தெளிவுபடுத்துகிறார் பெருங்கவிக்கோ.

களபமுலைக் காரிகையர் சீரிளமைக் குமரருடன்
காதலுறும் அணைப்பிணைப்பின் ஆசைசுகம்
கட்டுக்குள் கட்டிச்செம் பட்டுக்கூந் தல்சிவந்த
களிநகைக்கும் அதரங்கள் தனில்பதித்தே

இளமைதரும் இன்பத்தை இதழ்சுவைத்தே உவப்படைய
எங்கெங்கும் இயற்கைவளம் மீக்கூற
எழிலுக்கும் பொழிலுக்கும் இயற்கைக்கும் செயற்கைக்கும்
ஏற்றம்சால் கூற்றம்வெல் ஆற்றல்சேர்

வளமருவு சோலைசெறி வையகமே வரஆவல்
மனமொழிமெய் மூன்றுநிலை யும்ஒன்றி
வாழ்வியலைச் சவைக்கின்ற வருபேதம் பாராத
வாஞ்சைமிகு மாந்தர்வாழ் அமெரிக்கா

புளகிதமாய் வாழ்கின்ற பலஇனத்தார்க்(கு) அருள்தேவி
பொன்னூசல் ஆடி அருளே!
பொதுமைமலர் உரிமைவளர் புதுமைநெறி நாட்டாளே
பொன்னூசல் ஆடி அருளே! 5



5. வாசமிகு களபமுலைகள் வாய்ந்த காரிகையர்கள் கட்டிளங் காளையர்களுடன் காதல் விளையாட்டுக்கள் ஆடுகின்றனர். இருதிறத்தினரும் ஒருவருக்கொருவர் இனியமுத்தம் கொடுத்தும் இதழ் அமுதம் பருகியும் களிப்பெய்துகின்றனர். இருபாலாரும் இளமையின்பத்தைச் சுவைத்து இதயம் மகிழ்கின்றனர், இக்காட்சியை அமெரிக்க நாட்டிற் காணலாம்.

எங்கெங்கும் இயற்கை வனங்களும் எழிற்பொழில்களும் நிறைந்திருக்கின்றன, இது இயற்கை, அது செயற்கை என்று கூறும் வாழ்வின் இன்பத்தைச் சுவைக்கின்றனர் மக்கள். பேதம் என்ற பேச்சுக்கே அவர்களிடம் இடமில்லை.

மாந்தர்கள் மனவேறுபாடு எதுவுமின்றி மகிழ்வுடன் வாழ்கின்ற நாடு அமெரிக்கா. பலவகைப் பட்ட இனத்தவர்களும் இணக்கமுடன் இதயமொன்றி வாழ்கின்றனர் அமெரிக்காவிள் அவ்வாறு வாழ்பவர்களுக்கு அன்புடன் அருள்செய்கின்றாள் பேரன்னை மீனாட்சி

''பல இனத்தவர்க்கு அருள்தேவி பொன்னூசல் ஆடி அருளே!''

பொதுமையும் புதுமையும் உரிமையும் நெறியும் ஒருங்கே வளர்கின்ற 'நாட்டாளே ''பொன்னூசல் ஆடி அருளே!''

குமரரும் குமரியரும் கூடிக்குலவிக்காதல் புரிந்து களிப்புடன் வாழ்கின்றனர். அவர்களிடம் சாதி மதப் பாகுபாடு இல்லை, இனப்பாகுபாடு இல்லையென்கின்றார் பெருங்கவிக்கோ.

அமெரிக்க நாட்டில் மாந்தர்கள் அன்புடன் வாழ்வதை ''வாஞ்சைமிகு மாந்தர் வாழ் அமெரிக்கா'' என்று குறிப்பிடுகின்றார் பெருங்கவிக்கோ - மாந்தர்கள் அன்புடன் வாழும் நாடே வையத்தில் ஓங்கியொளிரும் உயர் நாடாகும் என்பதில் ஐயமில்லை.

பிள்ளைமதி போல்நெற்றி பெருவனப்பு மங்கையர்கள்
பெரிதினும் பெரிதான பல்லடுக்குப்
பீடுறும் அம்மேன்மாடச் சாளரத்தின் அருகிருந்தே
பிறைமதிதம் நெற்றிபோல் உளகண்டு

வெள்ளொளிசெய் அம்மதியைப் பிடித்துப்பின் ஒப்புநோக்கி
மெல்லவேபின் வானத்தில் விட்டெறிவர்
வீதிஉலா வருபருவ வெற்றிஉலா வந்ததுபோல்
வெட்கம்அச் சம்இன்றி உலாவருவார்தம்

கொள்ளைஅழகார்ந்த நவநாரியர்கள் நடமாடும்
குவிஎழிலைப் புவிவாழும் எக்கவியும்
கூறிடவும் இயலாத மாறுபாடில் சுதந்திரத்தைக்
கொண்டபுகழ் நாடுஅமர் குளிர்நாட்டுப்

புள்ளினமும் அமைதியுடன் புரிகடமை செய்நாடு
பொன்னூசல் ஆடி அருளே!
பொதுமைமலர் உரிமைவளர் புதுமைஅறி நாட்டவளே
பொன்னூசல் ஆடி அருளே! 6



6. பிள்ளைமதி பிறையைக் குறிக்கும் பிறையைப் போன்ற நெற்றி வாய்ந்த பெருவனப்புடைய மங்கையர்கள் பல அடுக்கு மேன்மாடிகளிலிருந்து சாளரத்தின் அருகில் இருந்தவண்ணமே மதியின் பிறைக்கீற்றைப் பார்க்கின்றனர். அவர்கள் தங்கள் பிறைநெற்றியும் அதாவது நெற்றிப் பிறையும் வான் மதியின் வளைந்த பிறையும் ஒத்திருக்கக் காண்கின்றனர் என்று கூறுகின்றார் பெருங்கவிக்கோ.

வெண்ணிற ஒளி வீசும் மதியைப் பிடித்துஒப்பு நோக்கிய பின் மெதுவாகவே மெல்லவே வானத்தில் விட்டெறிவர். நிலாவின் வீதி உலாவான வெளியில் தோன்றும் அது வெற்றி உலாவாகவே அமையும்

நாணம், அச்சம் ஏதுமின்றி உலாவரும் கொள்ளையழகு வாய்ந்த நவயுக நாரியர்கள் சுதந்திரத்துடன் நடமாடும் நாடு அமெரிக்கக்குளிர்நாடு. மாறுபாடு காணாத மாநாடு அமெரிக்கா அக்குளிர் நாட்டில் உள்ள புள்ளினங்களும் அமைதியுடன் தங்கள் பணிகளைத்தவறாமல் கடமை உணர்வுடன் ஆற்றிவருகின்றன. அத்தகைய அமெரிக்க நாட்டில் ஆலயங் கொண்டுள்ளாள் அன்னை மீனாட்சி.

பொதுமறையும் புதுமையும் உரிமையும் பொலிகின்ற "நாட்டவளே பொன்னூசல் ஆடி அருளே!" மங்கையின் நெற்றிப் பிறையும் மதியின் பிறையும் ஒத்திருப்பதையும் சுட்டிக்காட்டிப் பெருங்கவிக்கோ" பிறை மதிதம் நெற்றிபோல் உளகண்டு" என்ற பாடல்வரியால் விளக்குகின்றார்.

தாயுமானவர் தமது பாடல் ஒன்றில் பிள்ளைமதி என்ற பதத்தை முன்வைத்துப் பாடியுள்ளார்.

"பிள்ளைமதிச் செஞ்சடையான் பேசாப் பெருமையினான்
கள்ளவிழும் பூங்கொன்றைக் கண்ணியான் - உள்ளபடி
கல்லாலின் கீழமர்ந்து கற்பித்தான் ஓர்வசனம்
எல்லாரும் ஈடேறவே!"

இப்பாடல் தட்சிணாமூர்த்தி மீது பாடப் பெற்றுள்ளது. தாயுமானவரின் இவ்வெண்பா தட்சினா மூர்த்தியின் பெருமையை விளக்குகிறது. இதைச் சிறந்தையிற் கொள்வோம்.

ஆச்சரியத் தாச்சரியம் அன்றன்றே நிகழ்வதனால்
அனைத்துமே புதுமைக்கும் புதுமையாக
அறிவியலும் பொறியியலும் அனைத்தியலும் ஒருங்கேதான்
அவனிக்கே வழிகாட்டி விழிநோக்க

தீச்சுடர்போல் நிறமுடைய செவ்விந்தி யர்பூமி
திறம்உரமார் கறுப்பர்களும் உரிமையுடன்
திசையெட்டும் வந்தடைந்த தேசமெலாம் ஒருநாட்டில்
சேர்ந்ததுபோல் உளஒருநல் திருநாடு

வீச்சுடைய அழிவுதரு எறிகணைகள் அணுகுண்டு
வீறுபடைக் களங்களெலாம் பெருகவேதான்
வினைஅழிவை மாற்றுகிற வியனுலகு வாழ்விக்கும்
வேண்டமைதி **''கிளிண்டன்''** தலைமைமுயலும்

மூச்சுவிட முடியாத முறைகளிலே ஐம்பதுநல்
முன்னேறும் மாநிலங்கள் எல்லாமே
முழுமைச்சம உரிமையுடன் ஒழுங்குநட் சத்திரங்கள்
முனைந்துதழுவிக் கொடிகள் அசைநாட்டில்

பூச்சூடா தேவாழும் பூவையர்கள் பொன்னாடு
பொன்னூசல் ஆடி அருளே!
பொதுமைமலர் உரிமைவளர் புதுமைஅறி நாட்டவளே
பொன்னூசல் ஆடி அருளே! 7





7. அன்றன்று ஆச்சரியங்கள் பல நிகழ்ந்து கொண்டிருக்கின்ற. விந்தைப் புதுமைகள் விளைந்த வண்ணமிருக்கின்றன.

அறிவியல், பொறிஇயல் ஆகிய அனைத்தியல்களும் ஒருங்கமைந்து அவனிக்கே வழிகாட்டியாக உள்ளன.

செந்தீச் சுடர் போல் நிறமுடையசெவ்விந்தியர்பூமியில் திறமிக்க உள்ளத்தின் உரம் மிக்க கறுப்பர்களும் உரிமையுடன் வாழ்கின்றனர்.

திசையெட்டும் வந்தடைந்த தேசங்கள் யாவும் திரண் டொரு நாட்டிற் சேர்ந்தாற்போன்ற தொரு நல்ல திருநாடு. அது அமெரிக்கப் பெருநாடு.

அழிவைத்தரும் வீச்சுடைய எறிகணைகள், அணுகுண்டு ஆயுதங்கள் ஆகியவற்றால் உண்டாகும் அழவை அறவே மாற்றி, அகிலத்தில் அமைதி வாழ்வு உண்டாக அமெரிக்க அதிபர் கிளிண்டன் முயலுகின்றார் என்று பெருங்கவிக்கோ குறிப்பிடுகிறார்.

மூச்சுவிடுவுதற்குக் கூட நேரமில்லாது முன்னேறும் தீவிர எண்ணங் கொண்டு முனைந்து நிற்கும் நல்ல ஐம்பது மாநிலங்கள் முழுச்சம உரிமையும் பெருமையும் கொண்டு ஒழுங்கு நட்சத்திரங்கள் போல் ஒளிவீச, கொடிகள் தழுவி அசைகின்ற நாடு அமெரிக்க நாடு. அந்நாடு பூவையர்கள் பூச்சூடாதே வாழும் பொன்னாடு. அந்நாட்டில் வாழ்கின்ற அன்னை மீனாட்சியைப் ''பொன்னூசல் ஆடி அருளே!'' என்று பாடுகிறார் பெரு மிதத்துடன் பெருங்கவிக்கோ.

பொதுமையும் புதுமையும் உரிமையும் பொலிகின்ற அறிவொளிவீசும் ''நாட்டினளே பொன்னூசல் ஆடி அருளே!''

அழிவைத்தரும் அணுகுண்டுச் சோதனை அறவே உலகில் அகல வேண்டும், அமைதி உண்டாக வேண்டும், அதனால் மகிழ்வு நிறைந்து மக்கள் மங்களமாய் வாழ்வர். இது பெருங்கவிக்கோவின் பெருவிருப்பம் என்பதை ''வீச்சுடைய அழிவுதரு எறிகணைகள் அணுகுண்டு வீறுபடைக் களங்களெலாம்'' என்ற கவிதை மொழி இனிது விளக்குகிறது.


செவ்விந்தியரும் கறுப்பரும் சேர்ந்து உரிமையுடனும் ஒற்றுமை யுடனும் வாழ்வது சிந்தையில் மகிழ்ச்சியைத் தருகிறது. இது மிக நல்ல தொரு திருப்பம் ஆகும்.

தேவாரத் தேன்தமிழில் ஆவலுறும் எம்பெருமான்
செந்தமிழ்க்கோ சங்கம்அமர் நம்பெருமான்
தீயினிலும் நீரினிலும் அழியாதே நிலைபெற்ற
தீந்தமிழ் நூற்களெலாம் பணிந்துபாட

பாவாரப் பாமாலை பணிந்தெழுதி வந்தஅபி
ராமி பட்டர் பைந்தமிழைத் தானமர்ந்தே
பண்ணிசையில் பழகிஅருள் தமிழ்பாடச் செவிகேட்கும்
பரமேசு வரித்தாயின் பார்வையாலே

நாவாரப் பாடுகின்ற நனிபக்திப் புலவரெலாம்
நானிலத்தின் ஒளிமயமாம் வாழ்வுதனை
நன்றருளும் நறுந்தேவி நன்றிஎதிர் பாராதாள்
நன்றுதரக் கூசுடன்வாழ் நடைத்தேவி

போவாரும் வருவாரும் புகழ்நாடு அமர்ந்தவளே
பொன்னூசல் ஆடி அருளே!
பொதுமைமலர் உரிமைவளர் பொதுமைஅறி நாட்டவளே
பொன்னூசல் ஆடியருளே! 8





*8. மூவரின் தேன்போன்றினிக்கும் செந்தமிழ்த் தேவாரப் பாடல்களையும் வான்கலந்த மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்களையும் ஆவலுடன் கேட்பவர் சிவபெருமான். அவர் புலவர்களுடன் மதுரையில் சங்கத்தில் அருந்தமிழ்ப் பண் ஆய்ந்தவர்.*

தீயிலும் நீரிலும் அழியாத வண்ணம் திருஞான சம்பந்தரின் பாடல் எழுதப்பெற்ற ஏடு இரு சமயத்தார்களுக்கிடையில் ஏற்பட்ட கடும்போட்டியில் வெற்றிபெற்றது.

திருக்கடவூர் அபிராமிபட்டார் தேவி அபிராமியிடம் தீவிரபக்திகொண்டவர். தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னர் ''இன்று என்ன திதி?'' என்று அபிராமி பட்டரை வினவினார். பட்டர் உடனே 'பௌர்ணமி என்று பகர்ந்தார். ஆனால், அன்று நிறை அமாவாசை. அமாவாசையைப் பௌர்ணமி என்று அபிராமிபட்டர் கூறிய காரணத்தினால் ஆகாயத்தில் அன்று முழுமதியை அதாவது பூரணச் சந்திரனைக் காட்டவேண்டும். இல்லையெனில் பட்டர் அரச தண்டனைக்கு ஆளாக வேண்டும் என்பது அரசாணையாக, உடனே அபிராமி அன்னையை வேண்டி அவள் மீது அந்தாதி பாடினார். அந்த அந்தாதி அபிராமியின் அளவிலாப் பெருங் கருணையைப் போற்றிவிளக்குகிறது. அவ் அந்தாதி அபிராமி அந்தாதியானது. ''அவ் அந்தாதி0யில் வரும் ''விழிக்கே அருளுண்டு'' என்ற பாடலைக் கேட்டதும் தம் தோட்டினைக் கழற்றி அபிராமி அன்னை ஆகாயவீதியில் எறியவே பௌர்ணமி சந்திரன் தன் பூரண ஒளியுடன் தோன்றினன். இந்த அதிசயத்தைக் கேள்வியுற்ற, நேரில் முழுமதியையும் கண்ட அரசர்சரபோகி பட்டரிடம் மன்னிப்பு வேண்டினார் எனவே, அபிராமிபட்டரின் அமுதத் தமிழ்ப் பாடல்களைக் கேட்டு அருள்புரிந்தவள் பரமேசுவரித்தாயான அபிராமி தேவி.

நாவாரத் தேவாரமும் திருவாசமும் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் திருவருட்பாவும் பாடுகின்ற மிகுந்த பக்திகொண்ட புலவர்களுக்கு மகிழ்வாழ்வும் ஒளிமயமான பொற்காலமும் நல்கியவள். நன்றி எதிர்பாராது நன்மையே தரக்கூடியவள் கூசுடன் நகர் வாழ்கின்ற நடைகொண்ட நாயகியான தேவி மீனாட்சி.

போவாரும் வருவாரும் அங்கேயே நிலையாகத் தங்குவாரும் போற்றிப் புகழும் அமெரிக்க நாட்டில் அமர்ந்தவளே!'' பொன்னூசல் ஆடி அருளே!''

பொதுமையும் புதுமையும் உரிமையும் மலர்கின்ற அறிவுடையோர் வாழ்கின்ற ''நாட்டவளே பொன்னூசல் ஆடி அருளே!''

இப்பாடலில் அபிராமியின் சரித்திரத்தை உள்ளடக்கிப் பாடியுள்ளார் பெருங்கவிக்கோ

இந்த அபிராமி அந்தாதியை அம்பாளின் பக்தர்கள் பக்தியுடன் பாடியும் பாராயணம் செய்தும் பலன் அடைந்து வருகிறார்கள். சிவாலயங்களில் அம்பாளின் சந்நிதிகளில் ஓதுவார்கள் அபிராமி அந்தாதியின் பாடல்களைப் பாடுவதை இன்னும் கேட்டு இன்புறலாம்.

இப்பாடலைப் படிக்கும்போது கூசுடன் நகர் மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ்ப் பாடிய அருளுக்கு முற்றிலும் அவர் பாத்திரமானவர் என்று உறுதியாகக் கூறலாம்.

திருக்கோயில் அங்கங்கே செதுக்கிய அச்சிலைகள்தாம்
திகழ்கண்கள் இமைக்காத நிலைதன்னை
தேவமாதர் வந்துகண்டு தங்களுருவாய்த் திகைத்தே
தேர்ந்தேபின் அவைசிலைகள் எனத்தேறி

அருங்கலையின் வல்லவர்கள் அரிதுவடி சிற்பிகளின்
ஆக்கமுடைத் திறன்எண்ணி அதிசயித்தே
அறம்போற்றும் திறம்போற்றும் கலைபோற்றும் தேவநாடு
ஆங்கெழுந்து தான்சென்று அணிஅணியாய்

வருகைதர தேவிமூல வனப்புக்கு வனப்பாக்கும்
வடித்தெடுத்த உன்னதத்தின் உன்னதமாம்
வகுத்தகலை தொகுத்தசிலைச் சிற்பிகளின் கைவண்ணம்
மாமதுரை மீனாட்சி கோயிலென்று வியப்புயிர்க்கும்

பொருபூங் கோயிலுறை அம்மைபூ வுலகநாயகியே
பொன்னுஞ்சல் ஆடி அருளே!
பொதுமைமலர் உரிமைவளர் பொதுமைநெறி நாட்டவளே
பொன்னூசல் ஆடி அருளே! 9



9. அமெரிக்க மீனாட்சி அன்னையின் திருக்கோயிலில் செதுக்கப் பெற்ற சிங்காரத் தெய்வச் சிலைகள் திருக்கண்கள் இமைக்காமல் இருக் கின்றன அச்சிலைகளைத் தேவமாதர்கள் தங்களின் அழகுருவாகக் கண்டு திகைக்கின்றனர். பின்னர் அவை வெறுஞ்சிலைகள் எனத் தேறுகின்றனர்.

சிற்பக் கலைவல்லோர் திறம்பட அமைத்த, வடித்த அரிய தெய்வச் சிலைகளைக் கண்டு அதிசயித்திருக்கின்றது சீரிய உலகம்.

அறம்போற்றும் அருங்கலைத் திறம் போற்றும் தேவநாட்டினர் அணி அணியாய்த்திரண்டு, தேவி மீனாட்சியின் திருக்கோயிலுக்குத் திருமதுரைக்கு வருகை தருகின்றனர். அன்னை மீனாட்சி வனப்புக்கு வனப்பானவள், சிறபக்கலை வண்ணம் சிறக்க மாமதுரை அன்னை மீனாட்சியின் திருவடிவை அழகுறச் சமைத்த சிற்பிகளின் கைவண்ணத்தை வியக்கிறது வியனுலகம்.

மதுரையில் பூங்கோயில் கண்டு மாண்புடன் திகழும் பூவுலக ''நாயகியே பொன்னூசல் ஆடி அருளே!''

பொதுமையும் புதுமையும் உரிமையும் பொலியும் நெறிநாட்டவளே பொன்னூசல் ஆடியருளே!''

இப்பாடலில் பெருங்கவிக்கோவின் இனிய கற்பனைக்கவித்திறம் வெளிப்படுகிறது.

அன்னையின் திருக்கோயில் அமைந்த உயிருள்ள தெய்வச் சிலை களைப் பெருங்கவிக்கோ நம் கண் முன் காட்டி அவற்றைப் பக்தியுடன் வணங்கச் செய்கிறார் பெருங்கவிக்கோ.

சிற்பிகளால் வழக்கப்பெற்ற ''தேவி மூல வனப்புக்கு வனப்பாக்கும் வடித்தெடுத்த உன்னதத்தின் உன்னதாமாய் வகுத்தகலை தொகுத்த சிலை'' மீனாட்சியென்று பெருங்கவிக்கோ பாடியிருக்கும் இக்கவிவாக்கியங்கள் நம் அகக்கண் முன்னே மதுரை மீனாட்சி அன்னையையும் அமெரிக்க மீனாட்சி அன்னையையும் எழுந்தருளச் செய்து, காட்டிப் பேரானந்தம் எய்தச் செய்கின்றன. அன்னையர் இருவரும் ஒருவரேயாவர்.

உறுதிக்கும் உறுதிதரு உத்தமியர் மாத்தலைவி
ஓங்குகரம் குவிப்பார்தம் உள்ளொளியே!
உன்வாசல் தொழவைத்தே ஒண்டமிழ் பாடவைத்த
ஒளிக்கெல்லாம் ஒளிசெய்யும் ஒளிஒளியே!

வறுமையும் சிறுமையும் வாராதே காப்பளே!
வையகத்து மெய்யியலின் கையமுதே
வரலாற்றின் வரலாறே! வாகைமுடிசூடு தவமே!
மன்னுவர லாறுபடை படைப்புயிர்ப்பே!

இறுதிக்கும் இறுதிதந் தேஇறும் பூதே எய்துவிக்கும்
இருந்தமிழே! இயற்கையாம் இன்பமகளே!
ஏதொன்றும் யாதொன்றும் தீதொன்றும் வாராதே
எண்ணத்தின் எண்ணமாம் என்னவளே!

பொறுமைக்கும் பொறுமையாய்ப் புகழ்பூத்த நாயகியே!
பொன்னூசல் ஆடி அருளே!
பொதுமைமலர் உரிமைவளர் பொதுமைநெறி நாட்டவளே
பொன்னூசல் ஆடி அருளே! 10



*10. மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழின் நூறாவது பாடலான இப்பாடல் மிக மிக அருமையாக, அற்புதமாக அமைந்துள்ளது.*

உறுதிக்கும் உறுதி தருபவளே! உத்தமியர்களின் உயர்ந்த தலைவியானவளே!

சிரங்குவிப்பவர்களின், கரங்குவிப்பவர்களின் ஓங்கும் உள்ளப் பேரொளியே!

அம்மையே, உன் திருக்கோயில் வாசல் நின்று தொழவைத்த உன்மீது ஒண்டமிழ் பாடவைத்தவளே!அதாவது பிள்ளைத்தமிழ் பாடவைத்தவளே! ஓங்கார ஒளிக்கெல்லாம் ஒளியளிக்கும் பேரொளியானவளே!

வறுமையும் சிறுமையும் வராமல் காத்தருள்பவளே!
வையகத்து மெய்ஞ்ஞான இயலின் கையமுதானவளே!
வரலாற்றுக்கெல்லாம் வரலாறாக அமைந்தவளே!

வெற்றிவாகை சூடியவளே! ''முடிசூடிவளர்ந்தாள் முத்தமிழ் அன்னை'' என்ற புகழுக்கு முற்றிலும் பொருத்தம் ஆனவளே!

நிலைத்த வரலாறு படைத்தவளே! படைப்பின் உயிர்ப்பே!

எவ்வொருபடைப்பின் இறுதிக்கும் இறுதியானவளே! இறும்பூது எய்துவிக்கும் இருந்தமிழ் விருந்தானவளே!

இயற்கையாகவுள்ள இன்பமாமகளே!

ஏதொன்றும்யாதென்றும் தீதொன்றும் வாராமல் அடியவர்களைக் காக்கும் எண்ணம் நிறைந்தவளே! எண்ணத்தின் எண்ணமான என்னவளே! என் அம்மையே!

பொறுமைக்கும் பொறுமையானவளே! புகழ்பூத்தவளே! ''நாயகி பொன்னூசல் ஆடி அருளே!''

பொதுமையும் புதுமையும் உரிமையும் பொலிகின்ற நெறியுடைய ''நாட்டாளே பொன்னூசல் ஆடி அருளே!''

இவ்வாறு பாடி இனிது நிறைவு செய்கிறார் பெருங்கவிக்கோ. பாடுவதும் பாடவைப்பதும் பராசக்தி அன்னை மீனாட்சியின் பேரருளே இக்கூடன் நகர் அருள் மிகு மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ் பாடுவதற்குப் பெருங்கவிக் கோவிற்குப் பெருந்துணைநின்றது அன்னையின் பேரருளே. பிள்ளைத்தமிழின் நூறாவது கடைசிப் பாடலைப் பக்தியுடன் பாடினால் வருத்தும் வறுமை வராது. அறிஞரின் அவையில் சிறுமை எவ்வகையிலும் வராது. இது திண்ணமென்று இப்பாடல் மூலம் மிக உறுதியாகக் கூறுகிறார் பெருங்கவிக்கோ. பெருங்கவிக் கோவின் பிள்ளைத்தமிழ் முற்றும் பாடிப் பெருந்தேவி மீனாட்சியின் பேரருளைப் பெற்றுப் பிறவிபெற்ற பயனை அடைய விழைவது மாந்தர் கடனாகும்.

## குறிப்புகள்

Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை